REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 ஜனவரி 21 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

89 1932 - 2021

வரு. 90 இல. 18 | Friday 21,January, 2022 | 20பக்கங்கள் | 30/-

பூஜிதவுக்கு எதிரான விசாரணைகள் நிறைவு

பெப்.18இல் தீர்ப்பு வழங்கப்படும்

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித ஜயசுந்தர தமது கடமைகளை அலட்சியப்படுத்தியமை குறித்த வழக்கின் சாட்சிய விசாரணைகளை கொழும்பு 06

தரம் 5 புலமைப்பரிசில்:

கொவிட் தொற்றுள்ள மாணவர்களுக்கு விசேட நிலையங்கள்

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில், கொவிட்19 தொற்றுக்குள்ளாகியுள்ள பரீட்சார்த்திகளுக்கு விசேட நிலையமொன்றில் 06

விமான எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லை

இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக்க தெரிவிப்பு

எரிசக்தி துறையில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி, ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் அல்லது விமான சேவைகளுக்கு எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாதென விமான போக்குவரத்து மற்றும் முதலீட்டு வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க 06

கொழும்பு, பிலவர் ரோட்டில் அமைந்துள்ள "சிறிமதீபாய" பிரதமர் அலுவலகம், புனரமைக்கப்பட்ட நிலையில் நேற்று (20) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரினால் திறந்து வைக்கப்பட்டது. நினைவுக் கல்வெட்டை திரைநீக்கம் செய்த ஜனாதிபதி பின்னர் அடையாள ரீதியாக கடமைகளை ஆரம்பித்து வைத்தார்.

கொள்கை வட்டி விகிதங்களை உயர்த்தியது மத்திய வங்கி

நாணய சபையின் தீர்மானம் அறிவிப்பு 03

முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களில் முன்னேற்றகர நிலை;

இலங்கையின் மனித உரிமைகள் குறித்து பிரித்தானியா பாராட்டு

ஜனாதிபதியை சந்தித்த UK தெற்காசிய அமைச்சர் கருத்து

UKயிலுள்ள புலம்பெயர் தமிழ் சமூகத்துடன் கலந்துரையாட சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுப்பு

மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் மிக முன்னேற்றகரமாக உள்ளதாக, ஐக்கிய இராச்சியத்தின் தெற்காசியா மற்றும் பொதுநலவாய அமைப்புக்கான அமைச்சர் தாரிக் அஹமட் பிரபு (Lord Tariq Ahmad) தெரிவித்தார்.

அதனை மேலும் வலுப்படுத்துவதற்கு, நடைமுறை மற்றும் இலக்குகளை அடையக்கூடிய அணுகுமுறைகளுடன் முன்னோக்கிச் செல்வதன் மூலம் இலங்கையிலுள்ள அனைத்து மனித உரிமை பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியுமென்றும் 06

மருந்து, மருத்துவர் பற்றாக்குறை

தோட்ட வைத்தியசாலைகள் எதிர்நோக்கும் சவால்கள்

கெஹலியவுடன் ஜீவன் குழுவினர் பேச்சு

பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளில் மருத்துவர், மருந்து பற்றாக்குறை மற்றும் சுகாதாரத்துறை எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நேற்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுடன் விரிவாக கலந்துரையாடியுள்ளது.

அத்தோடு, விரைவில் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சுக்கும் சுகாதார அமைச்சுக்குமிடையில் 06

வீண் விமர்சனங்களை விடுத்து அரசுக்கு ஒத்துழைப்பதே இன்றைய தேவை

அமைச்சர் மஹிந்த அமரவீர 03

உலகை மீண்டும் உலுக்கிவரும் கொரோனா வைரஸ் திரிபுகள்!

தடுப்பூசிகளை ஏற்றுமாறு ஐ.நா செயலாளர் அறைகூவல்

கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை என்றால், மீண்டும் ஒரு கொரோனா திரிபு ஏற்படும் என ஐ.நா. பொதுச் செயலாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவி, பெரும் 06

பாகிஸ்தான், இந்தோனேசியா நாடுகளிலிருந்து

ஆறு இலட்சம் சீமெந்து மூடைகள் இரு கப்பல்களில் நாட்டுக்கு!

சீமெந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வு

சீமெந்து தட்டுப்பாட்டுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதியின் பின்னர் தீர்வு கிடைக்க பெறும் என சீமெந்து இறக்குமதி மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். 06

பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கான

புதிய குழு உறுப்பினர்கள் சபாநாயகரால் அறிவிப்பு

சபை நிருபர்கள்

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 115 இன் ஏற்பாடுகள் மற்றும் பாராளுமன்றத்தில் நேற்று (20) நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கமைய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களை சபாநாயகர் மஹிந்த யாப்பா 06

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்:

சரத் வீரசேகரவுக்கு கொரோனா உறுதி

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு கொவிட் தொற்று இருப்பது நேற்று (20) காலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவருக்கு 06

பொருளாதார பிரச்சினைக்கு அரசாங்கத்தின் தீர்வு என்ன?

சபையில் சஜித் பிரேமதாச கேள்வி

லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார பிரச்சினைக்கு அரசாங்கம் மேற்கொள்ளப் போகும் தீர்வு என்ன என்பது தொடர்பில் வெளிப்படுத்தவேண்டும். கடன் பெற்றுக் கொண்ட நாடுகளுடன் இருதரப்பினரும் கலந்துரையாடி எமது 06

அர்த்தமற்ற கூச்சல்களை கைவிட்டு

அரசுடன் இணைந்து மக்கள் பணியாற்ற முன்வாருங்கள்

வடக்கு, கிழக்கு எம்பிக்களுக்கு டக்ளஸ் அழைப்பு

அர்த்தமற்ற கூச்சல்களை கைவிட்டு தமிழ் மக்களின் வாழ்வில் சுபீட்சத்தை தோற்றுவிக்க வடக்கு கிழக்கின் மக்கள் பிரதிநிதிகள் அரசாங்கத்துடன் இணைய வேண்டும் என பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பகிரங்க அழைப்பு 06

மத்திய அதிவேக நெடுஞ்சாலையில்

மூன்று தினங்களில் ஒரு கோடி வருமானம்

குருணாகல், அத்துகல்புர நுழைவாயிலினூடாக முதல் 03 நாட்களில் 50,000 வாகனங்கள் பயணித்துள்ளதுடன் இதன் மூலம் ஒருகோடி ரூபாவுக்கு மேல் வருமானம் கிடைத்துள்ளதாக 06

அரச ஊழியரது ஓய்வு வயது:

65 வயதாக உயர்த்திய வர்த்தமானி வெளியானது

அரசாங்க ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 65 ஆக உயர்த்தியதற்கான வர்த்தமானி அறிவிப்பு 06

நாடு சீரான பாதையில் பயணிக்க

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது அவசியம்

சபையில் ஸ்ரீதரன் MP வலியுறுத்து

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

பொருளாதார நெருக்கடி நிவர்த்தி செய்யப்பட்டு நாடு சீரான பாதையில் பயணிக்க வேண்டுமானால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியது 06

ரூ. 40 மில். பெறுமதியான

வெளிநாட்டு நாணயங்களை கடத்த முயன்ற ஐவர் கைது

டுபாய்க்கு செல்கையில் விமான நிலையத்தில் அதிரடி

இலங்கையிலிருந்து வெளிநாட்டு நாணயக் கடத்தலில் ஈடுபட்ட ஐவரை இலங்கை சுங்கப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இலங்கை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் 06

வெள்ளை வான் ஊடக சந்திப்பு:

ராஜிதவுக்கு எதிரான வழக்கு மார்ச் 15க்கு ஒத்திவைப்பு

சாட்சியங்களை விசாரிக்க தீர்மானம்

கடந்த ஆட்சிக் காலத்தில் பெரும் அதிர்வலைகளையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்திய வெள்ளை வான் ஊடக சந்திப்பு தொடர்பான 06

விக்கல் வீராச்சாமி

உங்க தலைவர் என்ன கப்பல் கவுண்ட மாதிரி சோகமா இருக்கிறார், கூட்டணிக்குள்ள பிளவு எண்டது உண்மையோ....

நீங்க வேற, அது அவர் தாங்குவார், அவருக்கு பேஸ்புக்ல வாற லைக்குகள் கமெண்டுகள் இப்போ குறைஞ்சு போச்சாம், அதுதான் சோகம்...!!!

பன்முகத்தன்மையுடைய பங்காளித்துவத்தை இலங்கை, இங்கிலாந்து ஏற்பு

வெளிநாட்டமைச்சர் மற்றும் தெற்காசியாவிற்கான பிரித்தானிய அமைச்சர் அஹ்மத் பிரபு ஆகியோருக்கிடையிலான சந்திப்பின் போது, பன்முகத்தன்மையுடைய பங்காளித்துவத்தை இலங்கை மற்றும் இங்கிலாந்து ஏற்றுக் கொண்டுள்ளது.

ஜனநாயகப் பாரம்பரியங்கள் மற்றும் வரலாற்று உறவுகளின் மீது தாபிக்கப்பட்டு, இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியம் அனுபவித்த 'தனித்துவமான, பன்முகத்தன்மையுடைய பங்காளித்துவத்தை' வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் சிறப்பித்துக் காட்டினார். பிரிட்டனின் தெற்காசியா, ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய இராஜாங்க அமைச்சரான விம்பிள்டன் பிரபு தாரிக் அஹ்மத்துடன் வெளிநாட்டமைச்சில் (18) நடைபெற்ற சந்திப்பில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உணர்வுகளை மறுபரிசீலனை செய்த அஹ்மத் பிரபு, ஒத்துழைப்புக்கான உத்வேகத்தை வழங்கும் கூட்டாண்மையின் நிலையான தன்மையை ஒப்புக்கொண்டார்.

'உலகளாவிய பிரிட்டன்' என்ற ஐக்கிய இராச்சியத்தின் நோக்கின் பின்னணியில் இருதரப்பு உறவுகளை ஆழப்படுத்துவதற்கான வாய்ப்பை ஒப்புக்கொண்ட இரு தரப்பினரும், அரசியல் உறவுகள், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா, இந்து சமுத்திரத்திலான ஒத்துழைப்பு, பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு, காலநிலை மாற்றம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, கல்வி மற்றும் ஸ்டெம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் ஆர்வத்தை வெளிப்படுத்தினர். பரஸ்பர நலன் சார்ந்த விடயங்கள் குறித்து 2021 அக்டோபரில் லண்டனில் இடம்பெற்ற பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் எலிசபெத் ட்ரஸுடனான தனது இருதரப்புச் சந்திப்பை அமைச்சர் பீரிஸ் நினைவு கூர்ந்தார்.

இரண்டு வெளிநாட்டு அமைச்சுகளுக்குமிடையே உத்தியோகபூர்வ அளவிலான ஆலோசனைகளைத் தொடங்குவதன் முக்கியத்துவத்தை இரு தரப்பினரும் சுட்டிக் காட்டினர். மக்களுக்கு இடையிலான தொடர்புகளின் வலிமையைக் கருத்தில் கொண்டு, தற்போதைய கூட்டாண்மைக்கு ஏற்ற வகையில் இலங்கையின் 75வது சுதந்திர தினத்தை நினைவுகூரும் வகையிலான கலந்துரையாடல்களும் இதன் போது மையப்படுத்தப்பட்டன.

நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல், சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள், பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அதன் சீர்திருத்தச் செயற்பாடுகள் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்கு சபை மற்றும் பொது நிறுவனங்கள் மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்துவதில் நிலையான அபிவிருத்தி இலக்கு 16 க்கான வழிநடத்தல் குழுவின் செயற்பாடுகள் ஆகியவற்றில் முன்மொழியப்பட்ட திருத்தங்களை வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ் அஹ்மத் பிரபுவிடம் விளக்கினார். அனைத்தையும் உள்ளடங்கிய வகையில், உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயன்முறை மற்றும் மனித உரிமைகள் பேரவை உட்பட ஐ.நா. அமைப்புடனான தொடர்ச்சியான ஆக்கப்பூர்வமான ஈடுபாடு ஆகியவற்றுக்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை அமைச்சர் பீரிஸ் மீண்டும் வலியுறுத்தினார்.

ஐக்கிய இராச்சியத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாக தடை செய்தமை உட்பட, பயங்கரவாத எதிர்ப்புத் துறையில் வழங்கப்பட்ட ஆதரவிற்காக அரசாங்கத்தின் ஆழ்ந்த பாராட்டுக்களை வெளிநாட்டு அமைச்சர் தெரிவித்தார்.

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பிரித்தானிய இலங்கை புலம்பெயர் சமூகத்தினர் ஐக்கிய இராச்சியத்தின் செழுமைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்ற தனித்துவமானதொரு சொத்தாவர் என இரு தரப்பினரும் அங்கீகரித்தனர். இது தொடர்பில், இலங்கையின் அபிவிருத்திக்கு சாதகமான பங்களிப்பை வழங்கும் ஐக்கியமானதொரு பொறிமுறையை உருவாக்குவதற்காக புலம்பெயர் உறவுகளை உள்ளடக்கிய அணுகுமுறையைப் பேண வேண்டியதன் அவசியத்தை வெளிநாட்டு அமைச்சர் எடுத்துக்காட்டினார்.

நவம்பர் 2021 இல் கிளாஸ்கோவில் ஐ.நா. காலநிலை மாற்ற மாநாட்டை (சி.ஓ.பி. 26) வெற்றிகரமாக நடாத்தியமைக்காக ஐக்கிய இராச்சியத்திற்கு வெளிநாட்டு அமைச்சர் இலங்கையின் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இலங்கையின் சி.ஓ.பி. 26 சார்ந்த அர்ப்பணிப்புக்களைப் பாராட்டிய பிரித்தானிய அமைச்சர், பின்தொடர்தல் நடவடிக்கைகள் மற்றும் பசுமை ஆற்றல் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதிலான தமது ஆர்வத்தை வெளிப்படுத்தினார். கொழும்பு மாநகரப் பகுதிக்குள் உயிரியல் பன்முகத்தன்மை கொண்ட ஈரநிலமான பெல்லன்விலஅத்திடிய சரணாலயத்தையும் பார்வையிட்ட அவர், கும்புக் (டெர்மினாலியா அர்ஜுனா) செடியை அங்கு நட்டு வைத்தார்.

உலக வர்த்தகத்தில் இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொண்டு, கூட்டாண்மையின் பொருளாதாரப் பரிமாணத்தில் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். இலங்கை ஐக்கிய இராச்சிய வர்த்தக சம்மேளனம் லண்டனில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டதை வரவேற்ற இரு தரப்பினரும், இன்னும் வலுவான வர்த்தக வணிக இணைப்புக்களை ஊக்குவித்தனர்.

பொதுநலவாயத்துடனான உறவுகளை புதிதாக நோக்குவதற்காகக் கிடைத்த வாய்ப்பை ஒப்புக்கொண்ட இரு தரப்பினரும், கிகாலி, ருவாண்டாவில் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரச தரைவர்கள் மாநாடு மற்றும் பர்மிங்ஹமில் 2022 இல் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டி ஆகியவற்றில் பங்கேற்பதற்கு எதிர்பார்த்தனர்.

இருதரப்பு ஒத்துழைப்பின் ஒரு முக்கிய மைல்கல்லான இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்திற்கும் இடையிலான சுகாதாரப் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் வெளிநாட்டு அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது. பிரித்தானியாவில் இலங்கைத் தாதிகள் மற்றும் ஏனைய சுகாதார சேவையாளர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் எஸ்.எச். முனசிங்க ஆகியோர் இலங்கை அரசாங்கத்தின் சார்பாகவும், அஹ்மத் பிரபு ஐக்கிய இராச்சிய அரசாங்கத்தின் சார்பாகவும் கைச்சாத்திட்டனர்.

பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் (பேராசிரியர்) ஜயநாத் கொலம்பகே மற்றும் வெளிநாட்டு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். அஹ்மத் பிரபுவுடன் இணைந்து இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் மற்றும் உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகளும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

நீர்ப்பாசனத் துறை அமைச்சின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'வாரி சௌபாக்கியா' பத்திரிகையின் வெளியீட்டு விழா லேக் ஹவுஸ் நிறுவனத்தில் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் (19) நடைபெற்றது. அதன் முதல் பிரதியை லேக்ஹவுஸ் தலைவரும் முகாமைத்துவ பணிப்பாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ. தயாரத்ன அமைச்சருக்கு வழங்கினார். 'வாரி சௌபாக்கியா' இணையத்தளமும் இங்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது. லேக் ஹவுஸ் பணிப்பாளர் சபை பணிப்பாளர்களும் அதிதிகளும் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

டயலொக் ஆசிஆட்டா மனுசத் தெரணவுடன் இணைந்து 100,000 க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு டேட்டா புலமைப்பரிசிலினை விரிவுபடுத்துகிறது

நெனதிரி டேட்டா புலமைப்பரிசில் திட்டத்தினூடாக நாடு முழுவதும் உள்ள பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்கள் ஆன்லைன் கற்றலை வீட்டிலிருந்தவாறே தொடர்ந்து முன்னெடுக்க தேவையான டேட்டாவை புலமைபரிசில் அடிப்படையில் பெறுகிறார்கள்

எந்தவொரு பிள்ளையும் கல்வியை தொடர்வதில் பின்தங்கியிருக்க கூடாது என்பதை உறுதிப்படுத்தும் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிலஸ்சி மனுசத் தெரணவுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் உள்ள 470 பாடசாலைகளில் உள்ள 103,478 மாணவர்கள் வீட்டிலிருந்து ஆன்லைனில் கல்வியினை தொடர்வதை உறுதிப்படுத்தும் வகையில் "நெனதிரி டேட்டா புலமைப்பரிசில்" திட்டத்தின் மூலம் வெற்றிகரமாக உதவியது.

இந்த ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட நெனதிரி டேட்டா புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம், 'டயலொக் ஆசிஆட்டா உடன் மனுசத் தெரண' திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாணவருக்கும் 3 மாதங்களுக்கு அவர்களின் கல்வி செயற்பாடுகளுக்காக 10GB டேட்டா வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய டயலொக் ஆசிஆட்டா பிலஸ்சியின் குழும தலைமை நிர்வாக அதிகாரி கபில விரசிங்ஹ, "தொற்றுநோயின் பின்னணியில், இந்த தகுதியுள்ள பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கு நிதி நிவாரணம் வழங்கும் அதே வேளையில், டிஜிட்டல் பிளவைக் குறைத்து எங்கள் தேசத்தை ஆதரிக்கக்கூடிய தரமையினையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். கோவிட்-19 பரவலை தொடர்ந்து கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்பை குறைக்கும் வகையில் டயலொக் நமது நாட்டின் பாடசாலை மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவதற்கான வளங்களை அவர்களுக்கு அளித்து ஒளிமயமான எதிர்காலத்தைத் தொடர வழிவகை செய்வதன் மூலம் அவர்களுக்கு ஆதரவளிப்பதற்காக உறுதிபூண்டுள்ளது"

நாடு முழுவதும் உள்ள மாணவர்களை அவர்களின் கல்வி முயற்சிகளுடன் ஆதரிக்கும் தொடர் முயற்சிகளில் இது டயலொக்கின் மற்றொரு முயற்சி. இந்த முயற்சிக்கு மேலதிகமாக, நெனச முன்னெடுப்பின் கீழ் பலவிதமான கல்வி தளங்களை டயலொக் வழங்குகிறது Nenasa TV, Nenasa Educational App, Nenasa Smart School மற்றும் கட்டணமில்லா Nenasa 1916 தொலைதூர உதவி அழைப்பு சேவை ஆகியன அடங்கும். டயலொக் மெரிட் புலமைப்பரிசில் திட்டங்கள் உயர்தர மாணவர்களின் உயர்கல்வியை ஆதரிக்கின்றன. இந்த முயற்சிக்கு மேலதிகமாக, டயலொக் தனது கல்விசார் பக்கேஜில் நெனச சிங்களம், நெனச தமிழ் மற்றும் குரு TV அலைவரிசைகளுக்கான இலவச அணுகலை டயலொக் டெலிவிஷன் மற்றும் VU App மூலம் நீட்டித்தது. மிக சமீபத்தில், 2021 உலக சிறுவர் தினத்தை கொண்டாடும் வகையில், நிறுவனம் நாடு முழுவதும் உள்ள 379 குழந்தைகள் மேம்பாட்டு மையங்களுக்கும் இலவச புரோட்பாண்ட் இணைப்பை வழங்கியது. மேலும், இ-தக்ஸலாவா, தேசிய கற்றல் உள்ளடக்க மேலாண்மை அமைப்பு (LCMS) / கற்றல் மேலாண்மை அமைப்பு (LMS) மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணையத்தின் அதிகாரத்திற்குப்பட்ட தேசிய பல்கலைக்கழகங்களின் அனைத்து உத்தியோகபூர்வ மின்-கற்றல் தளங்களுக்கும் எந்தவொரு டேட்டா கட்டணமும் இன்றி நிறுவனம் இலவச அணுகலை நீட்டித்தது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜனவரி 21 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

சுபஹ்	05.09
லுஹர்	12.23
அஸர்	03.45
மஃரிப்	06.16
இஷா	07.30

இன்றைய சுபதினம்

பிலவ வருடம் தை 8

ராகுகாலம்	பகல்	1.30	3.00வரை
சுபநேரம்	காலை	10.30	12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

இராசி பலன்கள்

மேஷம்	செலவு
ரிஷபம்	பாராட்டு
மிதுனம்	தனம்
கடகம்	போட்டி
சிம்மம்	கோபம்
கன்னி	முயற்சி
துலாம்	நன்மை
விருச்சிகம்	நிறைவு
தனுசு	வெற்றி
மகரம்	பொறுமை
கும்பம்	மறதி
மீனம்	சுகம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

தென்கொரிய சபாநாயகர் இலங்கை வருகை

உத்தியோகப்பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு தென்கொரிய சபாநாயகர் பான் பியோன் சேக், இலங்கை வந்தடைந்துள்ளார்.

சிங்கப்பூர் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தின் மூலம் தென்கொரிய சபாநாயகர் உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்று முன்தினமிரவு (19) நாட்டை வந்தடைந்தனர்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த தென்கொரிய சபாநாயகரை, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, சிவில் விமான சேவை இராஜாங்க அமைச்சர் டி.வி. ஷானக்க ஆகியோர் வரவேற்றனர். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் அழைப்பையேற்று தென்கொரிய சபாநாயகர் பான் பியோன் சேக் நாட்டுக்கு விஜயம்செய்துள்ளார்.

புனரமைக்கப்பட்ட சிறிமதிபாய மற்றும் அலரி மாளிகை, நுவரெலியா பிரதமர் இல்லம் ஆகியவற்றின் ஓவியங்களை கொண்ட 15 ரூபாய் மதிப்பிலான மூன்று நினைவு முத்திரைகள் நேற்று வெளியிடப்பட்டன. நினைவு முத்திரைகளை ஜனாதிபதி போட்டாபய ராஜபக்ஷவிடம் வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும வழங்கியபோது..

பங்களாதேஷ் கடற்படைத் தளபதியுடன் ஜெனரல் ஷவேந்திர சில்வா சந்திப்பு

நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு (19) இலங்கைக்கு வருகை தந்திருந்த பங்களாதேஷ் கடற்படைத் தளபதி அத்மிரல் எம். ஷஹீன் இக்பால், மரியாதை நிமித்தமாக பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவை இராணுவ தலைமையகத்தில் சந்தித்தார். இராணுவ தளபதியின் அலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது, தற்போதைய கடல்சார் பிரச்சினைகள், இரு நாடுகளுக்கும் பொதுவான விடயங்கள், உலக அளவிலாள மாற்றங்கள், கடற்படையின் செயற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கருத்துகளை பரிமாறிக்கொண்டனர்.

வீண் விமர்சனங்களை விடுத்து அரசுக்கு ஒத்துழைப்பதே இன்றைய தேவை

அமைச்சர் மஹிந்த அமரவீர

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

அனைத்து இன மக்களையும் இணைத்துக்கொண்டு நாட்டை கட்டியெழுப்புவதே ஜனாதிபதியின் நோக்கமாக உள்ளதாகவும் விமர்சனங்களை விடுத்து அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எல்லா காலத்திலும் விமர்சனங்களை மட்டுமே முன் வைப்பது எந்தவித பயன்களையும் தரப் போவதில்லை என குறிப்பிட்ட அவர், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நல்லவைகளை பாராட்டி குறைகளை சுட்டிக் காட்டுவது சிறந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம் பி ஸ்ரீதரனின் கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்: மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் வடக்கின் வசந்தம், கிழக்கின் வசந்தம்

06

கொள்கைப் பிரகடன உரை; இன்றும் விவாதம்

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை இன்று (21) மூன்றாவது நாளாகவும் நடத்த தீர்மானக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த 18ஆம் திகதி ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்த பின்னர் முன் வைத்த அரசாங்கத்தின் கொள்கைப்பிரகடன உரை தொடர்பில் ஜனவரி 19 மற்றும் 20ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட சபை ஒத்திவைப்பு விவாதத்தை இன்றும் (21) தொடர்ந்து நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம்

06

காத்தான்குடி, ஹம்பாந்தோட்டை, நுவரெலியா பகுதிகளில்

சாராவினால் பயிற்றுவிக்கப்பட்டு "பையத்" செய்யப்பட்ட 16 யுவதிகள்

புலனாய்வுப் பிரிவு விசாரணைகளில் தகவல்

உயிர்த்த ஞாயிறு தினதற்கொலை குண்டுத் தாக்குதல்களில் கட்டுவாபிட்டி தேவாலயத்தில் குண்டை வெடிக்கச் செய்த மொஹம்மது ஹஸ்தூனின் மனைவியான தற்போதும் மர்மமாக உள்ள சாரா ஜெஸ்மின் அல்லது புலஸ்தினி மகேந்திரனின் கீழேயே, பெண்களுக்கு ஆயுத பயிற்சி அளிக்கப்பட்டு இஸ்லாமிய தேசமொன்றுக்கான ' பையத் ' செய்து கொள்ளப்பட்டுள்ளதாக சி.ரி.ஐ.டி எனும் பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் சாராவின் கீழ் பயிற்சி பெற்று, இஸ்லாமிய தேசம் ஒன்றை உருவாக்க பையத் எனும் உறுதி மொழியை 16 பெண்கள் எடுத்துக் கொண்டுள்ளதாகவும் அவர்களில் 6 பேர், 2019 ஏப்ரல் 26 சாய்ந்தமருது தற்கொலை குண்டுவெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்துள்ளமை தெரிய வந்துள்ளதாகவும் சி.ரி.ஐ.டி கொழும்பு மேலதிக நீதிவான் சந்திம லியனகே முன்னிலையில் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் தெரிய வந்துள்ளது.

மீதமாக உள்ள 10 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் அனைவரும் கொழும்பு மேலதிக நீதிவான் சந்திம லியனகே முன்னிலையில் இரு வேறு சந்தர்ப்பங்களில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில்

06

அரசை பாதுகாப்பதோ கவிழ்ப்பதோ அன்றி

வீழ்ந்தவர்களை எழுப்புவது தான் தமக்குத் தேவை என்கிறார் ரணில்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

அரசாங்கத்தை பாதுகாக்கவோ அல்லது கவிழ்க்கவோ தாம் வரவில்லை எனவும் வீழ்ந்தவர்களை எழுப்புவது தான் தமக்குத் தேவை எனவும் முன்னாள் பிரதமர், பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அண்மையில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரை அந்நியச் செலாவணி நெருக்கடியை மட்டுமே சுட்டிக்காட்டியுள்ளது. வேறு எதுவும் பேசவில்லை.

நமது கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதம் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் அன்னியச் செலாவணியில் இருந்து 6 பில்லியன் டொலர்களை திருப்பிச் செலுத்த வேண்டும். சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதா, இல்லையா என்பது தொடர்பில் நிதியமைச்சர் இந்த சபையில் கூற வேண்டும். நம் நாட்டில் சுற்றுலாத்துறை, சிறு மத்திய நிர்மாணத்துறைகள் வீழ்ச்சி அடைந்துள்ளன. தொழில்களுக்காக வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதை ஏன் தள்ளிப்போடவில்லை என்றும் அரசிடம் கேட்கிறோம்.

எரிசக்தி, ஓய்வூதியம், தொழில் நுட்பம் போன்றவற்றுக்கு பணம் எங்கிருந்து கிடைக்கிறது என்பதை அரசாங்கம் கூற வேண்டும். இதற்கு குறுகிய, நடுத்தர

06

கல்வி அமைச்சர் அடுத்த வாரம் மட்டக்களப்பு விஜயம்

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் அழைப்பின் பேரில் கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தன எதிர்வரும் வியாழக்கிழமை 27ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம்செய்யவுள்ளார்.

அவரது வருகையின் போது இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் முயற்சியால் கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட கதிரவெளி விக்கினேஸ்வரா தேசிய பாடசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ள தொழினுட்ப பீடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

அத்தோடு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிழக்கு

06

கொள்கை வட்டி விகிதங்களை உயர்த்தியது மத்திய வங்கி

நாணய சபையின் தீர்மானம் அறிவிப்பு

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது கொள்கை வட்டி விகிதங்களை உயர்த்த தீர்மானித்துள்ளது.

இதன்படி, கொள்கை வட்டி விகிதம் 50 அடிப்படை புள்ளிகள் உயர்த்தப்பட்டுள்ளன. அந்த வகையில், மத்திய வங்கி நிலையான வைப்பு வசதி வீதத்தை 5.5% ஆகவும், நிலையான கடன் வசதி வீதத்தை 6.5% ஆகவும் அதிகரித்துள்ளது.

வழக்கமான கடன் வசதி விகிதத்துடன் தானாக சரி செய்யப்படும் போது வங்கி வட்டி விகிதம் 9.5% ஆக இருக்கும். சட்டப்பூர்வ கையிருப்பு விகிதத்தை மாற்றாமல் 4% ஆக வைத்திருக்கவும் நாணய வாரியம் முடிவு செய்துள்ளது. கொள்கை வட்டி விகிதங்களின் அதிகரிப்புக்கு ஏற்ப வங்கி கடன் விகிதங்கள் மற்றும் சேமிப்பு வட்டி விகிதங்கள் உயரும்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி:

இன்றைய அரசின் காலத்தில் மட்டுமே ஏற்பட்ட ஒன்றல்ல

புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் தயாசிறி

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

நாட்டை ஆட்சி செய்த எந்தவொரு ஜனாதிபதியும் தற்போதைய ஜனாதிபதி போன்று இத்தகைய பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டதில்லை என தெரிவித்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை இன்றைய அரசாங்கத்தினால் மட்டும் ஏற்படுத்தப்பட்டதல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் டொலருக்கான நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் எரிபொருள், சமையல் எரிவாயு, பால் மா உள்ளிட்ட பொருட்களுக்கு

06

தீ மிதித்த பெண் உயிரிழப்பு

கொழும்பு ஆமர் வீதியிலுள்ள ஆலயமொன்றின் வருடாந்த திருவிழாவில் இடம்பெற்ற தீமிதிப்பு நிகழ்வில் கலந்துகொண்டிருந்த இளம் பெண்ணொருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் 26 வயதுடைய தாயொருவரே தீக்காயங்களால் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் வாழைத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 26 வயதான அக்குருவிட்ட ஆராச்சிகே இரேஷா மதுரங்கனி என தெரிவித்த பொலிஸார், உயிரிழந்தவர் 10 வயது குழந்தையின் தாயார் எனவும் கூறியுள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி இரவு இடம்பெற்ற தீமிதிப்பில் பங்கேற்ற அந்தப் பெண்ணின் கால்களில் தீக்காயம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர். இந்த நிலையில்,

06

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	142.21	148.22
சிங்கப்பூர் டொலர்	146.96	151.68
06	157.70	163.61
ஸ்டேலிங் பவுன்ஸ்	269.26	277.71
யூரோ	224.95	233.80
சுவிஸ் பிராங்க்	215.60	223.27
ஜப்பான் யென்	1.7267	1.7917
அமெரிக்க டொலர்	198.50	202.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	533.24	கட்டார் ரியால்	55.21
குவைத் டினார்	664.92	சவூதி ரியால்	53.59
ஓமான் ரியால்	522.20	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	54.73

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் தை மாதம் 08ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஆகிறா பிறை 17

குறள் தரும் சிந்தனை

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து

காலம் கைகூடும் வரையில் கொக்கு போல் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். காலம் வாய்ப்பாகக் கிடைத்ததும் அது குறி தவறாமல் குத்துவது போல் செய்து முடிக்க வேண்டும்.

உணவு நெருக்கடி ஏற்படுமென பரப்பப்படும் வீண்வதந்திகள்!

இலங்கை பண்டைய காலம் முதல் விவசாய பாரம்பரிய நாடாக விளங்கி வருகின்றது. வரலாற்றுத் தகவல்களின்படி, மன்னராட்சிக் காலம் முதல் இந்நாட்டின் பொருளாதார முதுகெலும்பாக விவசாயமே திகழ்ந்து வருகின்றது. இந்நாட்டின் நீர்ப்பாசன நாகரிகமே இதற்கு நல்ல சான்றாகும்.

அன்றைய மன்னர்கள் நெற்செய்கைக்கு முன்னுரிமை அளித்து நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதன் பொருட்டு அவர்கள் நீர்ப்பாசனக் குளங்களை அமைத்தனர். அந்தக் குளங்களில்தான் இந்நாட்டின் நெற்செய்கை பெரும்பாலும் இன்றுவரையும் தங்கியுள்ளது.

அதேநேரம் விவசாய உணவு உற்பத்திக்குத் தேவையான வளங்களையும் சீதோஷண நிலையையும் இந்நாடு கொண்டிருக்கின்றது. அதன் பயனாக எல்லா விதமான உணவுப் பயிர்ச்செய்கைக்கும் ஏற்ற நாடாக மாத்திரமல்லாமல், விவசாய உணவு உற்பத்தி தொடர்பில் நீண்ட அனுபவத்தைக் கொண்டுள்ள விவசாயிகள் நிறையவே வாழும் நாடாகவும் விளங்குகிறது இலங்கை. இந்நாட்டின் சனத்தொகையில் சுமார் 30 வீதத்தினர் விவசாயத் துறையில் பணியாற்றுபவர்களாக உள்ளனர். இத்துறையானது, இந்நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு 7.4 வீதப் பங்களிப்பையும் நல்கி வருகின்றது.

இவ்வாறான நிலையில் இந்நாட்டில் எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் உணவு நெருக்கடி ஏற்படும் எனச் சிலர் குறிப்பிடுகின்றனர். அது முற்றிலும் ஒரு வதந்தியே அன்றி உண்மையாக அமைய முடியாது. தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு மாத்திரமுரியதல்ல. இவ்வாறான நெருக்கடியை உலகில் எல்லா நாடுகளுமே எதிர்கொண்டுள்ளன. 2019 இறுதிப் பகுதியில் தோற்றம் பெற்று உலகலாவிய பெருந்தொற்றாக விளங்கும் கொவிட் 19 தொற்றின் தாக்கத்தின் விளைவாகவே இப்பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. இது வெளிப்படையான உண்மையாகும்.

அந்த வகையில் இப்பொருளாதார நெருக்கடியின் சவாலை வெற்றி கொள்வதற்கான எல்லா வித நடவடிக்கைகளையும் இலங்கை முன்னெடுத்து இருக்கின்றது. குறிப்பாக இந்நெருக்கடியின் தாக்கங்கள் மக்களைப் பாதிப்பதைத் தவிர்க்கும் வகையில் பல நிவாரணத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன.

அதேநேரம் பசுமை விவசாயத் திட்டம் நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் பரந்த அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் பொருட்டு பலவித ஊக்குவிப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் இயற்கைப் பசளை உற்பத்தி, பாவனை அடங்கலாக பசுமை விவசாயச் செய்கையின் போது பாதிப்புகள் ஏற்படுமாயின் அவற்றுக்கு நிவாரணங்கள் அளிப்பதற்கான திட்டங்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

இதேவேளை, வீட்டுத் தோட்ட செய்கையை ஊக்குவிக்கவும் பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் பொருட்டு ரூபா 5000.00 கொடுப்பனவு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு உள்நாட்டு விவசாய உணவு உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டு வருகின்ற சூழலில், மியன்மார் நாட்டிலிருந்து ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான அரசி_ இறப்பர் ஒப்பந்தத்திற்கு இவ்வருடம் 75 வருடங்கள் நிறைவடைகின்றது. இதன் நிமித்தம் 10 இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை இலங்கைக்கு நன்கொடையாக வழங்க சீனா தீர்மானித்துள்ளது. இந்த அரிசித் தொகை மார்ச் மாதமாகும் போது இலங்கையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறான சூழலில், அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்கான செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சரவை இணைப் பேச்சாளர் டொக்டர் ரமேஷ் பத்திரன, 'நாட்டில் உணவு நெருக்கடி தொடர்பில் தேவையில்லாத அச்சமோ, சந்தேகமோ ஏற்படுத்திக் கொள்ளத் தேவை இல்லை. அவ்வாறான நிலைமை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன' என்று தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 தொற்றின் விளைவான பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தவிர்க்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் நாட்டில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் உணவு நெருக்கடி ஏற்படும் என்பது எண்ணிப் பார்க்க முடியாத விடயமே. ஆகவே அவ்வாறான நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் அரசாங்கம் முன்கூட்டியே முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு பங்களிப்பதும் ஒத்துழைப்பு நல்குவதும் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். அதுவே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

கண்டியில் பயணிகள் இளைப்பாறவும், வாகன தரிப்பிடத்துக்கும் பூங்காக்கள்

கண்டி மாநகரின் பிரதான வாகனக் கட்டடத் தொகுதியின் மேல் தளத்தில் நிர்மாணிக்கப்பட்ட 'டொம்லின் பூங்கா' மற்றும் 'சஹஸ் பூங்கா ' ஆகியன மக்கள் பயன்பாட்டுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. கண்டிக்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தப் பூங்காக்களை வைபவரீதியாக திறந்து வைத்தார்.

இவற்றை உலக வங்கியின் நிதியுதவியுடன் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் மூலோபாய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் ஊடாக கண்டி மாநகர சபை நிர்மாணித்துள்ளது.டொம்லின் பூங்காவின் நினைவுப் பலகையை பிரதமர் திறந்து வைத்தார்.

மேலும் கண்டி ஸ்ரீ தலதா மாளிகையை தரிசிக்க வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி அவர்கள் இளைப்பாறுவதற்கு அறைகள், சுகாதார வசதிகள் மற்றும் 16 விற்பனை நிலையங்களைக்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திறந்துவைப்பு

கொண்ட டொம்லின் பூங்காவை நிர்மாணிப்பதற்காக உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் 374 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

அதுபோன்று சஹஸ் உயன 'நகர்ப்புற வாகன நிறுத்தப் பூங்கா' பகுதிக்கு விஜயம் செய்த பிரதமர் அதன் நினைவுப் பலகையை திறந்து வைத்தார். திறந்தவெளி அரங்கு, கைவினைப் பொருட்கள் கட்டடத் தொகுதி, உணவருந்தும் பகுதி மற்றும் குழந்தைகள் பூங்கா ஆகியவற்றைக் கொண்ட இந்தப் பூங்காவில் ஓய்வெடுக்கும் பகுதியும் அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவிற்கு உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் 531 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

மல்வத்து பீடத்தின் அனுநாயக்கர் நியங்கொட விஜிதசிறி தேரர் மற்றும் அஸ்கிரி பீடத்தின் அனுநாயக்கர் வெண்டறுவே உபாலி தேரர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே, இராஜாங்க அமைச்சர்களான திலும் அமுனுகம, லொஹான் ரத்வத்தே, பாராளுமன்ற உறுப்பினர்களான வசந்த யாப்பா பண்டார, குணதிலக ராஜபக்ஷ, உதயன கிரிந்திகொட, கண்டி மேயர் கேசர சேனாநாயக்க, பிரதி மேயர் இலாஹி ஆபிதீன், கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் உதய நாணயக்கார, பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மத்திய மாகாண பணிப்பாளர் பீ.குணதிலக உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

"ஜனாதிபதி எமது நாட்டை சுபீட்சத்தை நோக்கி கொண்டு செல்வதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். ஜனாதிபதியும் பிரதமரும் இந்நாட்டுக்கு சுபீட்சத்தை ஏற்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

நாம் முதலில் முதலில் நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும். அதற்கடுத்தாற் போல் எமது கடமை, எமது குடும்பம் மற்றும் எம்மைப் பற்றி பற்றி சிந்திக்க வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக நம் நாட்டில் பெரும்பாலான மக்கள் அதனை தலைக்கீழாகவே பின்பற்றுகிறார்கள். முதலில் தங்களைப் பற்றியும், பின்னர் குடும்பத்தைப் பற்றி, அதன் பின்னர் கடமையைப் பற்றி, இறுதியாக நாட்டைப் பற்றி சிந்திக்கிறார்கள். எனவே, அந்தப் பாதையை மாற்றுவதற்கான நாட்டின் தலைமை இப்போது எங்களிடம் உள்ளது. நாம் நமது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். நாட்டில் நாம் எதிர்கொள்ளும் சவால்களை புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கு மட்டும் பொறுப்புகள் வழங்கப்படுமானால் இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்புவது கடினமாகும். எனவே, குடிமக்களாகிய நாம் அதற்கு ஆதரவளிக்க வேண்டும். ஐந்து

வருடங்கள் ஆட்சியில் இருக்கும் ஒரு அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பது உண்மையில் முக்கியமானது" என அனுநாயக்க தேரர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

"தலதா மாளிகைக்கு தரிசனம் செய்ய வரும் மக்களும் பக்தர்களும் அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு கண்டியில் இடமில்லை. இத்திட்டத்தின் மூலம் வெகு தொலைவில் இருந்து பேருந்தில் தரிசனம் செய்ய வரும் பக்தர்கள், தம்மை தூய்மைப் படுத்திக் கொள்வதற்கும், பூஜைக்கு தயார் செய்து கொள்வதற்கும், வழிபாட்டிற்கு தயாராவதற்கும் நான்கு மாடி கட்டடம் இத்திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது"என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம உரையாற்றுகையில் தெரிவித்தார்.

"30 வருட கால பயங்கரவாதத்தை ஒழித்து இந்த நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டைக் காத்த துணிச்சல்மிக்க தலைவராக பிரதமர் இலங்கை வரலாற்றில் இடம்பெறுகிறார். பிரதமர் மக்களால் மதிக்கப்படும் மக்கள் தலைவர் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். பிரதமரின் அரசியல் வாழ்க்கைக்கு இன்றுடன் 52 ஆண்டுகள் பூர்த்தியாகிறது. கொவிட் தொற்றுநோயால் நாம் அனைவரும் பல சவால்களை எதிர்நோக்கி வரும் இவ்வேளையில் இந்த அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக செய்து முடிக்க கிடைத்தமையினால் நாமும் கண்டி மக்களும் பாக்கியம் செய்தவர்களாவர். இதற்காக கண்டி மாநகர சபையின் சார்பில் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்" என கண்டி மேயர் கேசர சேனாநாயக்க தெரிவித்தார்.

எம்.ஏ.அமீனுல்லா...✍

ஜப்பானிய தூதுவருடன் அமைச்சர் சரத் வீரசேகர நடத்திய சந்திப்பு

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல்(ஓய்வு பெற்ற) கலாநிதி சரத் வீரசேகர ஆகியோருக்கிடையிலான சிநேகபூர்வ சந்திப்பொன்று பத்தரமுல்லை சுகுறுபாயவிலுள்ள அமைச்சின் அலுவலகத்தில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றது.

அமைச்சுக்குச் சென்றிருந்த ஜப்பானிய தூதுவரை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் வரவேற்றார். கடந்த வருடம் நவம்பரில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவராக நியமிக்கப்பட்ட மிசுகோஷி ஹிடேகிக்கு அமைச்சர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

பன்னெடும் காலமாக ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவி வருகின்ற வரலாற்று முக்கியத்துமிக்க நட்புறவை மேலும் மேம்படுத்துவது குறித்து அவர்கள் இருவரும் தங்களுக்கிடையே கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

இலங்கைக்கும் ஜப்பானுக்குமிடையில் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக விடயங்களை மேம்படுத்துவது குறித்தும்

இக்கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் இரு நாடுகளுக்குமிடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது. சமூக பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சி தொடர்பான பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

றிசாத் ஏ. காதர்...✍

நரேந்திர மோடி மீண்டும் பிரதமராகுவதே இந்திய மக்களில் 72 வீதத்தினரின் விருப்பம்

பிரதமர் நரேந்திர மோடியே மீண்டும் பிரதமராக வர வேண்டுமென்று 72 சதவீதமான இந்தியர்கள் விரும்புவதாக கருத்துக் கணிப்பொன்று தெரிவிக்கின்றது. ஜீ. டி.வி நடத்திய கருத்துக்கணிப்பில் இந்த உண்மை தெரியவந்துள்ளது. 72% இந்தியர்களின் விருப்பம் மோடி என்பதாகவே உள்ளது.

உத்தரப் பிரதேச தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்காக ஜீ.நியூஸ் ஊடகம் மிகப் பெரிய அளவில் கருத்துக்கணிப்பை நடத்தியது. அதில் 2024 இல் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நரேந்திர மோடி மீண்டும் பிரதமராக வர வேண்டும் என 72% பேர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

உத்தரப் பிரதேசம், பஞ்சாப், கோவா, மணிப்பூர், உத்தரகாண்ட் உள்ளிட்ட மாநிலங்களுக்கான சட்டசபைத் தேர்தல் அடுத்த மாதம் நடைபெறவிருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் 403 தொகுதிகள் இருக்கின்றன. உத்தரப்பிரதேசத்

தில் சட்டசபை தேர்தலுக்கான வாக்குப் பதிவு அடுத்த மாதம் 10ம் திகதி தொடங்கி மார்ச் 7 வரை ஏழு கட்டங்களாக நடைபெறவுள்ளது.

உத்தர பிரதேச தேர்தலைப் பொறுத்தவரை பா.ஜ.க மற்றும் சமாஜ்வாதி கட்சிகளில் ஒன்றுதான் ஆட்சியைப் பிடிக்கும் என்று தெரிய வந்துள்ளது. பா.ஜ.க மீண்டும் ஆட்சியைத் தக்கவைக்க போராடுகிறது. அகிலேஷ் யாதவ் பா.ஜ.கவுக்கு சரிசமமாக போட்டியைக் கொடுக்கிறார். உத்தர பிரதேச மாநிலத்துக்கான தேர்தல் கருத்துக் கணிப்புகளை பல நிறுவனங்கள் நடத்தி, அந்த முடிவுகளை வெளியிட்டு வருகின்றன. ஏ.பி.பி சிவோட்டர், இந்தியா டி.வி, ரிபப்ளிக் டி.வி கருத்து கணிப்புகளில் பா.ஜ.க 220 இற்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறும் என்றும், சமாஜ்வாதி கட்சி 160 இற்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறும் என்றும் கருத்து கணிப்புகள் வந்துள்ளன.

இந்நிலையில், உத்தரப்பிரதேச தேர்தல் குறித்து கருத்துக்கணிப்பை ஜீ. நியூஸ் வெளியிட்டிருக்கிறது. டிசைன் பொக்ஸ் என்ற நிறுவனத்துடன் இணைந்து, உத்தரப் பிரதேசத்தில் அடுத்து யார் ஆட்சியைப் பிடிப்பார்கள் என்ற கருத்துக் கணிப்பை மிகப் பெரிய அளவில் நடத்தி இருக்கிறது ஜீ நியூஸ். கருத்துக்கணிப்பு முடிவுகளை தற்போது வெளியிட்டிருக்கிறது ஜீ நியூஸ்.

உத்தரப் பிரதேசத்தின் அடுத்த முதல்வராக பா.ஜ.கவின் யோகி ஆதித்யநாத் வருவார் என 47% பேரும், சமாஜ்வாதி கட்சியின் அகிலேஷ் யாதவுக்கு 35% பேரும், மாயாவதிக்கு 9%, பிரியங்கா காந்திக்கு 5% பேரும், மற்றவர்களுக்கு 4% பேரும் அடுத்த முதல்வர் கருத்துக் கணிப்பில் வாக்களித்திருக்கிறார்கள்.

2022 உத்தரப் பிரதேச தேர்தலில் பா.ஜ.க ஆட்சியைப் பிடிக்கும் என்றும், யோகி ஆதித்யநாத் மீண்டும் முதல்வர் ஆவார் என்றும் இந்தக் கருத்துக்கணிப்பு முடிவு தெரிவிக்கிறது. அதோடு, 2024 நடக்கவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் நரேந்திர மோடி மீண்டும் பிரதமராக வர வேண்டும் என 72% இந்தியர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்நகருக்கு மூன்று மணி நேரத்தில் பயணம்

எதிர்காலத்தில் வரவிருக்கும் வாய்ப்பு

மத்திய அதிவேக பாதை திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த வாரம் திறந்துவைப்பு

கொழும்பிலிருந்து மூன்று மணித்தியாலங்களில் யாழ்ப்பாணத்துக்கும், ஒன்றரை மணித்தியாலத்தில் தம்புள்ளைக்கும், ஒரு மணித்தியாலத்தில் கண்டிக்கும் செல்லக் கூடிய மத்திய அதிவேக பாதையின் இரண்டாவது பகுதியாக மீரிகம_ குருநாகல் அதிவேகப் பாதை கடந்த சனிக்கிழமையன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

தம்புள்ளையிலிருந்து மரக்கறிகள், பழங்கள் என்பவற்றை கொழும்புக்கு கொண்டு வருவதற்கு 5 மணித்தியாலம் தேவைப்பட்டது. அப்பிரச்சினைக்குத் தீர்வாக 2012 ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவின் கருத்துக்கு அமைய இந்த மத்திய அதிவேகப் பாதை நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

மத்திய அதிவேகப் பாதை முழுமையாக பூர்த்தி அடைந்த பின்னர் அம்பாந்தோட்டையில் இருந்து நான்கு மணித்தியாலத்தில் தம்புள்ளைக்கும், அம்பாந்தோட்டையில் இருந்து மூன்றரை மணித்தியாலங்களில் கண்டிக்கும் எவ்வித தடையும் இன்றி தொடர்ச்சியாக பயணிக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். அத்துடன் வடக்கு அதிவேகப் பாதை இதனுடன் இணைக்கப்பட்டால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு 3 மணித்தியாலங்களில் பயணிக்க முடியும் என்று பெருந்தெருக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் ரஞ்சித் பிரேமசிறி இதுபற்றிக் கூறுகையில் "ஆரம்ப திட்டத்தின்படி 'வடக்கு அதிவேக பாதை திட்டம்' என பெயரிடப்பட்டு செயல்படுத்தப்படும் இத்திட்டம் இலங்கை அரசால் முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாக அறிந்து கொள்ளப்பட்டு அதன்படி 'மத்திய அதிவேக பாதை திட்டம்' எனப் பெயரிடப்பட்டு செயல்படுத்தப்படுகின்றது" என்றார்.

தேசிய பெருந்தெருக்கள் திட்டத்துக்கு அமைய இத்திட்டத்தின் ஆரம்ப கட்டமாக மேல் மாகாணத்தின் கொழும்பு நகரத்திலிருந்து மத்திய மாகாணத்தின் தலைநகரான கண்டிக்கு மற்றும் புராதன முக்கியத்துவமும் பொருளாதார முக்கியத்துவமும் வாய்ந்த தம்புள்ளை நகருக்கு பயணிப்பதற்கான வசதியை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் இடையில் மத்திய நிலையங்களையுடைய பிரவேச பாதையின் ஊடாக கட்டுப்படுத்தப்படும் அதிவேக பாதையாகும். நான்கு கட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

1. கடவத்தையிலிருந்து மீரிகம வரை (37 கிலோமீட்டர்)
2. மீரிகமயிலிருந்து குருநாகல் வரை (40.91 கிலோமீட்டர்)
3. பொத்துஹரவிலிருந்து கலகெதர வரை (32.5 கிலோமீட்டர்)
4. குருநாகலில் இருந்து தம்புள்ளை வரை (60.3 கிலோமீட்டர்)

பொதுமக்களின் வசதிக்காக மற்றும் சூழல் பாதிப்பைக் குறைக்கும் வகையில் இந்த அதிவேகப் பாதை அமைக்கப்பட்டுள்ளதன் காரணமாக வெள்ளம் போன்ற நிலைமைகள் ஏற்படுவதை குறைக்கும் வகையில் இங்கு முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சாத்தியவள ஆய்வுகளுக்கு மேலதிகமாக பிரதேச மக்களின் கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

மத்திய அதிவேக பாதை கடவத்தை இடைமாறும் மத்திய நிலையத்திலிருந்து ஆரம்பிக்கின்றது.

கடவத்தையிலிருந்து ஆரம்பிக்கும் அதிவேகப் பாதையின் அடுத்த இடைமாறும் இடம் கம்பஹா ஆகும். அங்கிருந்து வெயாங்கொடைக்கும் மீரிகம தெற்கு இடைமாறும் இடத்திற்கும் பயணிக்க முடியும். தற்போது அதனை அமைக்கும் நடவடிக்கையும் வேகமாக நடைபெற்று வருகின்றது.

மீரிகம தொடக்கம் குருநாகல் வரையான இரண்டாவது கட்டம் ஜனவரி 15ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த செலவு137 பில்லியன் ரூபாவாகும். இந்த அதிவேக பாதையின் பகுதி நடவடிக்கைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று அதிவேகப் பாதையின் இரண்டாவது கட்ட திட்டப் பணிப்பாளர் பொறியியலாளர் அனுர கெஹெல்ல தெரிவித்தார்.

"இந்த புதிய பாதையின் ஊடாக 25 நிமிடத்தில் குருநாகல்_ மீரிகம இடையே பயணிக்க முடியும். இப்பாதைகளை அமைப்பது தேசிய நிறுவனங்களாகும். அதன் காரணமாக நாட்டின் பணம் வெளிநாடுகளுக்கு செல்லாது. அத்துடன் கடன் வசதியையும் உள்ளூர் வங்கிகளே வழங்கியுள்ளன. எம் போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்" என திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மத்திய அதிவேக பாதையின் இரண்டாவது கட்டமாக மீரிகம வடக்கிலிருந்து, நாக்கலகமுவ (அலவ்வ_ நாரம்மல பாதை) தம்பொக்க (குருநாகல்_ கொழும்பு இலக்கம் 6 பாதை) போன்ற இடங்களில் உட்பிரவேசிக்கும் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. தம்பொக்கவுக்கு முன்னதாக பொத்துஹரவில் கண்டியை நோக்கி செல்லும் மத்திய அதிவேகப் பாதை தெற்கிற்கு திரும்பிச் செல்லும்.

நாக்கலகமுவ இடைமாறும் இடத்திற்குப் பின்னர் வரும் தம்பொக்க இடைமாறும் இடத்திலிருந்து பொத்துஹரவிற்கு ஐந்து கிலோ மீட்டரும் மற்றும் குருநாகலுக்கு 4 கிலோமீட்டர் தூரமே உள்ளதால் தம்பொக்க இடை மாறும் நிலையம் பொத்துஹர , பொல்கஹவெல,கேகாலை மக்களுக்கு மிகவும் முக்கியமான இடமாகும்.

அதேபோன்று குருநாகல்_ கண்டி பாதையில் குருநாகல் ரயில் பாதைக்கு அண்மையில் (கெட்டுவான) குருநாகல் பிரவேசிக்கும் இடம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் குருநாகல்_ தம்புள்ளை பாதையில் (முத்தெட்டுகல உபரயில் நிலையத்துக்கு அருகே) மேலும் ஒரு பிரவேச பாதை அமைக்கப்பட்டுள்ளது. அது 'யக்கஹபிட்டிய இடைமாறுமிடம்' என பெயரிடப்பட்டுள்ளது.

நான்கு தடவழிப் பாதையாக அமைக்கப்பட்டுள்ள மீரிகம_ குருநாகல் அதிவேக பாதையின் பகுதி தற்போதுள்ள அழகான அதிவேக பாதையாக அறியப்பட்டுள்ளது. அது அழகான காடுகளுக்கிடையே செல்லும் பாதை ஆகும். அது மிகவும் அழகான இயற்கை எழில் நிறைந்தது. மத்திய அதிவேக பாதையின் நான்காவது கட்டமான குருநாகலில் இருந்து தம்புள்ளை வரையான பாதையின் அடிப்படை நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

நான்காவது கட்டம் 58.6 கிலோ மீட்டர் ஆகும். 5 இடை மாறும் மத்திய நிலையங்கள் உள்ளன. அவை ரிதீகம, மெல்சிரிபுற, கலெவல மற்றும் தம்புள்ளையில் உள்ளன. தம்புள்ளையில் ஒரு பிரவேச பாதை ஏ_9 பாதையில் தம்புள்ளை_ கண்டி பாதைக்கும், அடுத்த பிரவேச பாதை தம்புள்ளை_ ஹபரண பாதைக்கும் செல்லவுள்ளது. இதன் மொத்த செலவு 150 பில்லியன் ரூபாஆகும்.

இத்திட்டத்தின் முக்கிய பகுதி மூன்றாவது கட்டம் ஆகும். அது பொத்துஹரவிலிருந்து கலகெதர வரையான பகுதியில் கண்டி வரை செல்லும் வாகனங்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் 32.5 கிலோமீட்டர் தூரமான பாதையாகும். இந்தப் பாதை ரம்புக்கன_ கலகெதர இடைமாறும் மத்திய நிலையமாக அமைக்கப்படவுள்ளது. அதற்கான செலவு 159 பில்லியன் ரூபா என திட்டமிடப்பட்டிருந்தாலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலையீட்டால் ஜப்பானிய நிறுவனம் ஒன்று அதனை 25 பில்லியன் குறைத்து நிர்மாணிக்க ஒப்புதல் அளித்துள்ளமை நாட்டின் அதிர்ஷ்டமாகும்.

பொத்துஹரவிலிருந்து ஆரம்பமாகும் மூன்றாவது கட்டம் 300 அடி தொடக்கம் 1200 அடி வரை உயரமான மலைப்பாதை ஆகும். இதனை அமைக்க 3 சுரங்கங்களை அமைக்க வேண்டியுள்ளது. இதில் கொங்கிரீட் தூண்கள் மேல் அமைக்கப்படும் பாதைகளும் அடங்கும். இப்பாதையில் மேலே அமைக்கப்படும் வீதியின் மொத்த தூரம்5.05 கிலோ மீட்டர் ஆகும்.

கொழும்பு, தம்புள்ளை, கண்டி ஆகிய இடங்களை இணைக்கும் இந்த மத்திய அதிவேக பாதை நாட்டிற்கு மிக முக்கியமானது. அதன் மூலம் கொழும்பிலிருந்து ஒன்றரை மணித்தியாலத்தில் தம்புள்ளைக்கும், கொழும்பிலிருந்து கண்டிக்கு ஒரு மணித்தியாலத்திலும் பயணிக்க முடியும். மத்திய அதிவேக பாதை எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு நீடிக்கப்படும் போது கொழும்பிலிருந்து மூன்று மணித்தியாலத்தில் யாழ்ப்பாணத்தை அடைய முடியும் என பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளரும் பொறியியலாளருமான ரஞ்சித் பிரேமசிறி தெரிவித்தார்.

"பாதைகள் அமைப்பது சாப்பிடவா?" என அன்று கூறிய சிலர் இன்றும் தெற்கு அதிவேக பாதையில், கட்டுநாயக்க அதிவேக பாதையில் அதனை அமைக்க முயற்சி எடுத்த தற்போதைய அரசு மீது குறை கூறிக் கொண்டே பயணிப்பது கவலைக்குரிய விடயமாகும்.

நாட்டில் பொருளாதாரப் பிரச்சனை மற்றும் covid 19 தொற்று பரவியிருந்தாலும் மஹிந்த சிந்தனைக்கு அமைய தற்போதைய அரசு பாதை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் வெற்றிகரமாக பல பாதைகளை நிறைவு செய்துள்ளது. அது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் ,பெருந்தெருக்கள் அமைச்சர் போன்று பெருந்தெருக்கள் துறையின் அனைத்து அதிகாரிகளுக்கும் மக்களின் நன்றிகள் உரித்தாகும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

நிஹால் பீ.அபேசிங்க...✍
தமிழில்: வீ.ஆர்.வயலட்

எழுத்தாளர் கனெக்ஸ் மறைவுக்கு அபிமானிகள் பலரும் இரங்கல்

கனடா மொன்றியல் ஈழத் தமிழர் ஒன்றியத் தலைவராகவும், பண்பாட்டுத் தமிழுறவு மன்ற கியூபெக் அமைப்பாளராகவும் பணியாற்றிய எஸ்.பி. கனகசபாபதி (கனெக்ஸ்) உயிரிழந்துள்ளமை அவரது அபிமானிகள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவிலை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 90 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அம்பாறை, திருக்கோவில் முருகன் ஆலயத்தின் படம் பொறிக்கப்பட்ட கனேடிய முத்திரையை வெளியிட்டவர் ஆவார்.

அவர் சிறந்த எழுத்தாளர் ஆவார். இவர் திருக்கோயில் மெதடிஸ்த மிசன் பாடசாலை, கல்லடி இராமகிருஷ்ணமிஷன் சிவானந்த வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்றுப் பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்தைப் பெற்றார்.

எழுத்தாளராக எஸ். பி.செவ்வேள், கதா கனெக்ஸ், கல்கிதாசன் ஆகிய புனைபெயர்களில் இவர் எழுதி வந்தார். திருஞானவாணி அறப்போர் அரியநாயகம் , மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள், கல்கிதாசன் கவிதைகள்,தேரோடும் திருக்கோவில் ஆகியன இவர் எழுதிய நூல்கள் ஆகும்.

கனடாவில் வெளிவந்த முதல் சஞ்சிகையான 'எழில்' சஞ்சிகையின் ஆசிரியராகப் பணியாற்றிய இவர், கூத்துக் கலையில் ஈடுபாடு கொண்டு 'வில்விஜயன்' என்னும் வடமோடிக் கூத்தைக் கனடாவில் பழக்கி அரங்கேற்றியவர். ஆங்கிலம், சிங்களம் ,சமஸ்கிருதம், ஜேர்மன், பிரஞ்சு ஆகிய மொழிகளில் புலமை உடைய இவர் இந்தியா, ஈரான் உட்பட பல நாடுகளுக்கும் சென்றுள்ளார். அத்துடன் அமெரிக்க National Library of poetry இன் வெளியீடான The Path Not Taken என்ற ஆங்கிலக் கவிதை நூலில் இவரது Singing Dream என்ற கவிதை இடம்பெற்றது.

இவர் கனடா மொன்றியல் ஈழத் தமிழர் ஒன்றியத் தலைவராகவும், பண்பாட்டுத் தமிழுறவு மன்ற கியூபெக் அமைப்பாளராகவும், இன்னும் பல அமைப்புக்களிலும் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார். இவர் தனது படைப்பாற்றலுக்காக சுவாமி விபுலானந்தர் நினைவுத் தங்கப் பதக்கத்தையும்,புலமைப் பரிசில்களையும் பெற்றுக் கொண்டவர்.

அன்னாரின் மறைவுக்கு பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

வி.ரி.சகாதேவராஜா...✍

அக்கரைப்பற்று பைத்துல் ஹிக்மாவில் கல்வி கற்று பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு

அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாயல்கள் சம்மேளனத்தின் அனுசரணையுடன் இயங்கி வரும் 'பைத்துல் ஹிக்மா' கல்வி நிறுவனத்தில் கல்வி பெற்று, கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி, சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் நினைவுப் பரிசு வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

'பைத்துல் ஹிக்மா'வின் தலைவரும், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளருமான கலாநிதி எம்.ஜ.எம். ஹனிபா தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. க.பொ.த உயர்தரம் கணிதம் மற்றும் விஞ்ஞானப் பிரிவுகளில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள சுமார் 50 மாணவர்கள் அதிதிகளினால் நினைவுப் பரிசு வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் கலாநிதி ஹனிபா பேசுகையில், கடந்த 2010ம் ஆண்டு காலப்பகுதியில், க.பொ.த உயர்தரம் கணிதம், விஞ்ஞான பிரிவுகளில் கல்வி கற்ற அக்கரைப்பற்று மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர். பிற ஊர்களுக்கு கல்வி தேடிச் செல்லும் மாணவர்கள் பஸ்வண்டி மூலம் வீடு வந்து சேர நள்ளிரவாகும். இவ்வாறான சிரமங்களுக்கு தீர்வாக தோற்றம் பெற்ற பைத்துல் ஹிக்மாவுக்கு பல்வேறு உதவி, ஒத்துழைப்புக்களை பலர் அன்று வழங்கினர். 2010ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பைத்துல் ஹிக்மாவில் கல்வி பெற்ற மாணவர்களிற் பலர் தற்பொழுது உயர்நிலையை அடைந்துள்ளனர். இந்நிறுவனத்தில் கல்வி பெற்ற பலர் வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாவும் உயர்வடைந்துள்ளனர். இந்நிறுவனம் தற்பொழுது பாரிய விருட்சமாக வளர்ச்சி கண்டு வருவது மகிழ்ச்சியளிக்கிறது. இதன் வளர்ச்சிக்கு நிறைவான உதவி, ஒத்துழைப்புக்களை வழங்கிவரும் பெருந்தகைகளை நாங்கள் இலகுவில் மறந்து விடலாகாது" என்றார்.

இந்நிகழ்வில் 2020ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி, தேசிய ரீதியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற முதல் 10 மாணவர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு கல்வி அமைச்சின் பாராட்டைப் பெற்றுக் கொண்ட அக்கரைப்பற்று முனவ்வறா கனிஷ்ட கல்லூரி மாணவன் முகம்மது சித்தீக் முகம்மது அஜ்வத் பரிசு வழங்கி, பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

அக்கரைப்பற்று மாநகர மேயர் அதாஉல்லாஹ் அகமட் ஸகி, வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் (நழீமி), பைத்துல் ஹிக்மா'வின் செயலாளர் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம்.லாபீர், அதிபர்கள், கல்வியியலாளர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

முகம்மட் றிஸான்...✍
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

கல்வி, கலாசார, ஊடக, சமூகப் பணிகளில் வாழ்நாளை அர்ப்பணித்த ஏ.எல்.எம்.அமீன்

ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளரும் நிந்தவூர் பிரதேசத்தின் முதலாவது ஊடகவியலாளரும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான கலாபூஷணம் ஏ.எல்.எம். அமீன் தனது 77ஆவது வயதில் கடந்த 18ஆம் திகதி காலமானார். கல்வி, கலாசார, கலை, இலக்கிய, சமூக மற்றும் ஊடகம் என அனைத்து துறைகளிலும் இவர் சிறந்து விளங்கினார்.

இவர் 1960 ஆம் ஆண்டு தொடக்கம் தேசியப் பத்திரிகைகளின் பிராந்திய செய்தியாளராக நீண்ட காலம் பணியாற்றினார். எழுத்தார்வமுள்ள இளையோரை ஊடகத் துறைக்குள் கொண்டு வருவதில் கரிசனையுடன் செயற்பட்டார். சமூக சேவைகளில் கூடிய ஈடுபாடு காட்டி வந்துள்ள இவர், நிந்தவூர் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் செயலாளராக இருந்து பள்ளிவாசல் பரிபாலனம் மற்றும் ஊர் நலன் சார்ந்த விடயங்களில் முக்கிய பங்காற்றியுயுள்ளார். அவ்வாறே நிந்தவூர் பிரதேச குவாஷி நீதிபதியாக கடமையாற்றிய காலப்பகுதியில் குடும்பப் பிணக்குகளை தீர்த்து வைப்பதில் நீதி, நேர்மை, மனிதாபிமானம் என்பவற்றுக்கு முன்னுரிமையளித்து செயற்பட்டு சமூக மட்டத்தில் நற்பெயர் பெற்றிருக்கிறார்.

பிரதேச அபிவிருத்தி, முன்னேற்றம் என்பவற்றில் எப்போதும் அக்கறையுடன் செயற்பட்டு வந்த மர்ஹூம் ஏ.எல்.எம்.அமீன் , நிந்தவூர் வெளவ்வாலோடை பிரதேசத்தில் மின்சார வசதியை ஏற்படுத்துவதற்கும் நிந்தவூரில் குடிநீருக்கான பாரிய குழாய் நீர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் பின்புலமாக இருந்து பங்காற்றியிருந்தார்.

நிந்தவூர் மற்றும் காரைதீவு பிரதேசங்களுக்கான கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய காலப்பகுதியில் இப்பிரதேச பாடசாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதற்காக சிறந்த அணுகுமுறைகளை கையாண்டிருந்தார்.

ஆசிரியராக, அதிபராக, கல்வி அதிகாரியாக, பொது ஸ்தாபனங்களின் நிர்வாகியாக கடமையாற்றிய சந்தர்ப்பங்களிலெல்லாம் ஏனையோருடன் கனிவாக பழகியவர் இவர்.

இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் கல்முனை மாவட்ட கிளையின் செயலாளராகவும் கல்வித் திணைக்களத்தின் கல்முனை மாவட்ட கடன் வழங்கல் சபையின் உறுப்பினராகவும் நிந்தவூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குனர் சபை உறுப்பினராகவும் நிந்தவூர் வர்த்தகர் சங்கத்தின் செயலாளராகவும் நிந்தவூர் பிரதேச ஓய்வூதியர் சங்கத்தின் தலைவராகவும் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் அம்பாறை மாவட்ட செயலாளராகவும் பதவிகளை வகித்துள்ளார்.

1965ஆம் ஆண்டு நிந்தவூர் எழுத்தாளர் சங்கத்தின் உப தலைவராக செயற்பட்ட இவர், தொடர்ச்சியாக மூன்று தினங்கள் தமிழ் இலக்கிய பெருவிழா ஒன்றை அமைப்பின் நிர்வாகிகளுடன் முன்னின்று நடத்தினார். 2016ஆம் ஆண்டு கலாசார, பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் இவர் கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தார்.

அஸ்லம் எஸ்.மௌலானா...✍

சீன இராணுவத்தினால் கடத்தி செல்லப்பட்ட இந்திய சிறுவன்!

இந்தியாவின் அருணாச்சல பிரதேச எல்லைக்குள் புகுந்து 17 வயதான சிறுவனை சீன இராணுவத்தினர் கடத்திச் சென்றுள்ளதாக அம்மாநிலத்தின் எம்.பி ஒருவர் கூறியுள்ளார். "அருணாச்சல பிரதேச மாநிலம் அப்பர் ஷியாங் மாவட்டம் லங்டா ஜார் பகுதியை சேர்ந்த மிரம் தரோன்(17) என்ற சிறுவனை செவ்வாயன்று சீன இராணுவத்தினர் கடத்தி சென்றனர். சாங்போ நதி, இந்திய எல்லைக்குள் நுழையும் இடத்தின் அருகே சிறுவன் கடத்தப்பட்டான். (சாங்போ நதி அருணாச்சல பிரதேசத்தில் ஷியாங் எனவும், அசாமில் பிரம்மபுத்ரா எனவும் அழைக்கப்படுகிறது)

அச்சிறுவனுடன் இருந்த ஜானி யாயிங் என்ற மற்றொரு சிறுவன், அங்கிருந்து தப்பி வந்து கடத்தல் சம்பவம் தொடர்பாக அதிகாரிகளிடம் தெரிவித்தான். கடத்தப்பட்ட சிறுவனை மீட்க பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா , பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அந்த எம்.பி தெரிவித்துள்ளார். மிரம் தரன் மற்றும் ஜானி யாயிங் ஆகிய இருவரும் உள்ளூர் வேட்டைக்காரர்கள் எனத் தெரிய வந்துள்ளது. இந்தக் கடத்தல் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து காங்கிரஸ் எம்.பி. ராகுல் வெளியிட்ட அறிக்கையில் "குடியரசு தினத்திற்கு சில நாட்களுக்கு முன்னர், இந்தியாவின் எதிர்காலமான சிறுவன் சீனாவால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். அந்தச் சிறுவனின் குடும்பத்திற்கு நாங்கள் துணை நிற்கிறோம். பிரதமர் மௌனமாக உள்ளார். இது குறித்து அவர் கவலைப்படவில்லை" எனக் கூறியுள்ளார். இது தொடர்பாக இராணுவ வட்டாரங்கள் கூறுகையில் "மிரம் தரோன் உள்ளூர் வேட்டைக்காரர். வழிதவறி வந்துவிட்டார். இது தொடர்பாக சீன இராணுவத்திற்கு தகவல் தெரிவித்துள்ளோம். பாதுகாப்பு நடைமுறைகளின்படி பத்திரமாக அச்சிறுவனை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" எனத் தெரிவித்துள்ளன.

வீழ்ந்தவர்களை... (03ஆம் பக்கத் தொடர்)

மற்றும் நீண்ட கால தீர்வுகள் தேவை. தான் பொறுப்பேற்ற போது ஏழரை பில்லியன் டொலர் கடனாக இருந்ததாக ஜனாதிபதி கூறுகிறார். நம் பிரச்சினைகளுக்குக் காரணம் கடன் அல்ல. கடந்த கால விடயங்களால் நமக்கு எந்தப் பயனும் இல்லை. நாங்கள் அரசாங்கத்தை பாதுகாக்கவோ அல்லது கவிழ்க்கவோ இங்கு வரவில்லை. வீழ்ந்தவர்களை எழுப்புவது தான் நமக்குத் தேவை என்றார்.

இன்றைய அரசின் காலத்தில்... (03ஆம் பக்கத் தொடர்)

தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இறக்குமதியை குறைத்து ஏற்றுமதி, உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார். அதனை அவர் தமது கொள்கை விளக்க உரையில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் கல்வித் துறை தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. மாறி மாறி வரும் அரசாங்கங்கள் மாறி மாறி வரும் அமைச்சர்கள் நிலையான கல்விக் கொள்கை ஒன்றை பின்பற்ற தவறியுள்ளனர். கடந்த காலங்களில் சிறு பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தன. தொடர்ச்சியாக அந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வீண் விமர்சனங்களை... (03ஆம் பக்கத் தொடர்)

என பல்வேறு கருத்திட்டங்களை உருவாக்கி வடக்கு கிழக்கில் பாரிய அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுத்தார்.

அதேபோன்று தற்போதைய அரசாங்கத்தின் காலத்திலும் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சமமான அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அரசாங்கம் தற்போது பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இம்முறையும் பெரும் நெருக்கடிக்கு மத்தியிலேயே கடன் தவணை செலுத்தப்பட்டது. கடன் சுமையை மேலும் அதிகரித்துக் கொள்ளாமல் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

அதற்கு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு வழங்குமாறே ஜனாதிபதி தமது கொள்கை விளக்க உரையில் தெரிவித்திருந்தார்.

சரத் வீரசேகரவுக்கு கொரோனா...

திடீர் சுகயீனம் ஏற்பட்டதையடுத்து, நடத்தப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. தற்போது அமைச்சர் சரத் வீரசேகர சிகிச்சைகளுக்காக நாராஹேன்பிட்டி பொலிஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், அவருடன் தொடர்பில் இருந்தவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதார தரப்பினர் இறங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொவிட் தொற்றுள்ள மாணவர்களுக்கு...

பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொவிட்19 தொற்றுக்கு உள்ளான மாணவர்களுக்காக நாடளாவிய ரீதியில் விசேட பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளரான அமித் ஜயசுந்தர கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பாடசாலையில் விடுவதும், பாடசாலை மாணவர்களை தேர்வு மையத்திற்கு அழைத்துச் செல்வதும் பொதுவான செயல்முறையாகும் என்றும் அவர் தெரிவித்தார். எவ்வாறாயினும், மாணவர் ஒருவர் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாகியிருந்தால், அவர்களின் பெற்றோர் அவர்களை விசேட தேர்வு மையங்களுக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குச் சென்று பெற்றோர்கள் விசேட நிலையங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மாணவர் கொவிட் 19 தொற்றுக்குள்ளாகி இருப்பின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் அவர்கள் என்டிஜென் சோதனை அல்லது பிசிஆர் சோதனை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

எவ்வாறாயினும், மாணவர்கள் கொவிட் தொற்றாளர்களாக சந்தேகிக்கப்பட்டாலும், நேர்மறை சோதனை செய்யவில்லை என்றால், விசேட மையங்களுக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்வதைத் தவிர்க்குமாறு அவர் பெற்றோரிடம் கேட்டுக்கொண்டார்.

தனிமைப்படுத்தல் அல்லது கொவிட் 19 அறிகுறிகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு தனியான விசேட வேலைத்திட்டம் நடைமுறையிலுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தோட்ட வைத்தியசாலைகள் எதிர்நோக்கும்...

சுகாதார மேம்பாட்டுக்கான குழு ஒன்றை அமைத்து அதனூடாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலை, நுவரெலியா மாவட்ட வைத்தியசாலை மற்றும் லிந்துலை பிரதேச வைத்தியசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாகவும் சுகாதார அமைச்சரிடம் இ.தொ.கா விரிவாக கலந்துரையாடியது. லிந்துலை பிரதேச வைத்தியசாலையை வேறு இடத்துக்கு மாற்றுவது சம்பந்தமாகவும் பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள மருத்துவர் மற்றும் மருந்து, அம்பியூலன்ஸ் வண்டி பற்றாக்குறை அத்துடன் நோயாளர் ஒருவரை இலகுவாக வைத்திசாலைக்கு கொண்டு செல்லும் முறை தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

எதிர்காலத்தில் பெருந்தோட்டப் பகுதிகளில் சிறந்த சுகாதார பொறிமுறைகளை உருவாக்குவது மட்டுமல்லாது ஏனைய பகுதிகளிலும் விஷேட திட்டங்களை உருவாக்குதல் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

சிறுவர்களக்கான ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பெருந்தோட்ட பகுதிகளில் இலவசமாக வழங்கப்படும் திரிபோசா சத்துணவு முறையாக வழங்குவது தொடர்பாகவும் சுகாதார அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இக்கலந்துரையாடலில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், பிரஜாசக்தி செயற்றிட்டத்தின் பணிப்பாளர் பரத் அருள்சாமி மற்றும் அமைச்சின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

சாராவினால் பயிற்று... (03ஆம் பக்கத் தொடர்)

வைக்கப்பட்டுள்ளனர். இஸ்லாமிய இராஜ்ஜியத்தை உருவாக்க பையத் செய்த, நுவரெலியா, காத்தான்குடி மற்றும் ஹம்பாந்தோட்டையில் பயிற்சி பெற்றதாக கூறப்படும் 25 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களில் 16 பேர் பெண்கள் என தெரியவந்துள்ளது. ஏனைய 9 பேரும் ஆண்களாவர்.

இந்நிலையில் ஏற்கனவே 6 பெண்களை நீதிமன்றில் ஆஜர் செய்து விளக்கமறியலில் வைக்க நடவடிக்கை எடுத்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் (19) நான்கு பெண்களையும் 4 ஆண்களையும் இது தொடர்பில் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவர்கள் அனைவரும் ஹம்பாந்தோட்டை – சிப்புக்குளம், நுவரெலியா – பிளக்வூட், காத்தான்குடி – கர்பலா ஆகிய பகுதிகளில் ஆயுத பயிற்சிகளில் பங்கேற்று, இஸ்லாமிய இராஜ்ஜியத்தை ஏற்படுத்த உறுதி மொழி எடுத்தவர்கள் என விசாரணையாளர்கள் மன்றுக்கு அறிவித்துள்ளனர்.

இவர்கள் தொடர்பில் எடுக்கும் நடவடிக்கை தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள இதன்போது நீதிவான் விசாரணையாளர்களை அறிவுறுத்தியுள்ளார்.

கொள்கைப் பிரகடன உரை... (03ஆம் பக்கத் தொடர்)

தம்மிக தசநாயக தெரிவித்தார். இதற்கமைய ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சியினரின் இணக்கப்பாட்டுக்கமைய இன்று (21) முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 5.30 வரை சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இன்று பிற்பகல் 12.30 மணி முதல் 1.30 மணி வரை மதியபோசன இடைவேளைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர்... (03ஆம் பக்கத் தொடர்)

பல்கலைக்கழகம், பாடசாலைகள், கல்வியியற் கல்லூரி மற்றும் தொழில் நுட்பக் கல்லூரிகள் போன்றவற்றின் அபிவிருத்திகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பாகவும் கல்வி மற்றும் உயர் கல்வித்துறை சார் அதிகாரிகளுடனான விசேட கலந்துரையாடலொன்றிலும் கல்வி அமைச்சர் கலந்துகொள்ளவுள்ளார்.

தீ மிதித்த பெண்... (03ஆம் பக்கத் தொடர்)

தீக்காயங்களுக்கு சிகிச்சைப் பெறாமல் வீட்டில் இருந்த குறித்த பெண் மறுநாள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பூஜிதவுக்கு எதிரான விசாரணைகள்...

நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் நிறைவுக்கு கொண்டுவந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித ஜயசுந்தரவை விடுவிப்பதா, இல்லையா என்பது குறித்து பெப்ரவரி 18 ஆம் திகதி தீர்மானிக்கப்படவுள்ளது.

அரசுடன் இணைந்து மக்கள்...

விடுத்தார்.

13ஆவது திருத்தச் சட்டம் தற்போது தூசு தட்டி கையில் எடுக்கப்பட்டது போன்றே, அரச தலைவரின் சிம்மாசன உரையில் கூறப்பட்டுள்ள விடயங்களும் விரைவில் வடக்கு கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் தூசு தட்டப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது...

மிக அவசிமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பி எஸ்.ஸ்ரீதரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதற்காக ஜனாதிபதியின் மனநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டுமென குறிப்பிட்ட அவர், அப்போதுதான் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியமென்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே சிறிதரன் எம்பி இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் நிகழ்த்திய விளக்க உரையில் தமிழ் மக்கள் கவனத்திற் கொள்ளப்பட வில்லை. அது தமிழ் மக்களை ஒருங்கிணைத்துச் செல்லும் வகையிலான உரையல்ல.

அவரது சிந்தனை ஒருமுகமாக இருப்பதையே காண முடிகிறது. நாடு சீரான பாதையில் பயணிக்க வேண்டுமானால் நீண்டகாலம் நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவியேற்று கொள்கை விளக்க உரை நிகழ்த்தியிருந்தார். அதேபோன்று இம்முறை பாராளுமன்றத்தில் அவர் கொள்கை விளக்க உரையை ஆற்றினார். இரண்டையும் நாம் நோக்கும் போது அவற்றில் தமிழ் மக்கள் தொடர்பில் கவனிக்கப்படவில்லை என்பது தெரிகிறது.

அண்மையில் காலம் சென்ற மனித உரிமை ஆய்வாளர் டெஸ்மன் டுட்டு, உலக விடுதலை வரலாற்றில் நீக்கப்பட முடியாத பெயரான நெல்சன் மண்டேலா போன்ற தலைவர்கள் நல்லிணக்கத்தின் வரைவிலக்கணமாக செய்யப்பட்டார்கள்.

நாட்டில் பெரும்பான்மை இனத் தலைவர்களும் நாட்டு மக்களும் அது தொடர்பில் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சிறைத்தண்டனை உட்பட பல்வேறு அவலங்களை அனுபவித்த அந்தத் தலைவர்கள் மக்களுக்கான உரிமைகளை பெற்றுக் கொடுப்பதில் எந்தளவு தியாகத்துடன் செயற்பட்டார்கள் என்பதை உணர வேண்டும்.

நாட்டின் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் நியாயமாகவும் நேர்மையாகவும் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொருளாதார பிரச்சினைக்கு...

கடன் தவணையை நீடித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

சர்வதேச கடன் தரப்படுத்தல் நிறுவனங்களின் தரப்படுத்தலை நாங்கள் ஏற்றுக்கொண்டு, அதனை சரிசெய்ய வேண்டும். கடன் பெறும் விடயத்தில் அந்த நிறுவனங்களின் தரப்படுத்தல் முக்கியமாகும்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக தெரிவித்தே அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் இன்று உணவு பாதுகாப்பு, சுகாதார பாதுகாப்பு, வாழ்வாதார பாதுகாப்பு உட்பட இராணுவ பாதுகாப்பு என நாட்டின் அனைத்து பாதுகாப்பு துறைகளும் வீழ்ச்சியடைந்திருக்கின்றன.

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை கைதுசெய்வதாகவும் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதாகவுமே அரசாங்கம் தெரிவித்திருந்தது. அது இடம்பெற்றிருக்கின்றதா? ஈஸ்டர் தாக்குதலால் அதிக பாதிப்பு ஏற்பட்டது கிறிஸ்தவ மக்களுக்காகும். அவர்களுக்கு நியாயம் கிடைத்ததா?. இதுதொடர்பான அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை கர்த்தினால் மெல்கம் ரன்ஜித் ஆண்டகை நிராகரித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னணி வெளிப்படப்போவதில்லை என்றே அவர்கள் தெரிவித்து வருகின்றனர். பொரளை தேவாலயத்தில் கண்டு பிடிக்கப்பட்ட கைக்குண்டு தொடர்பாகவும் பொலிஸார் மேற்கொள்ளும் நடவடிக்கை திருப்தியில்லை என்றே கர்தினல் தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றை கட்டுப்படுத்துவதில் நாங்கள்தான் சிறந்தமுறையில் செய்தோம் என அரசாங்கம் தெரிவித்து வருகின்றது. ஆனால் இதுவரை மொத்தமாக 15243 கொவிட் மரணங்கள் இடம்பெற்றுள்ளன. உலக நாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் அது 2.55வீதமாகும்.

இதன் பிரகாரம் மரணவீதங்களில் உலகில் கொவிட் மரணங்களில் இலங்கை இரண்டாம் இடத்தில் இருக்கின்றது. அப்படியாயின் எப்படி நாங்கள் தான் சிறந்த முறையில் செய்திருக்கின்றோம் என தெரிவிக்க முடியும் என்றார்.

இலங்கையின் மனித உரிமைகள்...

அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கின்ற புலம்பெயர் இலங்கையர்களுடன் இணைந்து செயற்பட விருப்புவதாகவும், அதற்காக புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்குமாறும் தாரிக் அஹமட் பிரபுவிடம் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, நேற்று (20) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து உரையாற்றும் போதே, அமைச்சர் தாரிக் அஹமட் இதனைத் தெரிவித்தார்.

தெற்காசியா, ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பொதுநலவாய அமைப்புக்கான இராஜாங்க அமைச்சர் என்ற வகையில், இந்து சமுத்திரப் பிராந்தியம், மத்திய ஆசியா மற்றும் பொதுநலவாய அமைப்புக்கிடையிலான ஒத்துழைப்புகளை ஏற்படுத்துவதற்கான பல்வேறு துறைகள் சார்ந்த பொறுப்புகள், தாரிக் அஹமட் பிரபுவிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க சக்தி வலுத் துறையின் இலக்குகளை அடைவதற்கும் தொழில்நுட்பம்சார் தடைகளை வெற்றிகொள்வதற்கும் உதவுமாறு ஜனாதிபதி விடுத்த கோரிக்கைக்கு உடனடியாக பதிலளித்த அஹமட் பிரபு, தனது நாட்டுக்குச் சென்றவுடன் இந்த விடயம் பற்றி கூடிய விரைவில் ஆராய்ந்து, அது தொடர்பான அனைத்து உதவிகளையும் வழங்குவதாகத் தெரிவித்தார்.

இலங்கைக்கான முதலீட்டு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் முதலீட்டாளர்களை ஈர்க்க முடியுமெனச் சுட்டிக்காட்டிய அவர், ஐக்கிய இராச்சியத்தில் வாழும் பல்வேறு இனங்களைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் சுகாதார ஊழியர்களுக்கு ஐக்கிய இராச்சியத்தில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. பொருளாதாரத் துறைக்கான ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதாகவும், அவர் உறுதியளித்தார்.

இலங்கை எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதுடன், மக்கள் அனைவரும் ஒன்றாக வாழக்கூடிய சூழலை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அதற்கு, ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கின்ற புலம்பெயர் இலங்கையர்களுடன் இணைந்துச் செயற்பட விருப்பம் தெரிவித்த ஜனாதிபதி, அதற்காகப் புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாடச் சந்தர்ப்பம் வழங்குமாறும் தாரிக் அஹமட் பிரபுவிடம் கேட்டுக்கொண்டார்.

இலங்கையின் நெருங்கிய மற்றும் நடைமுறை நண்பராக ஒத்துழைக்க, ஐக்கிய இராச்சியம் எப்போதும் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் (Sarah Hulton), முதன்மைச் செயலாளர் மேத்யூ டெய்த் (Mathew Deith), தாரிக் அஹமட் பிரபுவின் உதவியாளர் இசபெல் ஸ்கொட் (Isabelle Scott), வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ். ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொழம்பகே ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

ஆறு இலட்சம் சீமெந்து மூடைகள்...

நேற்று முன்தினம் 6 இலட்சம் சீமெந்து மூடைகளை ஏற்றிய இரண்டு கப்பல்கள் நாட்டை வந்தடைந்தாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தோனேசியாவிலிருந்து வந்த கப்பலில் 2 இலட்சம் சீமெந்து மூடைகளும், பாகிஸ்தானிலிருந்து வந்த கப்பலில் 4 இலட்சம் சீமெந்து மூடைகளும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, அந்த சீமெந்து மூடைகள் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் சந்தைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாகவும் சீமெந்து இறக்குமதி மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தைகளில் தற்போது சீமெந்து மூடை ஒன்றின் விலை 1375 ரூபாவாக காணப்படுகின்றது.

எனினும், 1500 ரூபாவிற்கும் அதிக விலைகளிலே சீமெந்து மூடைகள் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில விற்பனையாளர்கள் மணல் அல்லது ஏதேனும் கட்டுமான பொருட்களை கொள்வனவு செய்தால் மாத்திரமே சீமெந்தை விற்பனை செய்வதாக பாவனையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

65 வயதாக உயர்த்திய வர்த்தமானி...

வெளியிடப்பட்டுள்ளது.

மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகளின் பொது சேவை அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனின் கையொப்பத்துடன் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தின்படி அரச ஊழியர்களின் ஓய்வு வயதை 65 ஆக நீடிக்க அரசாங்கம் தீர்மானித்தது.

இதன்படி, இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 65 ஆக மாற்றுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

விமான எரிபொருளுக்கு தட்டுப்பாடு...

தெரிவித்துள்ளார். தற்போது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு அடுத்த ஒன்றரை மாதங்களுக்குப் போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரமளவில் 32 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தி எதிர்காலத்தில் தேவையான எரிபொருளை கொள்முதல் செய்வதற்கான கொள்வனவு கட்டளை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எரிபொருள் கொள்வனவு செய்வதற்கான டொலர் கையிருப்பு ஸ்ரீலங்கன் நிறுவனத்திடம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி, ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு ஒருபோதும் இடையூறு ஏற்படாத வகையில் சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தமது அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க தெரிவித்துள்ளார்.

மூன்று தினங்களில் ஒரு கோடி...

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று தெரிவித்தார். மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டம் அத்து கல்புர நுழைவு திறந்து வைக்கப்பட்ட முதல் மூன்று நாட்களில் மீரிகம முதல் குருநாகல் வரையிலான பகுதியில் 50,000 வாகனங்கள் பயணித்துள்ளதால் இவ்வாறு வருமானம் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 15ஆம் திகதி சனிக்கிழமையன்று மீரிகமவிலிருந்து குருணாகல் வரையான பகுதி திறந்து வைக்கப்பட்டதையடுத்து, முதல் 12 மணிநேரத்துள் பொதுமக்கள் இலவசமாக பயணிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை 16 ஆம் திகதி பகல் 12.00 மணிக்குப் பின்னர் அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்க கட்டணம் வசூலிக்கப்பட்டது.

புதிய குழு உறுப்பினர்கள்...

அபேவர்தன நேற்று (20) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இதற்கமைய சபாநாயகர் இதன் தவிசாளராக நியமிக்கப்படுவதுடன், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், பாராளுமன்றச் சபை முதல்வர், பாராளுமன்ற எதிர்க்கட்சியின் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற் கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் உட்பட மேலும் 21 பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் குழுவுக்கு நியமிக்கப்பட்டனர்.

நேற்று 20 உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் அறிவித்திருந்ததுடன், மற்றுமொரு உறுப்பினரின் பெயர் எதிர்வரும் நாட்களில் அறிவிக்கப்படவுள்ளது. பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் கடமையாற்றுவதற்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்கள் வருமாறு,

சமல் ராஜபக்ஷ, நிமல் சிறிபால த சில்வா, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், டக்ளஸ் தேவானந்தா, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவங்ச, பெசில் ரோஹண ராஜபக்ஷ, மஹிந்த அமரவீர, வாசுதேவ நாணாயக்கார, பிரசன்ன ரணதுங்க, எம்.யூ.எம். அலி சப்ரி, கயந்த கருணாதிலக்க, ரவூப் ஹகீம், அநுர திசாநாயக்க, டிலான் பெரேரா, றிஷாட் பதியுதீன், ஆர்.எம்.ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரின் பெயர்களை சபாநாயகர் நேற்று அறிவித்தார்.

ராஜிதவுக்கு எதிரான வழக்கு...

சாட்சிய விசாரணைகளை ஆரம்பிக்க கொழும்பு மேல் நீதிமன்றினால் திகதியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பாராளுமன்ற உறுப்பினரான ராஜித சேனாரத்ன மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் ரூமி ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி வழக்கு தொடர்பான சாட்சிய விசாரணைகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2019 ஜனாதிபதித் தேர்தலின் போது சர்ச்சைக்குரிய வெள்ளை வான் தொடர்பில் ஊடக சந்திப்பை முன்னெடுத்த பாராளுமன்ற உறுப்பினரான ராஜித சேனாரத்ன மற்றும் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரான ரூமி மொஹமட் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தோட்டவத்தவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, 2019 நவம்பர் 10 ஆம் திகதி ஊடகவியலாளர் மாநாட்டை ஏற்பாடு செய்தமை தொடர்பில், குற்றம் சாட்டப்பட்ட இருவர் மீதும் சட்டமா அதிபர் இதற்கு முன்னர் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட குணநலன்கள் தொடர்பில் பொய்யான கருத்துக்களை வெளியிட்டதாக இருவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உலகை மீண்டும் உலுக்கிவரும்...

பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது. கொரோனாவில் இருந்து டெல்டா, டெல்டா பிளஸ், ஒமிக்ரோன் என புதிய திரிபு வகை வைரஸ்கள் அதிக அச்சுறுத்தலாக உள்ளன.

இந்நிலையில், 2022 உலக பொருளாதார சபையில் உரையாற்றிய ஐ.நா. பொதுச்செயலாளர் குட்டெரெஸ் உலகம் முழுவதும் தடுப்பூசி செலுத்தும் பணிகளை விரைவாக செயற்படுத்துமாறு வலியுறுத்தினார். கடந்த இரண்டு ஆண்டுகளில் நாம் பலரை இழந்து தவிக்கிறோம். இந்த நிலை இப்படியே நீடித்தால் அன்றாட வாழ்க்கையும், பொருளாதாரமும் சீர்குலையும் நிலை ஏற்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஒவ்வொரு நபரும் தடுப்பூசி போட தவறினால் புதிய திரிபு வகை வைரஸ்களை சந்திக்க நேரிடும். 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மக்கள் தொகையில் 40 வீதத்திற்கும், நடுப்பகுதியில் 70 சதவீதத்திற்கும் தடுப்பூசி போட வேண்டும் என உலக சுகாதார அமைப்பு இலக்கை நிர்ணயித்தது. இந்த இலக்கை உலக நாடுகள் நெருங்க விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை. தொழில்நுட்ப திறனுடன் வளரும் நாடுகளுடன் நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் உயிரை பறிக்கும் தொற்றுநோயை கட்டுப்படுத்த முடியும் என்றும் ஐ.நா. பொதுச்செயலாளர் கு

கொழும்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன, கொழும்பு பிரதேச செயலாளர் நாலக ரத்னாயக, உதவிப் பிரதேச செயலாளர் அருணோத என் போபகமகே, கலாசார உத்தியோகத்தர் திருமதி சீ.வீ.றோஸ் மற்றும் கிராம உத்தியோகத்தர் உருத்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். படங்கள்: எம்.நசார்

வவுனியாவில் யானையின் சடலம் மீட்பு

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா குடாகச்சக்கொடி பகுதியில் உயிரிழந்த நிலையில் 30 வயதான யானையின் சடலமொன்று (20) நேற்று மீட்கப்பட்டது.

குறித்த கிராமத்திலுள்ள காட்டுப்பகுதியில் யானையின் சடலம் ஒன்றினை அவதானித்த பொதுமக்கள் அது தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் தெரிவித்திருந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் தெரிவித்திருந்ததுடன், யானை இறந்தமைக்கான காரணம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சுமார் 30 வயதுடைய 9 அடி உயரமான யானையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், வடமாகாண வனஜீவராசிகள் திணைக்களத்தை சேர்ந்த வைத்தியரால் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

தீயில் எரிந்து வயோதிப பெண் மரணம்

நாகர்கோவில் விஷேட நிருபர்

வல்வெட்டித்துறையில் தீயில் எரிந்து வயோதிப பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை (20) காலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பரமேஸ்வரி நடராஜா (வயது 69) என்ற வயோதிப பெண்ணே தீயில் எரிந்து மரணமடைந்துள்ளார். வீட்டுக்கு சென்று சடலத்தை பார்வையிட்ட பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். இதனையடுத்து சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

காணி சுவீகரித்தல் சட்டத்தின் (460வது அத்தியாயம்) 7வது பிரிவின் கீழ் அறிவித்தல்

இங்கு கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிணை அரசாங்கத்திற்கு சுவீகரித்துக் கொள்வதற்கு எண்ணியுள்ளது. இவ்விடயம் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2255/21 மற்றும் 2021.11.24ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையை பார்க்கவும்.

அட்டவணை

மாகாணம்	- தென்
மாவட்டம்	- காலி
பிரதேச செயலகம்	- கடவத்சதர - காலி
கிராம உத்தியோகத்தர் பிரிவு	- 103ஏ, ஹிங்தொட, கிழக்கு
கிராமத்தின் பெயர்	- தடல்ல
காணியின் பெயர்	- கனத்த அல்லது கனத்த வத்த மற்றும் தெனிய கனத்த
திட்டப்பட இலக்கம்	- ஆ.தி.கா. 4596
துண்டு இலக்கம்	- 01,02 மற்றும் 03

பிரதேச செயலாளர்,
காலி, கடவத்சதர.

2021 சனவரி மாதம் 06ஆம் திகதி
கடவத்சதர பிரதேச செயலகத்தில்

Alliance Finance இற்கு அதன் நிலைபேறு தன்மையை அங்கீகரித்து ADFIAP விருதுகள் 2021 இல் இரு விருதுகள்

ஆசியா மற்றும் பசிபிக் அபிவிருத்தி நிதி நிறுவனங்களின் சங்கத்தின் (ADFIAP) 2021 விருது வழங்கும் நிகழ்வில், Alliance Finance Co. PLC (AFC) நிறுவனத்திற்கு, சமூக மற்றும் சூழல் நிலைபேறான நடைமுறைகளுக்கான அதன் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் வகையில் இரண்டு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. இது அதன் மற்றொரு குறிப்பிடத்தக்க சாதனைக்கு வழிவகுத்துள்ளது. சிறந்த அபிவிருத்தி திட்ட விருதுகளின் கீழ், ஒற்றுமைக்கான திட்டம் (Unity Project) தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட ஒரு மில்லியன் மரங்களை நடும், பெரு நிறுவன சமூகப் பொறுப்புக்காக ஆநசவை விருதையும், சிறந்த நிலைபேறுதன்மை அறிக்கை தொடர்பில் மற்றொரு விசேட விருதையும் AFC வென்றுள்ளது.

ADFIAP விருதுகள் என்பது நிதித் துறை நிகழ்வுகளில், முதன்மையான விருது வழங்கும் நிகழ்வுகளில் ஒன்றாகும். அது சமூக மற்றும் சூழல் நிலைபேறுதன்மை தொடர்பில், அபிவிருத்தி வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் சிறந்த முயற்சிகளுக்கு அங்கீகாரம் வழங்கி கௌரவிக்கிறது.

"ஒற்றுமைக்காக ஒரு மில்லியன் மரங்கள்" எனும் AFC இன் முதன்மையான சூழல் நிலைபேறுதன்மை திட்டத்திற்காக இக்கௌரவத்தை அது பெற்றுள்ளது. யுகுஊ இனது "துரு மிதுரு" திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 2019 இல் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முதல் கட்டத்தின் போது, 991 பாடசாலைகளில் 370,000 பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடன் நாடு முழுவதும் 176,000 மரங்களை நடுவதில் AFC முன்னோடியாகதிகழ்ந்தது. AFC இன் சமீபத்திய மர நடுகை பிரசாரமானது, 2024ஆம் ஆண்டிற்குள் ஒரு மில்லியன் மரங்களை நடவும் காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA), லயன்ஸ் கழகம், நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையம், அரச பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள் உள்ளிட்ட திட்ட பங்காளிகளின் ஆதரவுடன் 300,000 மரங்களை இயற்கை அன்னைக்கு வழங்க இத்திட்டத்தின் மூலம் முடிந்துள்ளது.

நிலைபேறுதன்மை அறிக்கைக்கான இவ்வாண்டுக்கான விசேட விருதானது, AFC ஆண்டு அறிக்கைக்காக பெறப்படும் இரண்டாவது சர்வதேச அங்கீகாரமாகும். AFC தனது பங்குதாரர்களுக்கு 100% வெளிப்படைத்தன்மையுடன் துல்லியமான மற்றும் சரியான நேரத்தில் தகவலை வழங்குவதனை அடிப்படையாகக் கொண்ட அறிக்கையிடலில் சிறந்த நடைமுறைகளை நிலைநிறுத்தி வருகிறது. இதன் மூலம் AFC அதன் அனைத்து வருடாந்த அறிக்கைகளிலும், சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கையிடல் சபையினால் (International Integrated Reporting Council) அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒருங்கிணைந்த அறிக்கையிடல் வடிவமைப்பை பின்பற்றுகிறது. அத்துடன் அதன் நிலைபேறுதன்மை அறிக்கையானது, GRI நிலைபேறுதன்மை அறிக்கை தரநிலைகளுக்கு ஏற்ப தொகுக்கப்பட்டுள்ளது.

SLT-Mobitel இற்கு 'CALLER TUNES' வசதியை வழங்கும் EVOKE

தொலைத்தொடர்பு சேவை வழங்குனர்களுக்கு பெறுமதி சேர் சேவைகளை வழங்குவதில் கவனம் செலுத்திவரும் இலங்கையின் பொழுதுபோக்கு வர்த்தக முன்னோடியான EVOKE INTERNATIONAL LIMITED ஆனது, SLT-Mobitel உடன் இணைந்து தொலைபேசி அழைப்பு ஒலிக்கான பின்னணி இசை 'CALLER TUNE' சேவையை வழங்குகிறது. இந்தச் சேவையானது ளுடுவு-ஆழடிவைநட நிலையான வீட்டு தொலைபேசி வாடிக்கையாளர்கள், மாதாந்தம் ரூ. 30 மற்றும் வரிகள் செலுத்தி, தாங்கள் விரும்பும் இசையை அல்லது பாடலை அழைப்பாளர் ஒருவர் அழைப்பை மேற்கொள்ளும்போது அவருக்கு கேட்கும்வகையில் அமைத்துக்கொள்ள முடியும். பதிவு கட்டணமாக முதல் தடவை ரூ. 40 மற்றும் வரியை செலுத்தி இந்த சேவையை செயல்படுத்தலாம்.

இந்த சேவை அனைத்து நிலையான வீட்டு தொலைபேசி இணைப்புகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன், 1259 எனும் உடனடி தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் (சிங்களம், தமிழ், ஆங்கிலத்தில் அமைந்த தன்னியக்க குரல் IVR சேவை) மூலம் அதனை எளிதாக செயல்படுத்தலாம். வாடிக்கையாளர்கள் மாதத்திற்கு ரூ. 90 மற்றும் வரியை செலுத்தி 'JUKEBOX' (பாடல் பட்டியல் - PLAYLIST) எனும் தெரிவையும் மேற்கொள்ள முடியும். இதன்போது, தெரிவு செய்யப்பட்ட பட்டியலில் உள்ள பாடல்கள், உள்வரும் ஒவ்வொரு அழைப்புகளின் போதும் மாறி மாறி ஒலிக்க விடப்படும்.

இந்த கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த EVOKE INTERNATIONAL நிறுவனத்தின் ஸ்தாபக பிரதம நிறைவேற்று அதிகாரியும் அதன் பணிப்பாளருமான லஹிரு விக்ரமசிங்க, "இந்த முயற்சி தொடர்பில் SLT-Mobitel உடன் கைகோர்ப்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இந்த கூட்டாண்மையானது, இதில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் ஒரு வெற்றிகரமானதாகும். ஏனெனில், நாம் காப்புரிமை பெற்றுள்ள இசைகளை பரந்த அளவிலான பயனர்களிடம் எடுத்துச் செல்ல இதன் மூலம் முடிகிறது. அத்துடன், SLT-Mobitel நிலையான வீட்டு தொலைபேசி வாடிக்கையாளர்களும் அவர்களின் அழைப்பாளர் கேட்கும் இசையை அவர்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எமது கூட்டாண்மையின் மூலம், இலங்கையின் முதற் தர இணைப்பு வழங்குநரான SLT-Mobitel - பொழுதுபோக்கின் முன்னணி வர்த்தகநாமமான நுஎழமந உடன் இணைந்து, மில்லியன் கணக்கான இலங்கையர்களுக்கு நன்மையளிக்கும் வகையிலும், மகிழ்விப்பதற்குமான சேவையை வழங்குமென எதிர்பார்க்கிறோம்.

SLT இன் பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க இது தொடர்பில் தெரிவிக்கையல், "எமது SLT-Mobitel நிலையான வீட்டு தொலைபேசி வாடிக்கையாளர்களுக்காக அழைப்பாளர் இசை (CALLER TUNE) சேவையை அறிமுகப்படுத்துவதானது, வீட்டு தொலைபேசி சேவையில் ஒரு மைல்கல்லாகும். இச்சேவையானது ஒரு தனித்துவமான அனுபவத்தையும், பொழுதுபோக்கிற்கு ஒரு பெறுமதியையும் சேர்க்கும் புத்தாக்கமான சலுகையையும் வழங்குகிறது. இது ஒரு புத்துணர்ச்சியூட்டும் அனுபவமாகும்.

SLT-Mobitel CALLER TUNE சேவை பற்றிய மேலதிக தகவலுக்கு, 1259 இனை அழைக்கவும் அல்லது பார்வையிடவும்: https://slt.lk/en/telephone/vas/callertune

திகதி 19.01.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4652
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,002,420.00
ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கங்கள் 2 5 0 6 5 7 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,938,287.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2947
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,326,580.00
ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கங்கள் 31 40 54 75 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,395,068.00

மெகா பவர் MEGA POWER மேல 10
சீட்டிழுப்பு இலக்கம் 1000 | இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,799,240.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 170,503,246.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து A | சுப்பர் இலக்கம் 25 | வெற்றி இலக்கங்கள் 10 45 67 78
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 02607

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 682
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,758,600.00
ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கங்கள் 11 14 44 60 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 93,272,147.20

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1200
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,094,660.00
வெற்றி இலக்கினம் தனுசு | வெற்றி இலக்கங்கள் 1 0 3 4 2 8 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,746,641.60

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1672
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,966,860.00
சுப்பர் இலக்கம் 10 | வெற்றி இலக்கங்கள் 03 09 50 55 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,679,331.60

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேசியவங்கி N.W.L. முதலீக மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416

அகில இலங்கை சிறுவர் கதைப்போட்டியில் எம்.ரீ.சஜாத் முதலாமிடம்

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து நடாத்திய தேசிய இலக்கிய விழா போட்டியில் 18 வயதுக்கு மேற்பட்ட பிரிவில் ஆக்கங்கள் சமர்ப்பித்தல் சிறுவர் கதை ஆக்கப்போட்டியில் முகம்மது தமீம் சஜாத் அகில இலங்கை ரீதியாக முதலாமிடத்தை பெற்றுக்கொண்டார்.

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா _3 ஹிஜ்ரா வீதியைச் சேர்ந்த பிரபல எழுத்தாளரான இவர். இப்போட்டியில் பிரதேச மற்றும் மாவட்ட மட்டம் சென்று இறுதியாக இப்போட்டியில் இவர் வெற்றி பெற்றுள்ளார். கொரோனா தாக்கத்தினால் பரிசளிப்பு விழா வைபவம் நடைபெறாததால் 2019ஆம்ஆண்டு இடம் பெற்ற போட்டிக்கான பரிசாக பத்தாயிரம் ரூபாவும் சான்றிதழும் தபாலில் அண்மையில் அனுப்பிவைக்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
நீர்ப்பாசன அமைச்சு
MWSIP

மஹாவலி நீர்ப்பாதுகாப்பிற்கான முதலீட்டுத் திட்டம் (MWSIP)
திட்ட முகாமைத்துவ பணிமனை
நிதியிடல்: ஆசிய அபிவிருத்தி வங்கி - Loan 3625-SRI-Tranche 2

விலைமனுக்களுக்கான அழைப்பு

சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்

உட்செல்லும் மற்றும் வெளிச்செல்லும் கட்டமைப்புக்கள் அடங்கலாக போவதன்னவிலிருந்து வெமெடில்ல நீர்த்தேக்கம் வரையிலான 8.5 கி.மீ. நீளமான சுரங்கமொன்றை (2 ஆம் இலக்க சுரங்கம்) நிர்மாணித்தல்

MI/MWSIP/ADB/WORKS/NWPCP-5/ICB/2021/033

1. மஹாவலி நீர்ப் பாதுகாப்பிற்கான முதலீட்டு திட்ட ஆகுசெலவிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது நிதியிடலொன்றை பெற்றுள்ளது. இந்த நிதியிடலின் பகுதியொன்றை மேலே பெயர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்கள் இந்த விலைமனுக்கோரலில் பங்கு பெற்றலாம்.
2. மஹாவலி நீர்ப்பாதுகாப்பிற்கான முதலீட்டுத் திட்டத்தின் திட்ட (''தொழில் வழங்குநர்'') முகாமைத்துவ பணிமனையின் திட்ட பணிப்பாளரினால் பிரதிநிதிப்படுத்தப்படும் நீர்ப்பாசன அமைச்சானது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழுவின் (SCAPC) சார்பாக உட்செல்லும் மற்றும் வெளிச்செல்லும் கட்டமைப்புக்கள் அடங்கலாக போவதன்னவிலிருந்து வெமெடில்ல நீர்த்தேக்கம் வரையிலான 8.5 கி.மீ. நீளமான சுரங்கமொன்றை (2 ஆம் இலக்க சுரங்கம்) நிர்மாணிப்பதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றது - ஒப்பந்தப் பொதி **NWPCP-5** (''வேலைகள்'')
3. சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தனி-கட்ட, இரு-உறை விலைமனுக்கோரல் நடைமுறைக்கேற்றவாறு நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளிலுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் பங்கு பெறலாம்.
4. இந்த விலைமனுக்கோரலில் பின்வரும் பிரதான தகைமைகளையுடைய தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரமே பங்கு பெறுவதற்கு அழைக்கப்படுகின்றனர்.
   - உடனடியான கடந்த ஐந்து (5) வருடங்களுள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தக்களுக்காக பெற்றுக் கொண்ட சான்றழிக்கப்பட்ட மொத்த தொகையாக கணக்கிடப்பட்ட வருடாந்த ஆகக் குறைந்த வருடாந்த நிர்மாண நிதிப்புரள்வான தொகையான 27 மில்லியன் அ.ஐ.டொலரைக் விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்
   - ஒவ்வொரு விடயத்திலும் விலைமனுதாரரின் பங்கு பெறும் பெறுமதியானது 25.5 மில்லியன் அ.ஐ. டொலருக்கு மேற்படின் விலைமனுதாரர் ஒப்பந்தக்காரரொருவராக, கூட்டு முயற்சி பங்குதாரராக அல்லது உபஒப்பந்தக்காரராக ஆகக் குறைந்தது இரண்டு (2) ஒப்பந்தங்களில் உடனடியாக கடந்த எட்டு (8) வருடங்களில் திருப்திகரமாக அல்லது போதுமானளவு மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைகளின் நிகரான தன்மையிலுள்ளதாக இருத்தல் வேண்டும். விலைமனுதாரரின் பங்குபெறுதல் நிகரான தன்மையானது பௌதீக அளவு மற்றும் வேலைகளின் தன்மை, இனம் மற்றும் நிர்மாண முறைமைகளில் இருத்தல் வேண்டும். வேலையின் ஏனைய நிகரானதன்மையானது நிர்மாண தொழில்நுட்பத்தின் குணவியல்புகளுக்காக விலைமனுக்கோரல் ஆவணத்தின் 6 ஆம் பிரிவில் (தொழில்வழங்குநரின் தேவைப்பாடுகள்) விபரிக்கப்பட்டுள்ளன. விலைமனுதாரர் வேலைகளுக்கு உரித்தான திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள தொழில்நுட்ப விடயங்களையும் திருப்தியடைய செய்தல் வேண்டும்.
   - படிவம் FIN-4 இல் சுட்டிக்காட்டியவாறு விலைமனுதாரரின் நிதியிடல் வளங்கள் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக ஒப்பந்தரீதியிலான முற்பண கொடுப்பனவுகள் நீங்கலாக விலைமனுதாரர் அவரிடமுள்ள திரவச் சொத்துக்களை சென்றடையும் வழி அல்லது அவைகள் இருப்பதை அறிவித்தல், ஆகியவற்றை காட்சிப்படுத்தல் வேண்டும்.
5. முழுமையான தகுதித்தன்மை மற்றும் தகைமை தேவைப்படுத்தல்களுக்கு விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தை பார்வையிடல் வேண்டும்.
6. **www.mwsip.lk/information/procurements** என்ற தொடர்புடன் எந்தவொரு ஆர்வமுள்ள விலைமனுதாரரினாலும் பரீட்சிப்பதற்காக விலைமனுக்கோரல் ஆவணத்தின் மென்பிரதியொன்றை PDF உருமாதிரியில் பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்கான அவர்களின் உத்தேசம் மற்றும் விலைமனுவொன்றை சமர்ப்பிப்பதற்கான ஆர்வத்தை **ebid.mwsip@gmail.com** என்ற மின்னஞ்சலூடாக ஸ்கேன் செய்யப்பட்ட அறிவித்தலுடன் திட்ட பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறான அறிவித்தல்கள் கட்டாயமாக விலைமனுதாரரின் தலைப்புக் கடிதத்தில் எழுதப்பட்டு விலைமனுதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியினால் கையொப்பமிட்டு விலைமனுக்கோரல் ஆவணத்தின் டிஜிட்டல் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்காகவும் விலைமனுக்கோரல் செயற்பாட்டின் போது வழங்கப்படவுள்ள மேலதிய தெளிவுறுத்தல்கள் மற்றும் சேர்க்கைக்காக விலைமனுதாரரின் பெயர் மற்றும் முகவரி, தொடர்பு இலக்கம், தொலைநகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றையும் குறிப்பிடல் வேண்டும். விலைமனுதாரரின் கடிதத்தை பெற்றுக் கொண்ட பின்னர் தொழில் வழங்குநர் மீளளிக்கப்படாத கட்டணமான 150,000 இலங்கை ரூபாவை அல்லது 750 அ.ஐ. டொலரை ஐ செலுத்துவதற்காக அவரது வங்கி கணக்கு விபரங்களை அறிவிப்பார். அவ்வாறான பணக்கொடுப்பனவை மேற்கொண்ட பின்னர், விரைவாகவே விலைமனுதாரர் பணம் செலுத்தப்பட்ட விடயத்தை உறுதிப்படுத்தி திட்டப் பணிப்பாளருக்கு அறிவிப்பார். விலைமனுதாரரினால் மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவு செலுத்தப்பட்ட உறுதிப்பாடு கிடைத்தவுடன் தொழில் வழங்குநர் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணத்தை பதிவிறக்கம் செய்வதற்கான தொடர்பை அறிவிப்பார். முழுமையான விலைமனுக்கோரல் ஆவணத்தை பதிவிறக்கம் செய்வதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்று ஆவணங்களின் முழுமையான தொகுதியை பதிவிறக்கம் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டுமென்பதுடன் இந்த பெறுகையின் செயற்பாட்டிலேற்படும் விளைவுகளுக்கும் அல்லது அதன் பின்னர் விலைமனுதாரரின் செயற்பாட்டிலேற்படும் தவறுகளுக்கும் தொழில் வழங்குநர் பொறுப்பேற்கமாட்டார்.
8. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2022 பெப்ரவரி 8 ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் மு.ப. 10 மணிக்கு திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுதாரர்களுடனான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். விலைமனுதாரர்கள் இந்த விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு நேரடியாக சமுகமளித்தல் வேண்டும் (தொழில் வழங்குநருடனான முன்பதிவுக்குட்பட்டதாக ஆகக் கூடியது இரு பிரதிநிதிகள்). விலைமனுதாரர்கள் மெய்நிகராக்கல் முறைமையூடாகவும் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம். விலைமனுதாரர்கள் ஒன்லையின் மாநாட்டு வசதியொன்றை வழங்குவதற்காக 2022 பெப்ரவரி 3 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக மின்னஞ்சல்யொன்றின் வழியாக திட்டப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ள விலைமனுதாரர் தொழில் வழங்குநரின் உறுதிப்பாட்டின் அடிப்படையில் ஒழுங்கு செய்யப்பட்ட முன்னேற்பாடுகளுடன் விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு ஆகக் குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னராக வேலைத்தளத்தை பார்வையிடலாம்.
9. 2022 மார்ச் 18 ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக விலைமனுக்கோரல் ஆவணத்தில் (Section 2 – Bid Data Sheet, ITB 19.1) திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தலைவர் SCAPC என முகவரியிடப்பட்டு கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 493 1/1 என்ற இலக்கத்திலுள்ள மஹாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு திட்டம் (MWSIP) , திட்ட முகாமைத்துவ பணிமனையின் திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தொழில்நுட்ப விலைமனுக்கள் இறுதி நேரம் முடிந்தவுடன் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் மெய்நிகராக்கல் முறைமையூடாகவும் விலைமனு திறத்தல் நிகழ்ச்சியில் பங்கு பெற்றலாம். ஒன்லைனின் மாநாட்டு வசதிக்கான தொடர்பை ஏற்படுத்துவற்காக 2022 மார்ச் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக விலைமனுதாரர்கள் திட்டப் பணிப்பாளருக்கு விண்ணப்பமொன்றை மின்னஞ்சலொன்றின் வழியாக அனுப்பலாம்.
10. விலைமனுக்களை தயாரித்தல், விலைமனு முன்கூட்டத்திற்கு சமுகமளித்தல், வேலைத்தளங்களை பார்வையிடல் மற்றும் விலைமனுக்களை ஒப்படைத்தல் ஆகியவற்றில் விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவு அல்லது செலவினங்களுக்கு தொழில் வழங்குநர் பொறுப்பேற்கமாட்டார்.

திட்டப் பணிப்பாளர்,
திட்ட முகாமைத்துவ பணிமனை,
மஹாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம்,
இல. 493 1/1 T.B. ஜாயா மாவத்தை, கொழும்பு-10, இலங்கை.
தொலைபேசி இல. : +94 11 2675810/ + 94 11 2675882
தொலைநகல் இல. : +94 11 2675227
மின்னஞ்சல் முகவரி : ebid.mwsip@gmail.com

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜனவரி 21
வெள்ளிக்கிழமை

கிளிநொச்சி மாவட்டம்

சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த இராணுவ காவலரண்

கிளிநொச்சி குறூப் நிருபர்

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த முடியாமையால் பல்வேறு சவால்களை மக்கள் எதிர்கொண்டனர்.

இதனையடுத்து இவற்றை கட்டுப்படுத்த இராணுவ காவலரண்களை அமைக்க தற்சமயம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இரணைமடு குளத்தின் கீழ் உள்ள ஆற்றுப்படுகையில் தொடர்ந்தும் சட்டவிரோத மணல் அகழ்வு பாரிய ளவில் இடம்பெற்று வருகின்றது.

நேற்றுமுன்தினம் அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட இடர் முகாமைத்துவ பணிப்பாளர், கரைச்சி பிரதேச செயலாளர், இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் அடங்கிய குழுவினர் நேரடியாக சென்று நிலைமைகளை அவதானித்துள்ளனர்.

இதன்போது நிலைமைகளின் ஆபத்தினை உணர்ந்துகொண்ட இவர்கள் குறித்த பகுதிகளில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த இராணுவ காலரண்களை அமைக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளனர்.

வடக்கு ஆளுநர் பிரித்தானிய அமைச்சருக்கு இடையில் சந்திப்பு

யாழ்.விசேட நிருபர்

தெற்காசியா மற்றும் கொமன்வெல்த் துக்கு பொறுப்பான பிரித்தானிய அமைச்சர் அகமட் விம்பில்டன் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை சந்தித்து கலந்துரையாடினார்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், வடக்கு மாகாணத்திற்கான திட்டங்கள், நீதி மற்றும் பொறுப்புக்கூறலின் அவசியம் குறித்து கலந்துரையாடப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விஜயத்தின்போது இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஷாரா ஹில்டன் இணைந்திருந்தார்.

மன்னாரில் சுதந்திர தினத்துக்கான முன்னேற்பாடுகள்

தலைமன்னார் விஷேட நிருபர்

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை இம்முறையும் சிறப்பிப்பதற்கான ஏற்பாடுகள் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் (19.01.2022) மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் ஸ்ரான்லி டிமெல் தலைமையில் கூட்டமொன்று இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் திணைக்கள அதிகாரிகள் மற்றும் நான்கு படைகளின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். தற்பொழுது மன்னாரில் கொரோனா தொற்று கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றபோதும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதனின் அறிவுரைக்கு அமைவாக மட்டுப்படுத்தப்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதற்கமைவாக அழைப்பிதழ் அனுப்பப்பட்ட முக்கியஸ்தர்கள் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ், இராணுவம் மற்றும் கடற்படையினர் கொண்ட தலா 25 படையினரைக் கொண்ட அணிவகுப்புக்களும் மட்டுப்படுத்தப்பட்ட பாடசாலை பேண்ட் இசை குழுவினரும் சாரணியரும் இதில் கலந்து கொள்ள விருக்கின்றனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடுதலும் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அருள்மிகு ஸ்ரீசந்திர சேகரப் பிள்ளையார் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம்

கரவெட்டி தினகரன் நிருபர்

யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீசந்திர சேகரப் பிள்ளையார் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகமும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகமும் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.32மணி முதல் 11.22மணி வரையிலான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் கடந்த புதன்கிழமை காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று

வருகின்றன. பக்தர்கள் எதிர்வரும் 22ஆம் திகதி நாளை சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்தலாம். இக்கும்பாபிஷேகத்தை கல்வியங்காடு சிவாச்சார்ய திலகம் சிவஸ்ரீ சதா இராதாகிருஷ்ணக்குருக்கள் பிரதிஸ்டா பிரதம குருவாக இருந்து நடாத்தி வைப்பார்.

கும்பாபிஷேகத்திற்கான கிரியைகள் ஆரம்பமான நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 6.45மணியளவில் ஆலயத்தின் மேற்குப் புறவாசலில் புதிதாக அமைக்கப்பட்ட அலங்கார வளைவு திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. நேற்று வியாழக்கிழமை பஞ்சதள நாய கன் இறுவட்டும் வெளியிட்டு வைக்கப் பட்டது.

திறன் வகுப்பறை திறப்பு விழா

வவுனியா தெற்கு. வடக்கு வலயங்களைச் சேர்ந்த 12 பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைகளை IMHO–USA, Ratnam Foundation UK என்பன இணைந்து வழங்கியுள்ளது. அதுமட்டுமன்றி இப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு சிறந்த வளவாளர்களினால் பயிற்சிகளையும் வழங்கிவருகின்றனர். இவற்றுள் வவுனியா தெற்கு வலயத்திலுள்ள வெங்கலச் செட்டிகுளம் கோட்டத்தை சேர்ந்த பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட ஏழு திறன் வகுப்பறைகளுள் இறுதியாக மூன்று பாடசாலைகளுக்கான திறன் வகுப்பறைகள் கடந்த 6ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டன.

வவுனியா வீரபுரம் மணிவாசகர், மகாவித்தியாலயம், அடைக்கல அன்னை வித்தியாலயம், அருவித் தோட்டம் சிவானந்தா வித்தியாலயம் என்பனவற்றில் இந்த வகுப்பறைகள் திறந்துவைக்கப்பட்டன.

வவுனியாவில் தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

ஓமந்தை விஷேட நிருபர், வவுனியா விசேட நிருபர்

'டெங்கு நோயிலிருந்து எம்மை பாதுகாப்போம். நுளம்பு பெருகும் இடங்களை இல்லாமல் செய்வோம்' எனும் தொனிப்பொருளில் நகரசபையினரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் வவுனியா பூந்தோட்டம் பெரியார்குளம் பகுதியிலுள்ள கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நேற்றும் (20) இன்றும் (21) டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. அந்த வகையில் வவுனியா நகரசபையினரினால் முன்னெடுக்கப்பட்ட இவ்வேலைத்திட்டம் நகரசபையின் தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ.சரத்சந்திர, வவுனியா மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் தெய்வேந்திரம் ரதீஸ்வரன், வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.மகேந்திரன், வவுனியா பிராந்திய தொற்று நோயியலாளர் வைத்தியர் லவன் மற்றும் விருந்தினர்களாக நகரசபை உறுப்பினர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

நகரசபை செயலாளர் இ.தயாபரனின் நெறிப்படுத்தலின் கீழ் முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு செயற்திட்டத்தில் டெங்கு பெருகும் இடங்களில் காணப்படும் குப்பைகளை அகற்றி ஆரம்பித்து வைத்தனர். அதனைத்தொடர்ந்து அப்பகுதி பொது சுகாதார பரிசோதகர் வழிகாட்டலில் வவுனியா பொலிஸாரின் ஒத்துழைப்புடன் பூந்தோட்டம், பெரியார்குளம், குடியிருப்பு ஆகிய பகுதிகளில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டது.

வீடுகளில் டெங்கு பரவும் இடங்கள் அடையாளம் காணப்படின் வீட்டின் உரிமையாளருக்கு முதலாவது எச்சரிக்கை வழங்குவதுடன், தேவையற்ற கழிவுகள் நகரசபை வாகனத்தில் ஏற்றப்பட்டது. மேலும் கிணறுகளில் மீன்கள் விடும் நடவடிக்கையும் இடம்பெற்றிருந்ததுடன் வீதியோரங்களில் காணப்படும் கழிவுகள் நகரசபை சுகாதார பணியாளர்களினால் அகற்றப்பட்டது.

வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு நேற்று (20) நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டு, நிர்வாக மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக இருந்த எல். இளங்கோவன் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார். உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக இருந்த ஆர். வரதீஸ்வரன் மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக மாற்றப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளராக இருந்த பா.செந்தில்நந்தனன் பேரவைச் செயலாளராக மாற்றப்பட்டுள்ளார். ஆளுநரின் செயலாளராக இருந்த சரஸ்வதி மோகனா சுகாதார அமைச்சின் செயலாளராக மாற்றப்பட்டுள்ளார். பேரவைச் செயலாளராக இருந்த பி.குகநாதன் பிரதிப் பிரதம பொது நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். இதேவேளை, ஆளுநரின் செயலாளராக எவரும் நியமிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐஸ் போதை பொருளுடன் கடற்கரையில் ஒருவர் கைது

தலைமன்னார் விஷேட நிருபர்

தலைமன்னார் பாக்குநீர் ஊடாக கடத்தி வரப்பட்டதாக கூறப்படும் ஐஸ் என்ற போதை பொருளுடன் இளைஞர் ஒருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது,

புதன்கிழமை (19.01.2022) பிற்பகல் தலைமன்னார் கிராமத்திலுள்ள கடற்கரை பகுதியில் வெளிக்கள படகு ஒன்றை கடற்படையினர் சந்தேகத்தின் நிமித்தம் சோதனையிட்டபோது அதற்குள் இருந்து 485 மில்லி கிராம் ஐஸ் என்ற போதை பொருளை கைப்பற்றியுள்ளனர்.

இதன் நிமித்தம் தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன் சந்தேகத்தின் பேரில் அவ்விடத்தில் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞனையும் கைப்பற்றப்பட்ட போதைப் பொருளையும் கடற்படையினர் தலைமன்னார் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து பொலிஸார் சந்தேகநபரை விசாரணைக்குட்படுத்தியுள்ளதுடன் இவரையும் கைப்பற்றப்பட்ட போதை பொருளையும் மன்னார் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

போதைப் பொருள் தலைமன்னார் பாக்குநீர் வழியாக கடத்தி வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதில் வக்பின் வகிபாகம்

யூ.கே. றமீஸ் எம்.ஏ (சமூகவியல்)

வக்ப் என்பது ஒருவகை நிலையான தர்மமாகும் (ஸதகதுல் ஜாரியா). பல வருடங்கள், பல தசாப்தங்கள் என்றில்லாமல் பல நூற்றாண்டுகளும் கூட பல தலைமுறையினருக்கு நன்மை பயக்கும் வகையில் நீடித்து நிலைக்கக்கூடிய ஸதகாக்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. அதாவது நிலங்கள், கட்டடங்கள், கிணறுகள், மரங்கள் போன்ற குறிப்பிட்ட பொருள் அப்படியே தொடர்ந்திருக்க அதன் பயன்கள் தொடராகக் கிடைக்கப்பெறுவதனை இது குறிக்கும். இதனை 'ஹப்ஸ்'என்ற சொற்பிரயோகத்தாலும் அழைப்பர்.

'வக்ப்' என்ற முறைமைக்கு தனித்துவமான சில பண்புகள் உள்ளன. அவை இஸ்லாம் அறிமுகப்படுத்திய முறைமைகளாகும். இதனை அல்லாஹ்வே அறிமுகம் செய்தான். இதன் அடிப்படைகள் அல்குர்ஆன் மற்றும் ஸுன்னாவிலிருந்தே தோன்றியுள்ளன. இவை வரலாறு நெடுகிலும் அறுபடாது தொடர்ந்து நிலைத்து நிற்கக்கூடியவையாக உள்ளன. இது மனிதர்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய முறைமையாகும். சில போது தாவரங்கள், விலங்குகளின் தேவைகளை கூட இவை நிறைவேற்றுகின்றது.

நபி (ஸல்) காலத்தில் 'வக்ப்'

உமர் (ரழி) அவர்களுக்கு கைபர் பிரதேசத்தில் மிகப் பெறுமதியான ஒரு நிலம் கிடைத்தது. இது தொடர்பில் நபி (ஸல்) அவர்களிடம் ஆலோசனை கேட்டபோது, அதனை வக்ப் செய்யுமாறும் அவ்வாறு செய்தால் அதனை விற்கவோ, வாங்கவோ, அதனை கொடையாக கொடுக்கவோ, வாரிசு சொத்தாக வழங்கவோ முடியாது என்றும் ஆலோசனை கூறினார்கள். அதன்படி அச்சொத்து ஏழைகள், உறவினர்கள், அடிமைகள், பயணிகள், விருந்தாளிகள் போன்றோரின் தேவைகளுக்காக வழங்கப்பட்டது. அதனை நிர்வகிப்பவர்கள் அதிலிருந்து பயன் பெறலாம், நண்பர்களுக்கும் கொடுக்கலாம். ஆனால் உரிமை கொண்டாட முடியாது' என்றார்கள்.

(ஆதாரம்: புகாரி2772, முஸ்லிம் 1632)

'உங்களுக்கு விருப்பமானவற்றை நீங்கள் செலவு செய்யாத வரை நன்மைகளை அடைந்து கொள்ளவே முடியாது' என்ற வசனம் அருளப்பட்ட போது செல்வந்தரான அபூதல்ஹா (ரழி) அவர்கள் தனக்கு மிகவிருப்பமான 'பைருஹா' என்ற தோட்டத்தை வக்ப் செய்தார்கள். **(ஆதாரம்: புகாரி 1461, முஸ்லிம்998)**

நபியவர்களும் தோழர்களும் மதீனாவுக்கு வந்த போது ரூமா என்பவரின் கிணற்றில் மாத்திரமே சுவையான நீர் காணப்பட்டது. அக்கிணற்றை வாங்கி வக்ப் செய்பவருக்கு சுவர்க்கம் கிடைக்கும்' என்று குறிப்பிட்டபோது உஸ்மான்(ரழி) அவர்கள் அதனை 35,000 திர்ஹம்களுக்கு வாங்கி வக்பாக வழங்கினார்கள். (ஆதாரம்: திர்மிதி3703, புகாரி 2778 மற்றும் நைலுல் அவ்தார் ஷவ்கானி 624). இந்த 'வக்ப்' இன்று வரை பராமரிக்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வருமானம் அநாதைகள், ஏழைகளுக்காக இன்றுவரை செலவழிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

வக்ப் செய்யகூடியவை

அசையாத சொத்துக்களான நிலங்கள், கட்டிடங்கள், மரங்கள், கிணறுகள் மாத்திரமன்றி அசையும் சொத்துக்களான கால்நடைகள், ஆடைகள், நாணயங்கள், புத்தகங்கள், உணவுப் பொருட்கள், கருவிகள், தளபாடங்கள் போன்றவற்றையும் 'வக்ப்' செய்ய முடியும்' என்று இமாம் இப்னு குதாமா (ரஹ்) அவர்கள் கருதுகின்றார்கள். **(ஆதாரம்: முக்னி 8ஃ229, 231)**

எந்தெந்த விடயங்களுக்காக வக்ப் செய்ய முடியும் என்ற கோணத்தில் நோக்கினால் இஸ்லாமிய வரலாற்றில் ஆச்சரியமான 'வக்ப்' களை எம்மால் அவதானிக்க முடியும். உடைந்த பாத்திரங்களை கொடுத்து புதிய பாத்திரங்களை பெற்றுக்கொள்ளல், கட்டாக்காலி நாய்களை பராமரித்தல், திருமணங்களில் அணிவதற்கான நகைகளை இரவலாக விநியோகித்தல், கணவன் மனைவிக் கிடையே பிணக்குகள் தோன்றுகின்ற போது கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவுதல், நோயாளிகளுக்கு ஆறுதலை ஏற்படுத்துவதற்கான வார்த்தைகளை பேசி ஆறுதலையும் குணமாகுவேன் என்ற உணர்வையும் ஏற்படுத்துவதற்காக ஆட்களை நியமித்து 'வைத்தியர் என்ன சொன்னார்', 'விரைவில் குணமாவதாக சொன்னார்' போன்ற வசனங்களை செவிமடுக்க செய்தல், குளிப்பதற்கான நீர்க்கட்டணத்தை செலுத்த முடியாதவர்களுக்கு உதவுதல், இடம்பெயர்ந்து வரக்கூடிய பறவைகளை பராமரித்தல், நோய்வாய்ப்பட்ட மிருகங்கள் பறவைகளை பராமறித்தல், சிறுவர்களுக்கான பாற்கட்டிகளை விநியோகித்தல் அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

வக்பின் நோக்கங்கள்

மனித முயற்சிகளை மறுமையை நோக்கி நகர்த்துதல், அருள் செய்தவனுக்கு நன்றி செலுத்துதல், செல்வத்தின் மீதான பேராசையிலிருந்து விடுவித்து உள்ளத்தை தூய்மைப்படுத்தல், சமூக தேவைகளை நிவர்த்தி செய்தல், எதிர்காலம் பற்றிய உணர்வை ஏற்படுத்துதல், தமது விவகாரங்களை தாமாகவே ஒழுங்குபடுத்திக் கொள்கின்ற பக்குவத்தை வழங்குதல் போன்ற விடயங்களை 'வக்ப்' என்ற முறைமைக்கான நோக்கங்களாக குறிப்பிடலாம்.

நபி (ஸல்) அவர்கள் தான் வக்ப் என்ற முறைமையை ஆரம்பித்து வைத்ததோடு அது தொடர்பான வழிகாட்டல்களை வழங்கி ஆசையூட்டினார்கள். இவ்விடயத்தில் பலரை பலவிதமாகத் தூண்டினார்கள். மரணத்தின் பின்னர் ஒரு மூஃமினுக்கு வந்து சேருபவைகளாக கீழ்வரும் விடயங்களை சொல்லிக்கொடுத்தார்கள். கற்பித்தல், பரப்பிய அறிவு, ஸாலிஹான பிள்ளை, வாரிசாக விட்டுச்சென்ற அல்குர்ஆன் பிரதி, கட்டிய பள்ளிவாசல், பயணிகளுக்காக கட்டியவீடு, அவர் அமைத்த நீரோடை, அவரது வாழ்வில் அவர் செய்த ஸதகாக்கள் (ஆதாரம்: ஸுனன் இப்னு மாஜா238)

ஸஹாபாக்கள் அவர்களது காலத்தில் போட்டிபோட்டுக் கொண்டு, சமூகத்தில் தேவை உள்ளவர்களின் அவசிய தேவைகளை நிறைவேற்றும் விதமாக அவர்களது வக்புகள் அமைந்திருந்தன. பகீர்கள், மிஸ்கீன்கள், அநாதைகள், அடிமை விடுதலை போன்ற அடிமட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தலை மையப்படுத்தி அவர்கள் செயல்பட்டார்கள். அதேபோன்று பிள்ளைகள் உறவினர்களுக்காகவும் வக்ப் செய்தார்கள். இதனை அடிப்படையாக கொண்டு பொதுவான வக்ப் 'வக்புல் கைரி' என்றும் குறிப்பான வக்ப் (பிள்ளைகள், உறவுகள்) 'வக்புல் தர்ரி' என்றும் அழைக்கப்படுகிறது.

காலத்தின் சகட ஓட்டத்துக்கு அமைய இது வளர்ச்சியடைந்து பல்வகைப்பட்டதாக மாறியது. சமூக விடயங்களில் அதிகமான நிதிப் பங்களிப்பை வக்ப் என்ற முறைமை செய்தது. இதன் கீழ் பள்ளிவாசல்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், உணவு பரிமாறப்படும் இடங்கள் என்பன அமைக்கப்பட்டன. கல்வி, ஆரோக்கியம், உணவு, நீர் வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. அநாதைகள், விதவைகள், அடிமைகள், பகீர்கள், மிஸ்கீன்கள், கடன்காரர்கள், பயணிகள் போன்றோர்கள் பராமரிக்கப்பட்டார்கள். வக்பின் மூலம் கோட்டைகள், பல்கலைக் கழகங்கள் கூட அமைக்கப்பட்டன. மனிதர்கள் மாத்திரமன்றி தாவரங்கள், விலங்குகள் கூட பயன்பெறும் விதமாக வக்ப் என்ற முறைமையை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறு வக்ப் நிறுவனமயப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான சட்டங்களும் முறைமைகளும் கூட வளர்ந்துள்ளன.

வக்பின் வகைகள்

வக்பை மூன்று வகையாகப் பிரிப்பர். 'வக்புல் கைரி' எனப்படும் அடிப்படை நிலைத்திருக்க பயனை தொடர்ந்து பெற்றுக்கொள்கின்ற நிலையான தர்மத்துடன் தொடர்பான வக்பை இது குறிக்கும். இது சாதாரணமாக சமூகத்தில் காணப்படுகின்றது. இரண்டாவது 'வக்புல் அஹ்லி' அல்லது 'வக்புத் துர்ரி' எனப்படுகிறது. ஒருவர் தனது சொத்தை அல்லது அதன் ஒரு பகுதியை தனது குடும்பத்தினருக்கு அல்லது பிள்ளைகள், உறவினர்கள் போன்றோருக்கு வக்பாக வழங்குவதை குறிக்கும். அடுத்தது இவ்விரு முறைமைகளும் இணைந்த 'வக்புல் முஷ்தரக்' என்ற 'இணைந்த வக்ப்' ஆகும். ஏழைகள், அநாதைகள், விதவைகளுக்கு 80 விகிதமும் தனது பிள்ளைகளின் தேவைகளை கருத்தில் கொண்டு 20 விகிதமும் செலவு செய்வது இதற்கொரு உதாரணமாகும். ஸஹாபாக்கள் இவ்வகை வக்பை அதிகமாக செய்துள்ளார்கள்.

வக்பை வேறு வகையிலும் பிரிப்பார்கள். தற்காலிகம் நிரந்தரம், தனியாள்கூட்டு, பொருட்கள் சேவைகள், வக்புல் இஸ்திஃமால்வக்புல் இஸ்திஃலால் (பாடசாலை போன்ற இடங்களை பயன்படுத்தவதற்கான வக்ப், ஒரு பொருளிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தை (உதாரணமாக ஒரு நிலத்தில் கிடைக்கின்ற வருமானத்தை செலவு செய்வது) இவ்வாறு பலவாறாக பிரிப்பார்கள். ஆகவே கால ஓட்டத்துக்கு ஏற்ப தேவையான புதிய 'வக்ப்' களை உருவாக்குதல், 'வக்ப்'களை உருவாக்குவில் பெரும் வகிபங்கை வழங்கக் கூடிய செல்வந்தர்களுடன் சாதாரண பொதுமக்களின் பங்களிப்புகளையும் இணைத்தல், வக்ப் சொத்துகளை இலாபமீட்டக்கூடிய வகையில் பராமரித்தல் போன்ற விடயங்களை முன்னெடுப்பதன் மூலமும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ளலாம்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு இஸ்லாம் அளித்துள்ள முக்கியத்துவம்

உலகம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளில் முதன்மையானது சுற்றுச்சூழல் சீர்கேடு ஆகும். இது குறித்தும், பூமி வெப்பமடைவது குறித்தும்தான் எல்லா மட்டத்தினரும் இன்று அதிகம் கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றனர். தொழிற்சாலைக் கழிவுகள், இரசாயன பசளை, பூச்சிக்கொல்லி மருந்து பாவனை, கதிரியக்க கசிவுகள், மலைகள் காடுகள் அழிப்பு, நீர்நிலைகளை அசுத்தப்படுத்தப்படல், பிளாஸ்ரிக் பயன்பாடு, வாகனங்களின் புகை போன்ற பல்வேறு காரணங்களினால் சுற்றுச்சூழல் பெரிதும் அசுத்தமடைந்துள்ளன. இந்நிலைமைக்கு மனிதனின் தவறானதும் ஒழுங்கு முறையற்றதுமான செயற்பாடுகள் தான் பெரிதும் பங்களித்திருக்கின்றன. இந்த நிலையிலிருந்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும். அது தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தப்பட வேண்டிய காலமிது.

அந்த வகையில் அல்லாஹ்தஆலா தன் அருள் மறையாம் அல் குர்ஆனில், 'படைப்புகள் அனைத்தும் இறைவனின் குடும்பம். அவனது குடும்பத்தின் மீது அன்பு காட்டுபவனே அவனது படைப்பில் அவனுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவன்' என்று குறிப்பிட்டிருக்கின்றான்.

இவ்வசனத்தின் ஊடாக படைப்புகள் என்றால் மனிதன் மாத்திரமல்ல என்ற செய்தி தெளிவாக வழங்கப்பட்டிருக்கின்றது. அதனால் மனிதன் உள்ளிட்ட மரஞ்செடி, கொடி, தாவரங்கள், காடுகள், மலைகள், நீர்நிலைகள், உயிரினங்கள் உள்ளிட்ட அனைத்து படைப்புகளுமே அவனது படைப்புகள் தான். அதனால் அந்த எல்லாப் படைப்புகள் மீதும் அன்பும் கருணையும் காட்ட வேண்டும். அவ்வாறானவர்களை இறைவன் விரும்புகிறான்.

மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களும் வாழ்வதற்கு ஏற்ற கட்டமைப்பு ஒழுங்கில் தான் அவன் பூமியைப் படைத்து ஒழுங்கமைத்து வைத்திருக்கின்றான். இது சீராக இயங்க நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவை அவசியமானதாக இருக்கிறது. இவற்றின் ஒழுங்கமைப்பில் மனிதன் தம் சுயநலத்திற்காக சீர்கேடுகளை ஏற்படுத்தும் போது தான் சுற்றுச் சூழலில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

உலகில் மனித வாழ்வு நிலைத்திருக்க, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மிகவும் அவசியமானது. அதற்கு ஏற்பவே மனிதனும் சுற்றுச்சூழலும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்ததாகப் படைக்கப்பட்டு பரிபாலிக்கப்படுகின்றன. இருப்பினும் இவ்வாறு சிறப்பு பெற்று விளங்கும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதற்கு அபிவிருத்தி என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் திட்டமிடலற்ற செயற்பாடுகள் முதன்மைக் காரணிகளாக விளங்குகின்றன. குறிப்பாக அபிவிருத்தி என்ற பெயரில் காடுகள் அழிக்கப்படுவதும், மரங்கள் வெட்டப்படுவதும், சதுப்பு நிலங்கள் நிரப்பப்பட்டு கட்டடங்கள் எழுப்பப்படுவதும் முக்கிய காரணிகளாக விளங்குகின்றன. நீர்நிலைகள் கழிவுகள் கொட்டப்பட்டும் இன்ன பிற காரணிகளாலும் அசுத்தமடையச் செய்யப்படுகின்றன. ஆனால் இச்செயற்பாடுகள் அனைத்தும் இஸ்லாத்திற்கு முரணானவையாகும். மரம் நடுவதையும், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதையும் இஸ்லாம் பெரிதும் வலியுறுத்தியுள்ளது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'ஒருவர் ஒரு மரத்தினை நட்டு அல்லது விதைவிதைத்து விவசாயம் செய்து, அதிலிருந்து (அதன் விளைச்சலை அல்லது காய்கனிகளை) ஒரு பறவையோ, ஒரு மனிதனோ அல்லது பிராணியோ உண்டால் அதன் காரணத்தால் ஒரு தர்மம் செய்ததற்கான பிரதிபலன் அவருக்கு கிடைக்கும்' என்று கூறினார்கள். (ஆதாரம்: புகாரி).

மற்றொரு சந்தரப்பத்தில், 'அடுத்த வினாடியில் உலகம் அழியும் என்றிருந்தாலும் ஒரு ஈத்த மரக்கன்று என் கரத்தில் இருந்தால் அதை நான் நட்டு விடுவேன்' என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும், 'வழிப்போக்கர்களுக்கும், பிராணிகளுக்கும், நிழல் தரக்கூடிய வகையில் வெட்டவெளியில் நிற்கக்கூடிய மரம் ஒன்றை யார் அநியாயமாக வெட்டுகிறாரோ அவரது தலையைப் பிடித்து இறைவன் நரகில் தள்ளுவான்' என்றும் இஸ்லாம் சுட்டிக்காட்டியுள்ளது.மரங்களை நடுவதற்கு மாத்திரமன்றி குளங்கள், குட்டைகள், ஆறுகள், ஓடைகள், கிணறுகள் உள்ளிட்ட அனைத்து இயற்கை வளங்களையும் பாதுகாப்பு குறித்து இஸ்லாம் முக்கியத்துவம் அளித்திருக்கின்றது. 'அதனால் பூமியில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு அதில் நாசம் செய்யாதீர்கள்' என்றும், 'அவன்தான் உங்களை பூமியிலிருந்து படைத்தான், அதனை வளப்படுத்து மாறு கேட்டுக்கொண்டான்' என்றும் அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கின்றது.

அதன் காரணத்தினால் பூமியை வளப்படுத்த வேண்டுமானால் அதனைப் பாதுகாக்க வேண்டுமானால் பூமியைத் தாங்கி நிற்கும் இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும். அதனால் சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் விடயங்களைத் தவிர்த்து மரங்கள் நடுவதிலும், காடுகள் அழிக்கப்படுவதைத் தடுப்பதிலும், காற்று மாசு உள்ளிட்ட பிரச்சினைகளை தவிர்ப்பதிலும் அதிக அக்கறை எடுத்துக் கொள்வோம். அதன் ஊடாக இம்மையிலும் மறுமையிலும் நன்மைகள் பெற்றுக்கொள்ளலாம்.

பிந்த் இஸ்மாயில் ...

பாவம் செய்ய வேண்டுமா?

இப்றாஹீம் இப்னு அத்ஹம் (றஹ்) முன்வைத்த நிபந்தனைகள்

ஒரு நாள் இப்றாஹீம் இப்னு அத்ஹம் (றஹ்) அவர்களை சந்திக்க இளைஞர் ஒருவர் வந்தார். அந்த இளைஞர் அத்ஹம் (ரஹ்) அவர்களிடம் பின்வருமாறு வினவினார்.

'ஷெய்க் அவர்களே, என்னால் பாவம் செய்யாமல் இருக்க முடியவில்லை. எனது உள்ளம் எப்போதும் என்னை பாவம் செய்ய தூண்டிக் கொண்டே இருக்கின்றது. எனக்கு நீங்கள் அறிவுரை கூறுங்கள்' என்றார்.

இதைக் கேட்ட இமாம் அவர்கள், 'மகனே! நீர் பாவம் செய்யலாம். ஆனால் ஐந்து நிபந்தனைகள் உண்டு. அவற்றை உன்னால் பேண முடியும் என்றால் நீர் பாவம் செய்யலாம்' என்றார்கள்.

அதற்கு அந்த இளைஞர், 'அந்த நிபந்தனைகள் என்ன? சொல்லுங்கள் இமாம் அவர்களே' என்று கேட்க, அவர்கள் அவற்றை ஒவ்வொன்றாக சொல்லலானார்கள்.

'முதலாவது நிபந்தனை, நீ பாவம் செய்வதாக இருந்தால் அல்லாஹ்வின்றிஸ்க்கை புசிக்கக்கூடாது.'

அதற்கு அவ்விளைஞர், 'றிஸ்கின் சொந்தக்காரன் அல்லாஹ் அல்லவா? வேறு யாரிடமிருந்தும் அதனைப் பெறமுடியாதே' என்றார். அதற்கு இமாம் அவர்கள், 'அல்லாஹ் அருளிய ஆகாரத்தைப் புசித்து கொண்டு நீர் எப்படி அவனுக்கு மாறு செய்யலாம்? பாவம்செய்யமுடியும்?'என்றார்கள்.

அடுத்து இரண்டாவது நிபந்தனை, 'நீர் பாவம் செய்ய வேண்டுமானால் அல்லாஹ்வின் பூமியிலிருந்து வெளியேறி வேறொரு இடத்திற்குச் சென்று, அங்குதான் நீர் பாவம் செய்ய வேண்டும்.' இதைக் கேட்ட அவ்விளைஞர், 'பூமி, வானம் உட்பட முழு பிரபஞ்சமும் அல்லாஹ்வுக்கே சொந்தம். இப்படி இருக்க, நான் எங்கு போய் பாவம் செய்வது?' என்றார். அதற்கு இமாம் அவர்கள், 'அல்லாஹ் அருளும் ஆகாரத்தை புசித்துக் கொண்டு, அவனது பூமியில் வாழ்ந்து கொண்டு அவனுக்கு நீர் எப்படி மாறுசெய்யலாம்?' என்றார்கள்.தொடர்ந்து மூன்றாம் நிபந்தனையைக் கூறிய இப்றாஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள், 'நீர் பாவம் செய்ய விரும்பினால் அல்லாஹ் உன்னைப் பார்க்காத ஓர் இடத்துக்கு நீர் செல்ல வேண்டும். அங்கே போய் நீர் பாவம் செய்யலாம்' என்றார். இதைக் கேட்ட அவ்விளைஞர், 'இது எப்படி சாத்தியம்? அல்லாஹ் பார்க்காத, கேட்காத ஓர் இடம் எங்கும் இல்லையே" என்றார்.

அப்போது அவர், 'அல்லாஹ் வழங்கிய ஆகாரத்தைப் புசித்துக் கொண்டு, அவனது பூமியில் வாழ்ந்து கொண்டு, அவன் பார்த்திருக்க அவனுக்கு எப்படி உன்னால் மாறு செய்ய முடியும்?' என்று கூறிவிட்டு அடுத்த நிபந்தனையைக்குறிப்பிட்டார்கள்.

'மலக்குல் மௌத்' ஒருநாள் உனது ரூஹைக் கைப்பற்ற வருவார் அல்லவா? அச்சந்தர்ப்பத்தில் அவருடன் பேசி, தௌபா செய்வதற்கும் நற்காரியங்களில் ஈடுபடுவதற்குமான ஓர் அவகாசத்தை உன்னால் பெற்றுக்கொள்ள முடியும் என்றிருப்பின்நீர்பாவம்செய்யலாம்'.அதைக்கேட்ட இளைஞர், 'அது எப்படி சாத்தியமாகும்? ஒருவரது அஜல்தவணை வந்து விட்டால் அவருக்கு எந்த அவகாசமும்கிட்டப்போவதில்லையே'என்றுசொன்னார்.அதற்கு இமாம் அவர்கள், 'மரணம் திடீரென்று எதிர்பாராத விதமாக வரும். மலக்குல் மௌத் அவகாசம் தரப்போவதுமில்லை என்றிருக்கும் போது நீர் எப்படி தப்பிக்க முடியும்' என்று சொல்லிவிட்டு கடைசி ஐந்தாம் நிபந்தனையையும் அவ்விளைஞருக்கு பின்வருமாறு கூறினார்கள்.'

நாளை மறுமையில் ஸபானியாக்கள் உன்னை பிடித்து நரகத்திற்கு இழுத்துச் செல்ல வரும் போது நீர் அவர்களுடன் போராடி அவர்களின் பிடியிலிருந்து தப்பித்து உன்னால் சுவனம் நுழைய முடியும் என்றால் நீர் பாவம் செய்லாம்' இதற்கு அந்த இளைஞர்,'அவர்களின் பிடியிலிருந்து யார் தான் தப்ப முடியும்? அது ஒருக்காலும் நடக்காதே' என்றார். 'இளைஞரே! உன்னைப் பார்த்து நான் ஆச்சரியப்படுகின்றேன்.

அல்லாஹ் தந்த உணவை உண்டு, அவனது பூமியில் வாழ்ந்து, அவன் உன்னை என்றும் எப்போதும் பார்த்திருக்கும் நிலையில், மரணத்தின் பிடியிலிருந்தும் உன்னால் தப்ப முடியாத போது, நரகத்திலிருந்து தப்பி சுவனம் நுழையும் சக்தியைப் பெறாத நீர் எப்படி அல்லாஹ்வுக்கு மாறு செய்யலாம்? எவ்வாறு பாவங்களில் ஈடுபடலாம்? என்று வினவினார்கள்.

இவற்றை செவியேற்ற அவ்விளைஞர், 'போதும் இமாம் அவர்களே, போதும். இதற்கு மேல் எந்த விளக்கமும் எனக்கு தேவையில்லை. நான் இதோ பாவமன்னிப்புக் கோருகிறேன். இனி எந்தப்பாவத்தையும் நான் செய்யமாட்டேன்' என்று உறுதியளித்து விட்டு இமாம் அவர்களிடமிருந்து விடை பெற்றுச் சென்றார்.

கிழக்கின் குரல்

டொலர் பற்றாக்குறையை நிவர்த்திக்க உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்

(முள்ளிப்பொத்தானை குறூப், ரொட்டவெவ குறூப் நிருபர்கள்)

நாட்டில் தற்போது நிலவும் டொலர் பற்றாக்குறையை நிவர்த்திக்க உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்த வேண்டும் என, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

டொலர் தட்டுப்பாடு காரணமாக அனைத்து அத்தியாவசியமற்ற பொருட்களும் நிறுத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். கந்தளாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய COOP FRESH விற்பனை நிலையத்தை புதன்கிழமை (19) திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், நாங்கள் இன்று டொலர் நெருக்கடியைப் பற்றி பேசுகிறோம்.

டொலர் நெருக்கடியால் அத்தியாவசியப் பொருட்களை மட்டுமே இறக்குமதி செய்கிறோம். தேவையற்ற பொருட்களை இறக்குமதி செய்வதில்லை. அதற்கு பதிலாக நமது உள்ளூர் தயாரிப்புகளை மேம்படுத்த வேண்டும். கொவிட் தொற்று காரணமாக நாடு சிதைந்த போது, கூட்டுறவுத் துறை மதிப்புமிக்க சேவையை செய்தது.

எமது மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களும் மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு நடமாடும் வாகனங்களை பயன்படுத்தின என்றார்.

நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, விவசாய அமைச்சின் செயலாளர் கலாமதி பத்மராஜா, மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஏ.எல். எம். அஸ்மி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலை அத்தியட்சகராக பணியாற்றி, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பதவியேற்றுக்கொண்ட டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸுக்கு பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் புதன்கிழமை (19) வரவேற்பளிக்கப்பட்டது. இதன்போது வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் மாலை அணிவித்து வரவேற்பதை படத்தில் காணலாம்.

(படம்; பாலமுனை விசேட நிருபர்)

கோறளைப்பற்று பிரதேச செயலகத்தில் பாரம்பரிய தை பொங்கல் விழா

பாசிக்குடா நிருபர்

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற தொனிப் பொருளில், புதன்கிழமை (19) கோறளைப்பற்று பிரதேச செயலகத்தினால் தமிழர் பாரம்பரிய தைப் பொங்கல் விழா கலாசார நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெற்றது. உதவி பிரதேச செயலாளர் திருமதி அமலினி கார்த்தீபன் தலைமையில் இப் பொங்கல் விழா பிரதேச செயலக முன்றலில் நடைபெற்றது. இதன்போது நந்திக் கொடியேற்றல், கொடிக்கவி இசைத்தல், தமிழ்மொழி வாழ்த்து, மங்களவிளக்கேற்றல் நிகழ்வுகளுடன் பொங்கல் விழா ஆரம்பிக்கப்பட்டது. பிரதேசத்தின் சமூக மட்ட அமைப்புக்கள்,பிரதேச செயலக உத்தியோகஸ்த்தர்கள் மற்றும் சமூர்த்தி உத்தியோகஸ்த்தர்கள் இணைந்து பொங்கல் பானையில் புத்தரிசி இட்டு பொங்கல் நிகழ்வினை சிறப்பித்தனர்.இந் நிகழ்வில் பிரதேச அறநெறி பாடசாலை மாணவர்களினால் வில்லுப்பாட்டு, நாட்டார் பாடல், கிராமிய நடனம், புஸ்பாஞ்சலி,பேச்சு,கூத்து,தாண்டவம்,உடு இசைத்தல் மற்றும் தனி நடனம் போன்ற கலை நிகழ்சிகள் நடைபெற்றது. மேற்படி பொங்கல் விழாவினை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கே.எஸ்.ஆர். சிவகுமார் ஏற்பாடு செய்திருந்தார்.

மூதூரில் மைதானம், பூங்காக்கள் அபிவிருத்தி

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச சபையின் கீழ் உள்ள பொது மைதானங்கள் மற்றும் பூங்காக்களை புதுப்பொலிவுடன் இவ்வருடம் புனரமைக்க உள்ளதாக மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ் புதன்கிழமை (19) தெரிவித்தார்.

மேலும் இவ்வருடத்தில் மைதானங்களையும், பூங்காக்களையும் புனரமைக்கவென கட்டைபறிச்சான் மைதான புனரமைப்புக்கு 10 இலட்சம் ரூபாவும், சம்பூர் பூங்காவுக்கு 05 இலட்சம் ரூபாவும், கட்டைபறிச்சான் பூங்காவுக்கு 05 இலட்சம் ரூபாவும், மல்லிகைத் தீவு பூங்காவுக்கு 05 இலட்சம் ரூபாவும், தோப்பூர் பூங்காவுக்கு 05 இலட்சம் ரூபாவும், மூதூர் ஹரீஸ் பூங்காவுக்கு 10 இலட்சம் ரூபாவும், சாபிநகர் பூங்காவுக்கு 05 இலட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை சாபிநகர் கிராம சேவகர் பிரிவில் உள்ள வேதத் தீவு மக்களின் நீண்ட கால கோரிக்கைக்கு அமைவாக புதிய பூங்கா அமைக்கவென 05 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலையில் 17 மாணவர்களுக்கு கொரோனா

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி எஸ். அகிலன்

(ஒலுவில் விசேட நிருபர்)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கடந்த 03 நாட்களுக்குள் 17 மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக, அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எஸ். அகிலன் தெரிவித்தார்.

காய்ச்சல் அறிகுறிகள் காணப்பட்ட மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் போது இவர்களுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் இரு வாரத்திற்குள் அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் 20 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுவர்கள் உள்ளடங்குவதாகவும் தெரிவித்தார்.

தடிமல் காய்ச்சல் உள்ளவர்கள் வைத்தியசாலைகளுக்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கு கொவிட் 19 பைஸர் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாகவும், இரண்டாவது தடுப்பூசி பெற்று 03 மாதங்கள் பூர்த்தியானவர்கள் இது வரை மூன்றாவது தடுப்பூசியை பெற்று கொள்ளாத 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதுவரை எதுவித தடுப்பூசிகளும் பெற்றுக் கொள்ளாதவர்கள் தத்தமது பொதுச் சுகாதார பரிசோதகர்களை தொடர்பு கொண்டு தங்களுக்கான தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

தற்போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் இரு வார காலத்திற்குள் 155 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

ஆங்கில விழாக்களை நடத்த நிதி ஒதுக்கீடு

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று கல்வி வலய நிர்வாகத்திற்குட்பட்ட, அக்கரைப்பற்று,

அட்டாளைச்சேனை, பொத்துவில் பிரதேச பாடசாலை மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் தெரிவு செய்யப்பட்ட சுமார் 13 பாடசாலைகளில் ஆங்கில விழாக்களை நடாத்துவதற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு உலக வங்கியின் அனுசரணையில் தேசிய ரீதியாக

நடைமுறைப்படுத்தும் 'பொதுக் கல்வி நவீனமயப்படுத்தும் செயற்றிட்டத்தின் (GEMP) கீழ், இவ் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அக்கரைப்பற்று

வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் தெரிவித்தார். அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரி, முனவ்வறா கனிஷ்ட கல்லூரி,அக்கரைப்பற்று ஆண்கள் வித்தியாலயம், ஸாஹிறா வித்தியாலயம், அல்பாத்திமியா வித்தியாலயம், அட்டாளைச்சேனை அல்முனீறா பெண்கள் உயர் பாடசாலை, அறபா வித்தியாலயம், அல்அர்ஹம் வித்தியாலயம், ஒலுவில் அல்ஹம்றா மகா

வித்தியாலயம் (தேசிய பாடசாலை), ஜாயிஷா வித்தியாலயம், பாலமுனை ஹிக்மா வித்தியாலயம், பொத்துவில் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை), பொத்துவில் அல்பஹ்ரியா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் குறித்த செயற்றிட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

காரைதீவு மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசி

(காரைதீவு குறூப் நிருபர்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான முதலாவது பைசர் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது.

12 வயது முதல் 15 வயதுக்குட்பட்ட சகல மாணவர்களுக்கும் இத் தடுப்பூசி பாடசாலை ரீதியாக ஏற்றப்பட்டு வருகிறது.

காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தலைமையில் இத் தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டம் கடந்த 3 தினங்களாக மாவடிப்பள்ளி அல் அஸ்ரப் மகா வித்தியாலயம் , விபுலாநந்தா தேசிய பாடசாலை , சண்முக மகா வித்தியாலயம் பாடசாலைகளில் நடைபெற்று வருகிறது. காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தகவல் தருகையில், காரைதீவுப் பிரிவில் சுமார் 3000 மாணவர்களுக்கு கடந்த செவ்வாயக்கிழமை முதல் கொரோனா முதலாவது தடுப்பூசி பாடசாலை ரீதியாக ஏற்றப்பட்டு வருகிறது.

அதேவேளை சுமார் 400 ஆசிரியர்களுக்கும் 2வது, 3வது தடுப்பூசி வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களம் விடுத்துள்ள சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்கும் அதேவேளை, உரியதரப்பினர் தடுப்பூசியை உரிய வேளையில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

கிண்ணியா நகர சபையின் அதிகாரம் மு.கா வசமானது

புதிய தவிசாளராக நிவாஸ் தெரிவு

(கிண்ணியா மத்திய நிருபர்)

கிண்ணியா நகர சபையின் புதிய தவிசாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் உறுப்பினர் முகமது முஸ்தபா முஹம்மது நிவாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு மாத காலமாக தவிசாளர் பதவி வரிதாக்கப்பட்ட நிலையில் இருந்த, கிண்ணியா நகர சபைக்கான புதிய தவிசாளர் ஒருவரை தெரிவு செய்வதற்காக சபை வியாழக்கிழமை (20) கூடிய போதே, இவர் தெரிவு செய்யப்பட்டார்.

13 பேர் கொண்ட சபையில், தலைவர் தெரிவின் போது, 13 உறுப்பினர்கள் நேற்றைய கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தனர். இதில் புதிய தவிசாளருக்கு 6 வாக்குகள் கிடைக்கப் பெற்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்ட அய்யூப் சப்ரின் 3 வாக்குகளை மாத்திரமே பெற்றுக்கொண்டார்.

இதன்போது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த இரு உறுப்பினர்களும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் ஒரு உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் தவிசாளரும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. கடந்த நான்கு ஆண்டுகளாக ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரத்தில் இருந்த கிண்ணியா நகர சபையின் 2022 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கடந்த டிசம்பர் மாதம் இருமுறை சமர்பிக்கப்பட்ட போதும், இரு முறையும் தோற்கடிக்கப்பட்டது.

இதன் காரணமாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப நேற்று புதிய தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது .

அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை அதிபர் ஏ.பி.முஜீனின் வழிப்படுத்தலின் கீழ் புதன்கிழமை (19) இடம்பெற்ற போது.

(படம்;அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

திருகோணமலையில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா தொற்று

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் மீண்டும் கொரோனா தொற்றாளர்களின் வீதம் அதிகரித்து வருகின்றது.

இதனடிப்படையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் புதன்கிழமை (19) மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனை மூலம் 18 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில் கந்தளாய் பேராறு பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வயது இரட்டை குழந்தையர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தம்பலகாமம், கன்னியா, நிலாவெளி மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் போன்ற இடங்களில் தொற்றாளர்கள் மேலும் அதிகரித்து வருவதாகவும், திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமை நேர வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் வசதி குறைந்த மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

(பெரியநீலாவணை விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் வசதி குறைந்த மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு புதன்கிழமை (19) பாண்டிருப்பு கலாசார மத்திய நிலையத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி துணைச் செயலாளர் ஏ.நிதான்சன் தலைமையில் நடைபெற்றது.

பொருளாதார ரீதியாக பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்ற மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு, அந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவும் நோக்கோடு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில், அக்கரைப்பற்று, நாவிதன்வெளி, கல்முனை, பாண்டிருப்பு போன்ற பிரதேசங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு இந்த துவிச்சக்கர வண்டிகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கின் குரல்

கல்முனை சுகாதார பணிப்பாளர் நியமனம்;

வைத்தியர் றிபாஸின் நேர்த்தியான நிர்வாகத்துக்கு கிடைத்த சன்மானமே

பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் புகழாரம்

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக கடந்த வருடங்களில் சேவையாற்றி, தற்போது கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் பணிப்பாளராக டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் நியமனம் பெற்றுள்ளமை அவரது நேர்த்தியான நிர்வாகத்திறனுக்கு கிடைத்த சன்மானமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் தெரிவித்தார்.

ஏலவே தேசிய கண் வைத்தியசாலையின் பணிப்பாளராக டாக்டர் றிபாஸ் தனது சிறப்பான சேவையை நிர்வாகத் திறமையுடன் வழங்கியதையும் இவ்விடத்தில் நினைவுகூர விரும்புகிறேன்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகராக பதவியேற்றது முதல் பொத்துவில் மண்ணின் புரையோடிப்போயிருந்த சுகாதார சேவையின் தரத்தை தூக்கி நிறுத்துவதில் டாக்டர் றிபாஸ் காத்திரமாக கருமமாற்றினார்.

குறிப்பாக பொத்துவில் ஆதார வைத்தியசாலையினை மாகாண ஆளுகையின் கீழ் 'TYPE A' ஆக தரமுயர்த்துவதற்காக என்னோடு ஒத்திசைந்து திட்ட வரைபினை தயாரித்தமை, அதை அதிகாரிகளிடம் சிறப்புற முன்வைத்தமை உள்ளிட்ட அளப்பரிய பணிகளை செய்தமை மட்டுமல்லாது, வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதிலும், ஊழியர்கள் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதிலும் என்னோடு முழுமூச்சாக தோள்கொடுத்து பணியாற்றியவர் என்பதை நான் ஆசுவாசமாக கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இத்தகைய மகத்தான பணியாற்றிய வைத்தியர் றிபாஸ் தற்போது நியமனம் பெற்றுள்ள கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் பணிப்பாளர் எனும் பதவியில் இருந்து, தனது நேர்த்தியான நிர்வாக திறனையும் பாகுபாடற்ற சேவை மனப்பாங்கையும் கல்முனை பிராந்திய மக்களின் தடையற்ற சுகாதார சேவைக்காக பயன்படுத்த வேண்டும் தெரிவித்தார்.

திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில்

பொதுநலவாய இராஜாங்க அமைச்சர் கிழக்கு ஆளுநருக்கிடையில் சந்திப்பு

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

ஐக்கிய இராச்சியத்தின் தெற்காசிய மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் தாரிக் அஹமட் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று திருகோணமலையில் இடம் பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் புதன்கிழமை (19) இச்சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்வதற்கு அனைத்து உதவிகளை வழங்குவதாகவும், இலங்கையிலிருந்து பிரித்தானியாவுக்கு கல்வியை தொடர உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் தாரிக் அஹமட் உறுதி அளித்தார். இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் 30 வருடகால யுத்தத்தினால் சிலர் அநீதிகளுக்கு உள்ளான நிலையில், மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக ஆணைக்குழுவொன்றை தான் நியமித்துள்ளதாகவும், ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் பேரில் அறிக்கைகள் வெளியிடப்பட்டு நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் முதுநபீனுக்குமிடையிலான சந்திப்பொன்று முன்னாள் அமைச்சரின் காத்தான்குடி காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்ற போது.
படம்;புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மனித உரிமை பாதுகாப்பு தொடர்பில் செயலமர்வு

(ரொட்டவெவ குரூப் நிருபர்)

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கும் சிவில் சமூக அமைப்புகளுக்கும் இடையிலான செயலமர்வொன்று திருகோணமலையில் இடம்பெற்றது.

திருகோணமலை சர்வோதயம் பிரதான மண்டபத்தில் வியாழக்கிழமை (20) ஊடக பயிற்றுவிப்பாளர் ஊடகவியலாளருமான சீ. தொடாவத்த மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இணைப்பாளரும் மனித உரிமைகள் பாதுகாப்பு ஆய்வாளருமான பிரதீபன் மற்றும் ஆய்வாளர் லஹிரு ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது. மனித உரிமைகள் கண்காணிப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றிணைந்த பிரவேசம் என்ற தொனிப்பொருளில் இச் செயலமர்வு இடம்பெற்றது. ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து சமூகத்திற்கு ஏற்படக் கடிய விளைவுகள் மற்றும் மனித உரிமைகள் மீறல் தொடர்பிலான விழிப்புணர்வு மற்றும் சமூகத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது தொடர்பிலான பிரச்சினைகள் இதன் போது ஆராயப்பட்டன.

காரைதீவு பெண் தொழிலதிபர் சிவஜோதிக்கு விருது

(காரைதீவு குறூப் நிருபர்)

அகில இலங்கை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட வளர்ந்து வரும் பெண் தொழில் அதிபர்களில் காரைதீவு பெண் கோ.சிவஜோதியும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் வளர்ந்துவரும் முதல் 50 பெண்களில் ஒருவராக சிவஜோதி தெரிவு செய்யப்பட்டமை பலரதும் பாராட்டையும் பெற்றுள்ளது. அத்தகைய பெண் தொழிலதிபர்களை பாராட்டும் விதமாக கடந்த 18ஆம் திகதி Women Top 50 2021 விருது வழங்கும் விழா கொழும்பு சங்கிரிலா ஹோட்டலில் நடைபெற்றது. விழாவில் 'காரைதீவு லக்ஸ்மி புரோடக்ஸ் உரிமையாளரான கோ. சிவஜோதி Women Top50 2021 விருது வழங்கப்பட்டது.

1955 முதல் அரசாங்கங்கள் பெற்ற கடனினாலேயே இன்றைய நெருக்கடி நிலை உருவானது

அமைச்சர் உதய கம்மன்பில

சபை நிருபர்கள்:
லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

தற்பொழுதுள்ள நெருக்கடி நிலை 1955 முதல் அன்றிருந்து ஆட்சி செய்த அரசாங்கங்கள் பெற்ற கடனின் காரணமாக வந்ததாகும்.

எனவே இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபட நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைமீதான விவாதத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

எதிர்க்கட்சித் தலைவரின் புள்ளி விவரங்கள் தவறானவை. பொருளாதார நெருக்கடியை கொரோனா வினால் மறைக்க முயல்வதாக அவர் சொன்னதில் உண்மை இல்லை. இந்த நெருக்கடி இன்று நேற்றல்ல 1955 முதல் இந்த நாட்டை ஆண்ட அரசாங்கங்கள் வாங்கிய கடனினால் வந்தது.

எனவே ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி பயனில்லை. இந்த அரசாங்கத்தைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்ற எவரேனும் முனைந்தால் நெருக்கடியின் உச்சக்கட்டத்தில் அரசாங்கத்தைக் கைப்பற்றுகிறது என்று அர்த்தம். எனவே, இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபட நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இந்த 225 பேரும் இந்த நாட்டின் உரிமையாளர்கள் அல்ல. பாதுகாலர்கள் மட்டுமே. நம் நாட்டின் உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அதை எப்படி ஒழிப்பது என்று சொல்ல வேண்டும்.

உதய குமார். (ஐ.ம.ச)

மலையக மக்கள் தொடர்பில் ஜனாதிபதி தனது உரையில் ஒரு வார்த்தை கூட குறிப்பிடவில்லை. இது ஏமாற்றத்தை தருகிறது. மக்கள் படும் கஷ்டம் பற்றியும் அவர் எதுவும் கூறவில்லை. எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு, பொருட்கள் விலையேற்றம். பெருந்தோட்ட மக்களின் கஷ்டத்திற்கான தீர்வு பற்றியே கூட கூறப்படவில்லை. அரிசி மாபியாவை ஒழிக்க முற்பட்ட அரசு வெளிநாடுகளில் இருந்து அரிசியை கொள்வனவு செய்கிறது. கழிவு நிறைந்த உரமே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இரசாயன உரத் தடையை மீளப்பெற்று விட்டு சேதனப் பசளை கொள்கையில் மாற்றமில்லை என்பது வேடிக்கையானது. பால்மாவை காண்பது தங்கத்தை காண்பது போல உள்ளது. எரிபொருள் விலை அதிகரித்தும் அதற்கு தட்டுப்பாடு காணப்படுகிறது. திடீர் திடீரென மின் துண்டிக்கப்படுகிறது. பணவீக்கம் அதிகரித்துள்ளது.

சரத் பொன்சேக்க (ஐ.ம.ச)

அழகிய புன்னகையுடன் இருப்பதை கொள்கை விளக்க உரையின் போது கண்டோம். நாம் சமூகமாக இருந்த காலத்தில் அவர் அழகிய புன்னகையுடன் இருந்தது நினைவு வருகிறது. அது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். ஜனாதிபதியின் உரையில் கொரோனாவினால் 2 வருடத்தில் நாடு வீழ்ச்சியடைந்ததாக தெரிவித்தார். கொரோனா வினால் நாடுகள் அழியவில்லை. மக்கள் இறந்தனர். பாதிக்கப்பட்டனர். அனைத்தையும் கொரோனா மீது போடுவதை ஏற்கமுடியாது.

சுதந்திரம் முதல் வந்த அரசியல் வாதிகள் அரசியல் கலாச்சாரத்தை மாற்றவில்லை. கடந்த தேர்தலில் இளைஞர்கள் மாற்றம் செய்வர் என நம்பினோம்.

இம்ரான் மஹ்ரூப் (ஐ.ம.ச) எம்.பி

அரிசி விலை 200 ரூபாவாக உள்ளது. இது 500 ரூபாவை தாண்டும். சீமெந்து விலை வானுயரத்திற்கு சென்றுள்ளது. இந்த நிலையில் நாடு பாதாளத்தை தொடுகிறது. 30 ஆயிரம் ரூபாவிற்கு பசளை வாங்கிய விவசாயிகள் மறக்கடிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நெல்லை விற்று மாடிவீடு கட்டவில்லை. அவர்கள் பால்மாவுக்கும் கேசுக்கும் வரிசையில் நிற்கின்றனர். கேஸ் வெடிப்பில் பலர் இறந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். வீடுகள், கடைகள் சேதமடைந்தன.இவர்களுக்கு நிவாரணம் வழங்க எந்த திட்டமும் கிடையாது. பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை என்கிறார்கள். ஆனால் அனைத்து பொருட்களுக்கும் தட்டுப்பாடு உள்ளது. மின்துண்டிக்கப்படுகிறது.

விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே

சீன பசளை கப்பலினால் எந்த மோசடியும் நடக்கவில்லை. ஒப்பந்தத்தின் பிரகாரம் அந்தத் தொகை வழங்கப்பட்டது. தாமதம் மட்டுமே ஏற்பட்டது. கப்பல் மீண்டும் வரும். அமைச்சர் என்ற வகையில் சீன கப்பலுக்கு எதுவும் கொடுக்க மாட்டோம் என்றோம். ஆனால் வழக்கு தொடரப்பட்டது. சட்டமா அதிபரின் ஆலோசனை படியே பணம் வழங்கப்படுகிறது. எந்த மோசடியும் நடக்கவில்லை.

வினோ நோகராதலிங்கம்: தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி

அரசாங்கம் யுத்த காலத்தில் உலக நாடுகளிடம் ஆயுத உதவி கேட்டது. இப்போது உலக நாடுகளிடம் நிதியுதவி கேட்கின்றது. ஆனால் நாம் எமது அரசியல் உரிமையை பெற்றுத்தருமாறுதான் அயலில் உள்ள வல்லரசு நாட்டிடம் கேட் கின்றோம் அதில் என்ன தவறு உள்ளது?

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசின் பொருளாதார அபிவிருத்தி திட்டங்களுக்கு கொள்கைகளை மறந்து உதவி செய்ய வேண்டும். ஆதரவு தர வேண்டுமெனக் கேட்டுள்ளார். இது வேடிக்கையான விடயம்.

அதேவேளை வடக்கு கிழக்கில் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. கபளீகரம் செய்யப்படுகின்றன. ஜனாதிபதி பாராளுமன்றத்தில் விளக்க உரையாற்றுகின்ற வேளையில் கூட இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினர், வன இலாகாதிணைக்களத்தினர், வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் என பல தரப்பினரும் காணி அபகரிப்பில் ஈடுபடுகின்றனர்.

மக்களின் உரிமைப்போராட்டத்திலிருந்து நாம் ஒரு போதும் விலகிச் செல்ல மாட்டோம். அதற்காக நாம் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்ல.

நாம் பெயரளவில்தான் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றோம். வன்னியில் இருக்கின்ற அரச சார்பான பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அந்த மாவட்டங்களின் இணைத்தலைவர்கள் எம்மை புறக்கணித்து தன்னிச்சையாக செயற்படுகின்றார்கள்.

அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் அந்த அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் அளுத்தங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் ஆளாகின்றனர்.

இதேவேளை இந்திய பிரதமர் நரேந்திரமோடிக்கு நாம் எமது மக்களின் பிரச்சினைகளை தெளிவு படுத்தி 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் அதிகாரங்களை பயன்படுத்த வேண்டுமெனவும் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டுமெனவும் கோரிக்கைகளை விடுத்தோம். அதற்கான ஆவணத்தை கையளித்துள்ளோம்.

அதைப்பார்த்து நீங்கள் எங்களுடன்தான் பேச வேண்டும் இந்தியாவிடம் கேட்டு பயனில்லையென இங்குள்ள அமைச்சர்கள் கூறுகின்றனர்.

யுத்தத்தின் போது சர்வதேச நாடுகளிடம் ஆயுத உதவி, நிதி உதவி கேட்ட அரசு எமது பிரச்சினைகளை தீர்க்காத பட்சத்திலேயே நாம் எமது அயல் நாடான இந்தியாவிடம் எமது பிரச்சினைகளை தீர்த்து வைக்குமாறு கோருகின்றோம்.

இந்தப்பிரச்சினை நீங்கள் தீர்க்க வேண்டிய பிரச்சினை. இந்த அரசு எமது பிரச்சினையை தீர்த்திருந்தால் நாங்கள் ஏன் இந்தியாவிடம் போகப்போகின்றோம்?

மலைச்சாரலி

சமனலவெவ இரத்தினக் கல் வளத்தை அகழ பொது மக்களுக்கு அனுமதி வழங்கவும்

பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

சமனலவெவ நீர்த்தேக்கத்தின் நீர்க் கசிவை திருத்துவதற்காக அதிலுள்ள நீரை அகற்றிய பின் அங்குள்ள இரத்தினக் கல் வளத்தை அகழ்வதற்கு வருமானம் குறைந்த பொது மக்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என பொதுஜன பெரமுன இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடு த்துள்ளார். இவ்விடயமாக அவர் நேற்று ஊடகங்களுக்கு தகவல் வழங் கினார்.

பலாங்கொடையில் அமைந்துள்ள சமனலவெவ நீர்த்தேக்கத்தில் நீர்க் கசிவை நீக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சமனலவெவை நீர்த்தேக்கத்தில் ஒரு செக்கனுக்கு 1800 கன அடி நீர்க்கசிவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதனால் தேசிய மின்சாரக் கட்டமைப்பு 120 மெகா வோட் மின்சாரத்தை வருடாந்தம் இழந்துவருகிறது.

இவ்விடயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து எதிர்வரும் மார்ச் மாதம் இந்நீர்த்தேக்கத்தின் நீர் தொழில் நுட்ப முறையில் வெளி யேற்றப்படும். அதன்பின் இக்கசிவினை சீர்படுத்தும் முயற்சி ஆரம்பிக்கப்பட முதல் இங்குள்ள இரத்தினக்கல் கனியத்தை அகழ்வதற்கு அரசு அனுமதி வழங்க வேண்டும்.

நீர்த்தேக்கத்தின் நீர் மீண்டும் நிரப்பப்பட்ட பின் இங்குள்ள இரத்தினக்கல் வளம் நீரால் மூடப்பட்ட பின் அது எவருக்கும் பயனளிக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தின்

மூன்று நிறுவனங்களுக்கான புதிய ஆணையாளர்கள் நியமனம்

எம்.ஏ.அமீனுல்லா

மத்திய மாகாணத்தின் மூன்று நிறுவனங்களுக்கான புதிய ஆணையாளர்கள் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகவினால் நியமிக்கப்பட்டுள்ளார். கண்டியிலுள்ள மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (19) குறித்த நியமனங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இதன்படி கண்டி மாநகர சபையின் மாநகர ஆணையாளராக இ. நி. சே. தரம் I அதிகாரியான கே.கே.பீ .ஐ.டி. ஜி விஜேதிலக, மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளராக இ. நி. சே. தரம் I அதிகாரியான.ஆர்.ஏ.எஸ்.பி.நவரத்ன மற்றும் மத்திய மாகாண போக்குவரத்து திணைக்களத்தின் போக்குவரத்து ஆணையாளராக இ. நி. சே. தரம் I1 அதிகாரியான ரீ .எம். பீ .எஸ்.பி.தென்னகோன் அகியோர்களே இவ்வாறு ஆளுநரினால் தமது நியமனக் கடிதங்களை பெற்றுக்கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தற்போதைய நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவினது வழிகாட்டுதலின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் "சுபிட்சத்தின் தொலைநோக்கு" கொள்கைகளின் ஊடாக நாடு சவால்களுக்கு மத்தியில் அபிவிருத்தியை நோக்கி நகர்வதாக மத்திய மாகாண ஆளுநர் தனதுரையில் தெரிவித்தார். தொடர்ந்துரையாற்றிய ஆளுநர். "கம சமகபிலிசதர " திட்டத்தின் மூலம் கிராமிய பொருளாதார வலுவூட்டல் திட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தின் பங்களிப்பு மகத்தானது, மற்றும் கொவிட் தொற்று நோயுடன் நாடு முழுவதும் அத்தியாவசிய பொருட்களின் விநியோக சவாலை கூட்டுறவு இயக்கத்தால் சமாளிக்க முடிந்தது எனவும் அதுபோன்று கூட்டுறவு துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து மத்திய மாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கோப் சிட்டி 21 நிலையத்தில் 14 ஏற்கனவே மக்கள் பயன் பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது என்கிறார். இந்நிகழ்வில் மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்ன, ஆளுநரின் செயலாளர் அன்டன் திலகரத்ன, பிரதம அமைச்சின் செயலாளர் மதுபானி பியசேன, மாகாண கைத்தொழில் அமைச்சின் செயலாளர் உபாலி ரணவக்க, மாகாண பொதுசேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் டபிள்யூ.கே. தயானந்த உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

புனரமைக்கப்பட்டு வரும் ஆலயங்களுக்கு நிதி

பதுளை, ஹாலிஎல, பசறை, மடுல்சீமை மற்றும் லுணுகல ஆகிய இடங்களில் புனரமைக்கப்பட்டு வரும் ஆலயங்களுக்கு, ஆலய நிர்வாக குழுவினரிடம் புனரமைப்பு வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான நிதி ஒதுக்கீட்டினை இ.தொ.காவின் உப தலைவரும், பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார். கட்டுமானப் பணியை விரைவுபடுத்த கோவில் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. எதிர்வரும் காலங்களில் கட்டுமானப் பணிகளுக்காக மேலதிக நிதி வழங்குவதாக இக்கலந்துரையாடலின் போது செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

அனுமதிப் பத்திரத்தால் சட்டவிரோத செயல்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பல நாட்களாக பலாங்கொடை பிரதேசத்துக்கு பெய்து வரும் கடும் மழை காரணமாக இப்பிரதேச ஆற்றங்கரைகள் கரைந்தும் இடிந்தும் உண வுப் பயிர்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவி க்கின்றனர்.

தொடர்மழை காரணமாக ஆறுகள் குளங்கள் நீர்நிலைகள் பெருக்கெடுத்து ஓடியமையால் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. பலாங்கொடைப் பிரதேசத்தை ஊடறுத்து ஓடும் வளவை கங்கையின் இரு கரையோரங்களில் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

வளவைகங்கை கரைகளின் இருமருங்கிலும் பாரிய குழிகள் ஏற்பட்டு ஆற்றின் கரைகள் விரிவடைந்துள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இப்பிரதேசத்தில் ஓடும் பெலிஹுல் ஓயா, ஹிரிகட்டு ஓயா, ஹுலுஓயா போன்ற ஆறுகளின் நிலைமையும் இவ்வாறாகவே காணப்படுவதாக சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்களும் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலைமைகளுக்கு ஆறுகளின் வெள்ளப் பெருக்குகள் மாத்திரமன்றி மழையற்ற காலப்பகுதிகளில் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு, மணல் அகழ்வு காடழிப்பு போன்ற சட்டவிரோத மனிதச் செயற்பாடுகளும் இவ்வாறான சுற்றாடல் பாதிப்புகளுக்கு காரணமாக அமைவதாக இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறான நிலைமைகளை கட்டுப்படுத்த உரிய கண்காணிப்பு நடவடிக்கைகளுடன் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் இவர்கள் வலியுறுத்துகின்றனர்.

பதுளை மறைமாவட்ட நமுனுகுல பங்கின் புனித ஜோசேவாஸ் ஆலயத்தின் புனித கிளாரட் தையல் பயிற்சி நிலையம் பெண்களிடத்தே சுயதொழிலை விருத்திசெய்யும் நோக்கில் முன்னெடுக்கும் தையல் பயிற்சிநெறியில் பங்குபற்றிய பயிற்சியாளர்களில் தெரிவுசெய்யப்பட்ட சகோதரிகளுக்கு கிளரேசியன் சபையினால் தையல் இயந்திரங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன. இந்நிகழ்வில் பங்குதந்தை அருட்பணி ரொபட் ஜேகப் அடிகளார் , கிளரேசியன் சபை உறுப்பினர்கள், கலபிட்டகந்த தமிழ் தேசிய பாடசாலை அதிபர் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டனர். (படம்: லுணுகல நிருபர்)

மலையகத்தில் பனிப் பொழிவு

வீதியில் மிக அவதானமாக பயணிக்க எச்சரிக்கை

மலையகத்தில் பனி பொழிவதால் வீதியில் பயணிப்போர் மிக அவதானமாக பயணிக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அண்மைக் காலமாக மலையகத்தில் ஏற்பட்டுள்ள பனிப் பொழிவு காரணமாக வீதி எங்கும் பனி நிறைந்தும் ஆங்காங்கு முகில் கூட்டம் காணப்படுகிறது. இதனால் வீதியில் சறுக்கல் நிலை ஏற்பட்டு வீதி விபத்துக்கள் ஏற்படலாம் என பொலிஸ் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். குறிப்பாக பதுளை மாவட்டத்தில் எல்ல வெல்லவாய வீதியின் ராவணா எல்ல பகுதி பதுளை மஹியங்கணை கண்டி வீதியின் ரந்தெனிய பகுதி,வெலிமடை நுவரேலியா வீதியின் ரேந்த பொல பகுதி, ஹப்புத்தளை கொழும்பு வீதியின் பெறகல பகுதி போன்ற இடங்களிலேயே இவ்வாறு காலை மற்றும் மாலை வேளைகளில் பனி மூட்டமும் முகில் கூட்டமும் நிறைந்து காணப்படுவதால் இப் பிரதேசமூடாக வாகனங்களில் பயணிப்போர் விசேடமாக வாகன ஓட்டுனர்கள் தத்தமது வாகனங்களை மிகவும் அவதானமாக செலுத்துமாறும் தேவை ஏற்படின் மஞ்ச நிற பல்புகளை பயன்படுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் அறிவுரையும் எச்சரிக்கையும் வழங்கியுள்ளன.

ஊவா ஐயப்பா சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை 22 ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான கற்றல் வழிகாட்டல் செயலமர்வு ஹொப்டன் விக்கினேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில் (17) நடைபெற்றது. ஹொப்டன் கலைமகள் தமிழ் வித்தியாலயம், ஹொப்டன் விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்கள் செயலமர்வில் கலந்துகொண்டு பயன்பெற்றனர். வளவாளராக பசறை ஆசிரியர் நடராஜா மலர்வேந்தன் மாணவர்களுக்கு கற்றல் வழிகாட்டலை வழங்கியதோடு, ஊவா ஐயப்பா சேவா சங்கத்தின் தலைவர் ஸ்ரீகுமார் தலைமையில் ஆன்மீக சொற்பொழிவும், கூட்டு இறைபிரார்த்தனையும் நடத்தப்பட்டது. லுணுகல நிருபர்

முதியவரின் சடலம் தொடர்பில் சந்தேகம்

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெலேகால கிராமத்தின் "அப்பர் கிப்ஸன்" பகுதி வீடு ஒன்றிலிருந்து மீட்கப்பட்ட முதியவரின் சடலம் தொடர்பில் சந்தேகங்கள் எழுந்துள்ளதாக நுவரெலியா பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் நுவரெலியா கெலேகால பிரதேசத்தில் கால்நடைகள் மேய்க்கும் தொழில் செய்து வந்திருந்த பெருமாள் சுப்பிரமணியம் வயது 74 என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த முதியவர் திருமணம் முடித்திருக்கவில்லை. இவர் கடந்த சில மாதங்கங்களாக சுக வீனமடைந்த நிலையில் தனது சகோதரனின் ஆதரவுடன் கெலேகால அப்பர் கிப்ஸன் பகுதியில் தனது வீட்டில் வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் (18.01.2022) செவ்வாய்க்கிழமை இரவு இவர் தனது வீட்டிலேயே உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த இவர் தொடர்பில் உறவினர்கள் 119 பொலிசாருக்கு தெரிவித்துள்ளதையடுத்து நுவரெலியா பொலிசார் சம்பவ இடத்திற்கு விரைந்து முதியவரின் சடலத்தை மீட்டுள்ளனர்.

பின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் கொரோனா தொற்றுள்ளதா என பரிசோதிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ள பொலிசார் உறவினர்கள் ஊடாக (19) காலை சடலத்தை பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அங்கு பாரம் கொடுத்துள்ளனர்.

இந்த நிலையில் வீட்டில் உயிரிழந்துள்ளதால் இவருடைய பிரதே பரிசோதனையை சட்ட வைத்தியர் ஊடாக மேற்கொள்ளப்படல் வேண்டும் என வைத்தியசாலை வைத்தியர்கள் வைத்தியசாலை பொலிசாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து சட்டவைத்திய அதிகாரி இராஜகுரு தலைமையில் பிரேத பரிசோதனை இடம்பெற்ற நிலையில் உயிரிழந்த முதியவரின் கழுத்து பகுதியில் முறிவு ஒன்று காணப்பட்டதை கண்டறியப்பட்டுள்ளது.இந்த நிலையில் இம் முறிவானது கொலையா அல்லது தற்கொலையா என்ற சந்தேகம் எழுந்துள்ள நிலையில் இவ்விடயம் குறித்து பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் இது குறித்து நுவரெலியா நீதி மன்றத்திற்கு அறிவித்து நீதவானின் உத்தரவுக்கு அமையவே முழுமையான பிரேத பரிசோதனை நடத்த வேண்டுமென சட்டவைத்தியர் இராஜகுரு தெரிவித்துள்ளார்.

கனிஷ்டப் பிரிவு சேவையாளர்களுக்கு நிரந்தர நியமனம்

காவத்தை தினகரன் விசேட நிருபர்

சப்ரகமுவ மாகாண வைத்தியசாலை மற்றும் ஆயர்வேத வைத்தியசாலைகளில் சேவையாற்றும் கனிஷ்டப் பிரிவு சேவையாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று(19) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் இரத்தினபுரி புதிய நகரில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது சப்ரகமுவ மாகாண வைத்தியசாலைகளில் சேவையாற்றும் கனிஷ்ட சேவையாளர்கள் 48 பேருக்கும் மற்றும் மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளில் சேவையாற்றும் கனிஷ்ட சேவையாளர்கள் 75 பேருக்கும் மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவினால் நிரந்தர நியமனம் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, மாகாண அரச சேவைகள் ஆணைக்கழுவின் செயலாளர் சாந்தி விஜேயராஜா, மாகாண சுகாதார பணிப்பாளர் கபில கன்னங்கர, மாகாண ஆயர்வேத பணிப்பாளர் டங்லஸ் பதிரகே உட்பட அரச அதிகார்களும் கலந்து கொண்டனர்.

கண்டி நகரில் அமைந்திருக்கும் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் மாட்டுப் பொங்கல் ஆலய அறங்காவலர் கிருஸ்ணமூர்த்தி தலைமையில் நடத்தப்பட்டது. (நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

சர்வதேச செய்திகள்

ஆப்கானுக்கு இந்தியா மனிதாபிமான உதவி

உயிர் காப்பு மருந்துப் பொருட்களைக் கொண்ட உதவிகளை இந்தியா ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பியுள்ளது.

கடந்த வாரம் ஆப்கானை சென்றடைந்த இந்தியாவின் இந்த ஆறு தொன்கள் மனிதாபிமான உதவிகளையும் இஸ்லாமிய எமிரேட் வரவேற்கிறது என்று அதன் பேச்சாளர் சபியுல்லா முஜாஹித் தெரிவித்தார்.

காபுல், இந்திரா காந்தி மருத்துவமனைக்கு இந்த மருத்துவ உதவிகள் கையளிக்கப்பட்டன.

ஆப்கான் மக்களுடனான தமது முக்கிய உறவு மற்றும் அவர்களுக்கான மனிதாபிமான உதவிகள் தொடரும் என்றும் இந்தியா உறுதியளித்துள்ளது.

காஷ்மிர் பனிச்சரிவில் சிக்கிய 30 பேர் மீட்பு

வடக்கு காஷ்மிரின் குக்வாரா மாவட்டத்தில் உள்ள நெடுஞ்சாலை பனிச்சரிவால் பாதிக்கப்பட்டதை அடுத்து குறைந்தது 30 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

பனிப்பொழிவு காரணமாக டங்தார் சோவ்கி பில் நெடுஞ்சாலையில் இரு பனிச்சரிவு சம்பவங்கள் இடம்பெற்றதை அடுத்து பயணிகள் நிர்க்கதியாகியுள்ளனர். இதனை அடுத்து அங்கு விரைந்த இந்திய இராணுவத்தினர் மீட்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

அவர்களின் கடும் போராட்டத்தின் பின் 30 பயணிகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

முதலாவது உதவி விமானம் டொங்காவை சென்றடைவு

பசிபிக் நாடான டொங்காவுக்கு தேவைப்படும் உணவு மற்றும் நீரை ஏற்றிய முதலாவது வெளிநாட்டு உதவி விமானம் நேற்று அந்நாட்டை அடைந்துள்ளது.

டொங்காவின் பிரதான விமான நிலையத்தை மூடிய எரிமலைச் சாம்பல் அதன் ஓடு பாதையில் இருந்து அகற்றப்பட்டதை அடுத்து அங்கு நியூசிலாந்து இராணுவ விமானம் தரையிறங்கியுள்ளது.

நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா அனுப்பிய ஏனைய விமானங்கள் மற்றும் கப்பல்கள் டொங்காவை நோக்கி பயணிக்க ஆரம்பித்துள்ளன.

கடந்த சனிக்கிழமை கடலுக்கு அடியில் இடம்பெற்ற பாரிய எரிமலை வெடிப்பினால் அருகில் இருக்கும் டொங்கா நாட்டை சுனாமி அலை தாக்கியதோடு அந்த நாட்டை சாம்பல் சூழ்ந்ததால் பெரும் சுகாதார பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதனால் குறைந்தது மூவர் உயிரிழந்திருப்பதோடு தொடர்பாடல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் ஐந்து நாட்களின் பின்னரே சர்வதேசத்துடனான தொடர்பாடல் நிறுவப்பட்டுள்ளது.

தலைநகர் நுகுவாலோபாவில் உள்ள விமானநிலைய ஓடுபாதையில் சாம்பல் படிந்ததால் விமானங்கள் தரையிறங்க முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் மீட்புக் குழுக்கள் மற்றும் நூற்றுக்கணக்கான தன்னார்வலர்கள் தள்ளுவண்டிகள் மற்றும் மண்வாரிகளை பயன்படுத்தி பல நாட்கள் போராடி ஓடுபாதையில் இருக்கும் சாம்பலை அகற்றியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சி–130 ஹெர்கியுலஸ் விமானம் நீர் கொள்கலன்கள், தற்காலிக கூடாரங்கள், மின் பிறப்பாக்கிகள், சுகாதார மற்றும் குடும்ப சாதனங்கள் மற்றும் தொடர்பாடல் உபகரணங்களுடன் டொங்காவில் தரையிறங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து உதவிப் பொருட்கள் மற்றும் சாம்பலை அகற்றுவதற்கான சாதனங்களுடன் அவுஸ்திரேலியாவின் இரு போயிங் சி–17 கிளோப்மாஸ்டர் விமானங்கள் நேற்று டொங்காவை சென்றடைந்தாக செய்தி வெளியாகியுள்ளது.

பாக். மதநிந்தனை குற்றச்சாட்டு: பெண்ணுக்கு மரண தண்டனை

முஹமது நபி மற்றும் அவரது மனைவிகளில் ஒருவரை அவமதிப்பதாக கருதப்படும் படங்களை பகிர்ந்து மதநிந்தனையில் ஈடுபட்டதாக முஸ்லிம் பெண் ஒருவருக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் ஒன்று மரண தண்டனை விதித்துள்ளது.

வடக்கு பாகிஸ்தான் நகரான ராவல்பிண்டியில் உள்ள நீதிமன்றத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த வழக்கு விசாரணையில், நாட்டின் கடுமையான மதநிந்தனை சட்டத்தின் கீழ் அனீகா அதீக் என்ற பெண்ணுக்கே தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2020 மே மாதம் முதல் முறை தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் தம் மீதான குற்றச்சாட்டை 26 வயதான அதீக் நிராகரித்துள்ளார்.

தன் மீது குற்றச்சாட்டை சுமத்திய ஹஸ்னத் பாரூக் என்பவருடன் நட்பாக இருப்பதை மறுத்ததை அடுத்து தம்மை மத விவகாரத்துக்குள் இழுத்ததாக அதீக் குறிப்பிட்டுள்ளார். இந்த இருவரும் ஒன்லைன் கேம் மூலம் சந்தித்திருப்பதோடு வாட்ஸ்அப் தளத்தில் தொடர்பில் இருந்துள்ளனர்.

அதீக்கின் மரண தண்டனை லஹூர் உயர் நீதிமன்றத்தால் உறுதி செய்ய வேண்டி இருப்பதோடு, அதற்கு முன் இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய அவருக்கு உரிமை உள்ளது.

பிரிட்டனில் கொரோனா கட்டுப்பாடுகள் நீக்கம்

இங்கிலாந்தில் முகக்கவசம் அணிய விதிக்கப்பட்ட கட்டுப்பாடு அடுத்த வாரம் முதல் திரும்பப் பெறப்படுவதாக பிரதமர் பொரிஸ் ஜோன்சன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து பாராளுமன்றத்தில் பேசிய பிரதமர் ஜோன்சன், வீட்டில் இருந்தவாறு பணிபிரியுமாறு ஊழியர்களை இனி அரசு அறிவுறுத்தாது என்றும் அவரவர் அலுவலகம் சென்று பணிபுரிய அனுமதி வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

சுய தனிமைப்படுத்தல், கொரோனா ஹெல்த் பாஸ் உள்ளிட்ட நடவடிக்கைகளில் இருந்து மக்களுக்கு விலக்கு அளிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். வரும் வாரம் முதல் பொது இடங்கள் மற்றும் உள்ளரங்கு நிகழ்ச்சிகளில் மக்கள் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என்றும் பொரிஸ் ஜோன்சன் தெரிவித்தார்.

ரஷ்யப் படை உக்ரைனுக்குள் நுழையும்: பைடன் நம்பிக்கை

உக்ரைனுக்குள் ரஷ்யா நுழையும் எனக் கருதுவதாகவும் எனினும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் முழுவீச்சிலான போரை விரும்பவில்லை என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர் கேட்டபோது, "அவர் உள்ளே நுழைவார் என்பது என் கணிப்பு. அவர் ஏதாவது செய்தாக வேண்டியுள்ளது" என்றார் பைடன்.

உக்ரைன் மீது போர் தொடுப்பதாக வெளியாகும் தகவலை ரஷ்யா தொடர்ந்து மறுத்து வருகிறது. எனினும் எல்லையோரத்தில் சுமார் 100,000 படைகளை ரஷ்யா குவித்துள்ளது.

உக்ரைனை நேட்டோவில் சேர்த்துக் கொள்ளக்கூடாது, போலந்து உள்ளிட்ட நாடுகளில் நேட்டோ நடவடிக்கைகளைக் குறைத்துக்

கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை ரஷ்யா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

மேற்கத்தேய நாடுகள் மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகள் தீர்க்கமான திருப்பம் ஒன்றை எட்டுவதற்கு தவறியுள்ளது. ரஷ்யாவின் சில கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளின்கன் ஜெனீவாவில் இன்று வெள்ளிக்கிழமை ரஷ்ய வெளியுறவு அமைச்சரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். "ரஷ்யா மிகக் குறுகிய அறிவித்தலில் உக்ரைன் மீது தாக்குதல் நடத்தக் கூடும்" என்று பிளின்கன் எச்சரித்துள்ளார்.

எவ்வாறாயினும் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய பைடன், "எந்த நாடு என்ன செய்ய முன்வரும் என்பது பற்றி நேட்டோவில் முரண்பாடு உள்ளது. என்ன நடக்கிறது என்பதைப் பொறுத்து அது அமையும்.

"ரஷ்யப் படை எல்லையை கடந்தால் அனைத்தும் மாறிவிடும் என்று நான் நினைக்கிறேன்" என குறிப்பிட்டார்.

சிறைக்குள் பெண் கைதிகள் கற்பழிப்பு: 10 பேர் குற்றவாளி

கொங்கோ நாட்டில் அளவுக்கு அதிகமானோரைக் கொண்ட சிறை ஒன்றில் ஏற்பட்ட கலவரத்தின் போது பல டஜன் பெண் கைதிகள் கற்பழிக்கப்பட்டது தொடர்பில் பத்து கைதிகள் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டுள்ளனர்.

லுபும்பாஷிக்கு அருகில் உள்ள கசாபா மத்திய சிறையில் 2020 ஆம் ஆண்டு ஏற்பட்ட மூன்று நாள் கலவரம் ஒன்றில் தாம் தொடர்ச்சியாக கற்பழிக்கப்பட்டதாக முப்பத்து ஏழு பெண்கள் மற்றும் பதின்ம வயது யுவதிகள் வாக்குமூலம் அளித்தனர்.

இதனால் சில பெண் கைதிகள் கர்ப்பமுற்றிருப்பதோடு சிலர் எய்ட்ஸ் உட்பட பால்வினை நோய்களாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் குற்றங்காணப்பட்டிருக்கும் 10 ஆண்களுக்கும் அபராதம் விதிக்கப்பட்டிருப்பதோடு 15 ஆண்டுகள் மேலதிக சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

2020 செப்டெம்பரில் ஆண் கைதிகள் குழு ஒன்று சிறைச்சாலையை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த நிலையில் அதன் பெண்கள் பகுதி மீது தீ வைக்கப்பட்டது. இதனால் 16 வயது சிறுமி உட்பட பெண் கைதிகள் சிறைச்சாலை முற்றவெளியில் உறங்க வேண்டி ஏற்பட்டதோடு அப்போது பாலியல் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

பெருமளவு நன்னீரை கடலில் கொட்டும் ஏ68 பனிப்பாறை

இராட்சத பனிப்பாறையான ஏ68 அது உருகும் உச்சத்தில் உள்ள ஒவ்வொரு நாளும் 1.5 பில்லியன் தொன் நன்னீரை கடலுக்குள் கொட்டுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது பிரிட்டன் நாட்டின் அனைத்து குடிமக்களும் நாளாந்தம் பயன்படுத்தும் நீரின் சுமார் 150 மடங்கு அதிக அளவாகும். ஏ68 பனிப்பாறை குறுகிய காலத்திற்கு உலகின் மிகப்பெரிய பனிப்பாறையாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. 2017 ஆம் ஆண்டு அது அன்டார்டிகாவில் இருந்து உடைந்தபோது சுமார் 6,000 சதுர கிலோமீற்றர் பகுதியை கொண்டிருந்தது. அதன் ஒரு ட்ரில்லியன் பனி உருகியுள்ளது. ஏ68 சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தாக்கம் பற்றி அளவிடும் முயற்சியில் ஆய்வாளர்கள் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த இராட்சத பனிப்பாறை அன்டார்டிகாவில் இருந்து தெற்கு பெருங்கடல் ஊடாக தெற்கு அட்லான்டிக் வரை நகர்ந்துவரும் நிலையில் அதன் பரிமாணத்தில் ஏற்படும் மாற்றம் பற்றி அனைத்து செய்மதி தரவுகளையும் ஆதாரமாகக் கொண்டு லீட்ஸ் பல்கலைக்கழகத்தின் தலைமையிலான குழு ஒன்று ஆய்வு நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மருந்து எதிர்ப்பு தொற்றுகளால் உலகில் பல மில். பேர் மரணம்

நுண்ணுயிர் கொல்லி மருந்தை எதிர்க்கும் பக்டீரியாவினால் ஏற்படும் தொற்றுகளால் 2019 ஆம் ஆண்டில் உலகெங்கும் 1.2 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருப்பதாக இது பற்றி மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

இது மலேரியா அல்லது எய்ட்ஸ் நோயினால் வருடாந்தம் ஏற்படும் உயிரிழப்புகளை விடவும் அதிகமாகும்.

வறிய நாடுகள் மோசமாக பாதிக்கப்பட்டபோதும் நுண்ணுயிர் எதிர்ப்பு அனைவரது சுகாதாரத்துக்கும் அச்சுறுத்தலாக உள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக பாதுகாப்புப் பெற புதிய மருந்துகளுக்காக முதலீடு செய்வதற்கும் தற்போதையவற்றை அறிவுபூர்வமாக பயன்படுத்துவதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அண்மைய ஆண்டுகளில் சாதாரண தொற்றுகளுக்கு நுண்ணுயிர் கொல்லி மருந்துகளின் அதிகப்படியான பயன்பாடு, அவை தீவிர தொற்றுகளுக்கு எதிராக குறைவான செயல்திறனைக் கொண்டதாக மாறுவதற்கு காரணமாகியுள்ளன.

சஹாரா பாலைவனத்தில் அரிதான பனிப் பொழிவு

சஹாரா பாலைவனத்தின் தட்பவெப்பநிலை உறைநிலையை பதிவானதை அடுத்து அங்கு மணலுக்கு மேலால் பனி பொழிந்துள்ளது.

58 செல்சியஸ் வெப்பநிலை பதிவாகும் உலகின் மிகப்பெரிய பாலைவனமான சஹாராவில் அரிதான நிகழ்வொன்றாகவே பனி படர்ந்துள்ளது.

வட மேற்கு அல்ஜீரியாவில் அமைந்திருக்கும் அயின் செப்ரா நகரில் பனிப்பொழிவு மற்றும் பனி படர்ந்த படங்கள் வெளியாகியுள்ளன.

இந்த நகரில் தற்போது வெப்பநிலை மைனஸ் 2 செல்சியஸ் அளவுக்கு வீழ்ச்சி அடைந்துள்ளது. எதிர்பாராத விதமாக பனி பொழிந்த நிலையில் மணலின் மேலால் பனி அற்புதமான வடிவத்தில் படர்ந்து காணப்படுகிறது.

எனினும் கடந்த 42 ஆண்டுகளில் இந்த நகரம் பனியை காண்பது இது ஐந்தாவது முறையாகும். இதற்கு முன்னர் 1979, 2016, 2018 மற்றும் 2021 இல் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது. சஹாரா பாலைவனத்தின் நுழைவாயில் என்று அழைக்கப்படும் அயின் செப்ரா நகர் கடல் மட்டத்தில் இருந்து 3,000 அடி உயரத்தில் அட்லஸ் மலைகளை சூழ்ந்த பகுதியாகும்.

பெருந்தோட்ட அமைச்சு

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் (SLSPC)

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - இயந்திராதிகளை வழங்குதல்

கண்டி, மாத்தளை, காலி மற்றும் ஹப்புத்தளை பிராந்தியங்களிலுள்ள SLSPC பெருந்தோட்டங்கள்

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவைப்படும் இயந்திராதிகளை வாடகைக்கமர்த்துவதற்கு மற்றும் இயந்திராதிகளை வழங்குவதற்கு கீர்த்தி வாய்ந்த வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

கேள்வி இல. SLSPC /PL/DEV./MACHINERY/T-23/2022

இயந்திரத்தின் வகை	அளவு	தன்மை	01 அலகு	தொகை (2க்கு மேற்பட்டவை)	பிணை வைப்பு
Excavator with rock breaker & bucket	30hp	Brand New			200,000/=
Excavator with rock breaker & bucket	70hp	Brand New			280,000/=
Shredder Machine (Chopping compost/ materials) Average 600 kg/hr. Diesel	Kg/hr	Brand New			12,000/=
Backhoe Loader project 21 JCB Both manual & Power shifter	30hp	Recondition			140,000/=
Excavator with rock breaker & bucket	70hp	Recondition			140,000/=
Excavator with rock breaker & bucket	30hp	Recondition			60,000/=

பின்வரும் வாகனங்கள் / இயந்திராதிகளை வாடகைக்கமர்த்துவதற்கு தனியான கேள்விகளை அனுப்புதல் வேண்டும். தயவு செய்து இயந்திர இயக்குநர் / எரிபொருள் சகிதம் மற்றும் இல்லாமல் என்பவற்றுக்கு கேள்வி கோரவும்.

Tender No. SLSPC/PL/DEV./MACHIERY/T-24/2022

இயந்திரத்தின் வகை	அளவு	01 அலகு	தொகை (2க்கு மேற்பட்டவை)
Excavator with rock breaker & Bucket	30hp		
Excavator with rock breaker & Bucket	70hp		
Backhoe Loader project 21 JCB Both manual & Power shifter	76hp		
Tipper Truck (Dump Truck)	01 cube		

மேற்படி கேள்விக்கான இயந்திரங்களின் விபரக்குறிப்புகள் / நிபந்தனைகள் கேள்விப் படிவங்கள் உள்ளடங்களான கேள்வி ஆவணங்களை 2022 ஜனவரி 24ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை 2000.00 ரூபாவைச் செலுத்துவதன் பேரில் கொழும்பு-12, இல. 21, மீரானியா வீதி, SLSPC தலைமை அலுவலகத்தில் அல்லது பன்வில, கல்பிஹில்ல, SLSPC பிராந்திய அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிக்கப்படும் வைப்பை ஒன்றில் மக்கள் வங்கி, 1ஆம் நகரக் கிளையில் பேணப்படும் 046100240000933 எனும் கணக்கிலக்கத்திற்கு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்புச் செய்து அல்லது அரச வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 01 வருட காலம் செல்லுபடியாகும் வகையிலான பிணை முறியொன்று சகிதம் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இயந்திராதிகளை வழங்குவதற்கான கேள்வி - அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்'' எனக் குறிப்பிட்டு தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 21, மீரானியா வீதி, கொழும்பு-12 எனும் முகவரிக்கு 2022 பெப்ரவரி 09ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

கேள்விகள் 2022-02-09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு SLSPC தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் சகல கேள்விதாரர்களும் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம். இந்தக் கேள்வியை ஏற்றுக்கொள்ளல் அல்லது கேள்வியின் ஒரு பகுதியை அல்லது முழுக் கேள்வியையும் இரத்துச் செய்யும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

தலைவர்,
பெறுகைக் குழு,
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,
இல. 21, மீரானியா வீதி,
கொழும்பு 12.

2022-01-19

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

2022/ 2023 ஆம் ஆண்டுகளில் ஒருவருட காலப்பகுதிக்கு தென்திசை அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு - கட்டுநாயக்க நெடுஞ்சாலை மற்றும் வெளிச்சுற்று அதிவேக நெடுஞ்சாலையின் செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவத்திற்காக பயணிகள் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான அழைப்பு

Contract No.: RDA/EOM&M/PRC/2022/MECH/01

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலமாக மேலேயுள்ள பெறுகைக்காக (கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வானங்களுக்கானது)தகுதியும் தகைமையுள்ளதுமான விலைமனுதாரரிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி சபையின் சார்பாக, வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

Vehicle	Quantity	Vehicle	Quantity	Vehicle	Quantity
Van-8 Seater	51	Crew Cabs	21	Car	01
Van-5 Seater	04	Double Cabs	6	Jeep	01

2. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகார சபை, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 038-2289122. தொலைநகல் : 038-2289560) அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
3. ஒவ்வொரு வாகனத்திற்கும் 5,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது புகழ்வாய்ந்த வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட நிபந்தனையற்ற வங்கி உத்தரவாத பாங்கொன்றாகவும் பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, ''மகனேகும'', 216 ஆம் இலக்கத்திலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
4. 2022.01.21 ஆம் திகதியிலிருந்து 2022.02.07 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,500 ரூபா + 200 (பெசேவ) ஐ செலுத்திய பின்னர், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, EOM&M பிரிவின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் சிங்கள மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2022.02.08 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, EOM&M பிரிவின் பணிப்பாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தயவு செய்து "RDA/EOM&M/PRC/2022/MECH/01" எனது குறிப்பிடவும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, EOM&M பிரிவின் பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி சபை பெறுகைக் குழு,
பணிப்பாளர் (EOM&M பிரிவு) மே/பா.,
வீதி அதிகார அபிவிருத்தி சபை, கஹட்டகஹஹேன,
வல்கம, பண்டாரகம.

அரசியலமைப்பு மாற்றத்திற்கான

நகல் சட்டத்தை ஆராய எதிரணிக்கும் அழைப்பு

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

அரசியலமைப்பு மாற்றத்திற்காக பிரதான குழுவால் நகல் சட்டம் விரைவில் சமர்ப்பிக்கப்பட்டதும் அது சபையில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படும். இதற்கு எதிரணிக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளதாக சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அரசியலமைப்பு நகல் சட்டத்தை அதற்காக நியமிக்கப்பட்ட பிரதான குழு விரைவாக அதனை கையளித்ததும் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கிறோம். இதனை பற்றி ஆராய்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும். எதிரணிக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். தேவையான உடன்பாடுகளை ஏற்படுத்தி தேவையான மாற்றங்களை மேற்கொண்டு விரைவாக செயற்படுத்த வேண்டும். அரசியலமைப்பு 20 தடவைகள் திருத்தப்பட்டுள்ளன. துண்டு துண்டாக மாற்றப்பட்டன. தேர்தல் முறையை மாற்ற வேண்டும் என அனைவரும் கோருகின்றனர்.

தேசிய தேவையை நிறைவேற்றும் வகையில் செயற்பட வேண்டும். வரவு செலவுத்திட்டத்தில் கிராமங்களை உயிரூட்டும் நடவடிக்கையில் இறங்கியுள்ளோம். நாடு முகங்கொடுத்துள்ள மோசமான இன்றைய நிலையில் அதலிருந்து மீள அடித்தளம் இடப்பட்டுள்ளது. நட்பு நாடுகளுடனும் சர்வதேச அமைப்புகளுடனமும் நெருக்கமாக செயற்பட்டு வருகிறோம். முதலீடுகளை அதிகரிக்க ஆவணசெய்யப்பட்டுள்ளது.

கொரோனாவினால் ஏற்பட்ட தாக்கத்தை முகாமைத்துவம் செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். மக்களின் உயிர்களை பாதுகாக்கவே அவர் முன்னுரிமை வழங்கினார். இந்த நிலையில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவது பொதுவானதே. பொருளாதாரத்தை பலப்படுத்த பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பயிர் செய்யப்படாத வீட்டுத் தோட்டங்கள் காணப்படுகின்றன. தற்பொழுது பல தோட்டங்களில் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அரிசி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதற்கு முகம் கொடுக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். உலக உணவுத்திட்டத்தின் பாடசாலை உணவு திட்டத்தில் நான் கைச்சாத்திட்டேன். எமது நாடு தனிமைப்படவில்லை. நட்பு நாடுகள் விலகவில்லை.

புதிய அபிவிருத்தி மார்க்கங்களை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீரை பாதுக்காக்க வேண்டும்.வடக்கிற்கான நீர்ப்பாசன திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடக்கிலுள்ள பல பிரதேசங்களில் மாற்றம் ஏற்படுத்தக் கூடியதாக இந்தத் திட்டம் அமையும்.

ஆசிரியர்களுக்காக வரலாற்றில் அதிக நிதி ஒதுக்கியது எமது ஜனாதிபதி மாத்திரமே. கொடுப்பனவு வழங்குவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கஷ்டமான நிலையில் இதனை செயற்படுத்த முடிந்துள்ளது. மூடிய சேவையாக ஆசிரியர் சேவையை மாற்ற இருக்கிறோம்.

புனரமைக்கப்பட்ட பிரதமர் அலுவலகம்

கொழும்பு, மலர் வீதியில் அமைந்துள்ள "சிறிமதீபாய" பிரதமர் அலுவலகம் புனரமைக்கப்பட்ட நிலையில் நேற்று (20) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரினால் திறந்து வைக்கப்பட்டது.

நினைவுக் கல்வெட்டை திரைநீக்கம் செய்த ஜனாதிபதி, அலுவலக வளாகத்திலுள்ள புத்தர் சிலைக்கு மலர் பூஜை செய்த பின்னர் அடையாள ரீதியாக கடமைகளை ஆரம்பித்து வைத்தார்.

புனரமைக்கப்பட்ட அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள புகைப்படங்களை பார்வையிட்ட ஜனாதிபதி, அலுவலக வளாகத்தையும் பார்வையிட்டார். அலுவலகத்தின் கடமைகளை ஆரம்பிப்பதை முன்னிட்டு தபால் அட்டையும் நினைவு முத்திரையும் ஜனாதிபதியின் தலைமையில் வெளியிடப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் பிரதமரின் முன்னாள் செயலாளர் காமினி செனரத்தின் மேற்பார்வையின் கீழ், இலங்கை கடற்படையினர் இந்த மாளிகையை புனரமைத்துள்ளனர்.

இந்த இரண்டு மாடி மாளிகையை ஆல்பர்ட் இம்மானுவேல் டி சில்வா தனது மகன் சர் ஆல்பர்ட் ஏர்னஸ்ட் டி சில்வாவுக்காக, 1916இல் நிர்மாணித்தார். இது, 1960ஆம் ஆண்டு அவரின் மறைவுக்குப் பின்னர் குடும்ப உறுப்பினர்களால் அந்த மாளிகை அரசாங்கத்துக்கு கையளிக்கப்பட்டது.

கல்வி மற்றும் வானொலி அமைச்சு, உள்ளூராட்சி மன்றம் மற்றும் வீடமைப்பு அமைச்சு ஆகியன, அக்காலத்தில் சிறிமதீபாயவில் இயங்கி வந்ததோடு, 1978ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ரணசிங்க பிரேமதாசவினால் சிறிமதீபாயவில் பிரதமர் அலுவலகம் நிறுவப்பட்டது.

நூறு வருடங்களுக்கு மேல் பழைமையான "சிறிமதீபாய", 44 வருடங்களின் பின்னர் அதன் பழைய தோற்றத்துக்கே முழுமையாகப் புனரமைக்கப்பட்டது.

"சிறிமதீபாய" வரலாறு பற்றிய தகவல்கள் மற்றும் புகைப்படங்கள் அடங்கிய நூல், ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தினால் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது.

புனரமைக்கப்பட்ட பிரதமர் அலுவலகத்தின் திறப்பு விழாவைக் குறிக்கும் வகையில், முன்னாள் பிரதமர்களின் செயலாளர்களுடன் ஜனாதிபதி புகைப்படத்துக்கு தோற்றினார். பின்னர் அவர் நினைவுப் பதிவேட்டில் ஒரு குறிப்பையும் பதிவிட்டார்.

அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, முன்னாள் பிரதமர்களின் செயலாளர்கள், அரச அதிகாரிகள் மற்றும் அல்பேர்ட் ஏர்னஸ்ட் டி சில்வாவின் உறவினர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

பெருந்தோட்ட அமைச்சு

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் (SLSPC)

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் – தேயிலை நாற்றுமேடை உபகரணங்களை வழங்குதல்

கண்டி, மாத்தளை, காலி மற்றும் ஹப்புத்தளை பிராந்தியங்களிலுள்ள SLSPC பெருந்தோட்டங்கள்

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டதிற்குத் தேவைப்படும் நாற்றுமேடை உபகரணங்களை வழங்குவதற்கு கீர்த்தி வாய்ந்த வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

கேள்வி இல. SLSPC/PL/RE-PLANT./NURSERY EQUIP./T-19/2022

உருப்படி இல.	உருப்படி	பிணை வைப்பு
1.	நாற்றுமேடை நிர்மாணம், நீர்ப்பாசனத்திற்கான பொருட்கள், நாற்றுமேடை கன்றுகளுக்கான பொலித்தீன்கள்	ரூபா 53,400.00
2.	விவசாயக் கருவிகள்	ரூபா 100,000.00

கேள்வி இல. SLSPC/PL/RE-PLANT./NURSERY EQUIP./T-20/2022

உருப்படி இல.	உருப்படி	பிணை வைப்பு
1.	12 நாற்றுமேடைகளுக்கான தெளிக்கும் நீர் முறைமைகளை (Sprinkler System) வழங்குதல் மற்றும் நிறுவுதல்	ரூபா 160,000.00

கேள்வி இல. SLSPC/PL/RE-PLANT./NURSERY EQUIP./T-21/2022

உருப்படி இல.	உருப்படி	பிணை வைப்பு
1.	தேயிலைக் கன்றுகளை வழங்குதல் - 100,000 கன்றுகள் (மொத்தம் 2,850,000 கன்றுகள்)	ரூபா 50,000.00

கேள்வி இல. SLSPC/PL/RE-PLANT./NURSERY EQUIP./T-22/2022

உருப்படி இல.	உருப்படி	பிணை வைப்பு
1.	உரம் / இரசாயனங்களை வழங்குதல்	ரூபா 100,000.00

மேற்படி நான்கு கேள்விக்கான விபரக்குறிப்புகள் / நிபந்தனைகள் கேள்விப் படிவங்கள் உள்ளடங்களான கேள்வி ஆவணங்களை 2022 ஜனவரி 24ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை 2000.00 ரூபாவைச் செலுத்துவதன் பேரில் கொழும்பு-12, இல. 21, மீரானியா வீதி, SLSPC தலைமை அலுவலகத்தில் அல்லது பன்வில, கல்பிஹில்ல, SLSPC பிராந்திய அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிக்கப்படும் வைப்பை ஒன்றில் மக்கள் வங்கி, 1ஆம் நகரக் கிளையில் பேணப்படும் 046100240000933 எனும் கணக்கிலக்கத்திற்கு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்புச் செய்து அல்லது அரச வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 01 வருட காலம் செல்லுபடியாகும் வகையிலான பிணை முறியொன்று சகிதம் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தேயிலை நாற்றுமேடை உபகரணங்களை வழங்குவதற்கான கேள்வி - மீள்பயிரிடல் நிகழ்ச்சித்திட்டம்'' எனக் குறிப்பிட்டு தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 21, மீரானியா வீதி, கொழும்பு-12 எனும் முகவரிக்கு 2022 பெப்ரவரி 09ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

கேள்விகள் 2022-02-09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு SLSPC தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் சகல கேள்விதாரர்களும் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம். இந்தக் கேள்வியை ஏற்றுக்கொள்ளல் அல்லது கேள்வியின் ஒரு பகுதியை அல்லது முழுக் கேள்வியையும் இரத்துச் செய்யும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

தலைவர்,
பெறுகைக் குழு,
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,
இல. 21, மீரானியா வீதி,
கொழும்பு 12.

2022-01-19

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

1964 – 28ஆம் இலக்கம் கொண்ட காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்ட படி காணி சுவீகரித்தல் சட்டத்தின் 33ஆவது விதியின் கீழ் அறிவித்தல்

காலி தொழிற்பயிற்சி மையத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட காணிக்கான நஷ்டயீட்டுத் தொகை காணி சுவீகரித்தல் கட்டளைச் சட்டத்தின் 33ஆவது விதியின் கீழ் மாவட்ட நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அந்தக் காணிக்கு முன்னுரிமை கோறுபவராக இருந்தால் சம்மந்தப்பட்ட வழக்கு இலக்கத்தின் கீழ் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜராகி நஷ்டயீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலதிக விபரங்களுக்காக 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி இலக்கம் 2254/36 கொண்ட இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் விஷேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

அடிப்படைத் திட்டம் இலக்கம்	துண்டு இலக்கம்	நஷ்டயீட்டுத் தொகை	வழக்கு இலக்கம்	நீதிமன்றம்
4198	01	ரூ. 1000	LA 719	காலி

ஐ. ஹிமாலி ரத்னவீர,
பிரதேச செயலாளர்,
காலி நான்கு கடவைகள்

கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

03 வருட காலத்திற்கு மாதாந்த குத்தகை அடிப்படையில் இரண்டு கார்களை கொள்வனவு செய்தல்

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் இரண்டு முகாமைத்துவ பதவிகளுக்கு மாதாந்தம் **இரண்டு இலட்சம் (ரூ.200,000/-)** மற்றும் **ஒரு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் (ரூ.135,000/-)** எனும் வரம்பின் கீழ் 03 வருட காலத்திற்கு மாதாந்த குத்தகை அடிப்படையில் இரண்டு கார்கள் தேவைப்படுகின்றன.

நீங்கள் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாக இருந்தால், Diesels / Petrol / Hybrid / Electric ஆகிய பிரிவுகளின் கீழ் விண்ணப்பிக்கலாம். (SUV விசேடமானது)

மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக **011-2540092 அல்லது 071-2045355** எனும் தொலைபேசி மூலமாக இலங்கை கடற்படை கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். மின்னஞ்சல் **supply@cfc.gov.lk**.

தலைவர்,
இலங்கை கடற்படை கூட்டுத்தாபனம்
இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, மோதர, கொழும்பு 15.

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)
7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல WGSWD&EIP/ACQ/KB/18
காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/10/2012/LRB/328

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் அரசுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இக் காணித் துண்டு தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படவுள்ள நட்டஈட்டு உரித்து விசாரணைகள் 2022ஆம் வருட சனவரி மாதம் 28ஆம் திகதி நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2022.01.11 ஆம் திகதிய 2262/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்க.

அட்டவணை

1. ***மாகாணம்*** : மேல் மாகாணம்
2. ***மாவட்டம்*** : கொழும்பு
3. ***பிரதேச செயலாளர் பிரிவு*** : கெஸ்பேவை
4. ***அமைவிடம்*** : கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவில், தும்போவில கிராமம்
5. ***கிராமம்*** : தும்போவில
6. ***வரைபட இல*** : கடத்திரள் வரைபட இல. 521203 (16 தொகுதிகளில், தொகுதி இல. 16 தாள் இல. 3), (தொகுதி இல. 20, தாள் 2)
7. ***துண்டு இல*** : மேற்குறித்த அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்க

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்.
கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவு

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம், இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய.
2022.01.13

பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் (பிறைவட்) லிமிட்டட் - பொது அறிவித்தல் [PV 660]

சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் பீனிக்ஸ் வென்சர்ஸ் (கம்பனி பதிவெண் PV 807 PB) உடன் பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் (பிறைவட்) லிமிட்டட் (கம்பனி பதிவெண் PV 660) இன் முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்பிற்காக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட (சட்டம்) 242 ஆம் பிரிவின் (3) (டி) ஆம் உபபிரிவின் பிரகாரமான பொது அறிவித்தல்.

கம்பனிச் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் (பிறைவட்) லிமிட்டட் உடன் பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் ஐ ஒன்றிணைப்பதற்காகவும் பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் ஆனது ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியாக தொடர்ந்து செயற்படவும் பீனிக்ஸ் பிளாண்டேசன் (பிறைவட்) லிமிட்டட் இன் சபையும் பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் இன் பணிப்பாளர் சபையும் 2021 நவம்பர் 16 ஆம் நாள் தீர்மானித்துள்ளது.

கம்பனிச் சட்டம் 243 ஆம் பிரிவில் கூறப்பட்ட ஆவணங்களுடன் உத்தேசிக்கப்பட்ட கம்பனி ஒன்றிணைப்பிற்கான ஆவணங்களையும் பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் மற்றும் பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் (பிறைவட்) லிமிட்டட் ஆகியவை, பதிவிற்காக கம் பனிகளின் பதிவாளர் நாயகத்துடன் கோவை செய்தின் பிரகாரம் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 20 வேலை நாட்களிற்கு குறையாத காலப்பகுதிக்குள், கம்பனிகளின் பதிவாளர் நாயகம் சட்டத்தின் 244 (2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒன்றிணைப்பு சான்றிதழை வழங்கிய பின்னர், ஒன்றிணைப்பானது செயல்வலுப்பெறும்.

பீனிக்ஸ் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் மற்றும் பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் (பிறைவட்) லிமிட்டட் ஆகியவற்றின் சபைகளினால் ஒன்றிணைப்பை அங்கீகரிக்கும் தீர்மானங்களை அடக்கியுள்ளதாககருதப்படும் ஒன்றிணைப்பு தீர்மானத்தின் பிரதிகள் சட்டத்தின் 242(4) ஆம் பிரிவின் பிரகாரம் எந்தவொரு பங்குதாரர் அல்லது கம்பனியின் கடன்கொடுனர் அல்லது கம்பனி கடப்பாடுடைய எந்தவொரு நபர் ஆகியோரும் பரீட்சிப்பதற்காக சாதாரண வேலை நேரங்களில் கொழும்பு-03, ரெயின்லண்ட் பிளேஸ், 25 ஆம் இலக்கத்திலுள்ள கம்பனியின் பதிவு அலுவலகத்தில் பரீட்சித்தலுக்காக வைக்கப்பட்டுள்ளன.

கம்பனியின் ஒரு பங்குதாரர் அல்லது கடனாளி அல்லது கம்பனி கடப்பாடாகவுள்ள எந்தவொரு நபரும் கம்பனிக்கு கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் கம்பனி ஒன்றிணைப்பு தீர்மானத்தின் பிரதியொன்றை இலவசமாக பெற்றுக் கொள்ள உரித்தாவார்.

பீனிக்ஸ் பிளாண்டேசன்ஸ் (பிறைவட்) லிமிட்டட்
இன் சபையின் கட்டளைப்பிரகாரம்.

பி டபிள்யு கோர்ப்பரேட் செக்கிரட்டெரியல் (பீவிடீ) எல்டீடி
செயலாளர்கள்.

2022 சனவரி 07 ஆம் திகதியாகிய இந்நாளன்று

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

1350 KVA டீசல் மின் பிறப்பாக்கியின் – (PR – 4519) வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்கான தேசிய போட்டிரீதியான விலைமனு

செவனகல பிரிவுக்கு 1350 Kva டீசல் மின் பிறப்பாக்கியின் வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்காக ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000.00 இலங்கை ரூபாவை செலுத்தி 2022 பெப்ரவரி 14 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும். ரொக்கப்பணம் மூலம் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
2. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை 2022 பெப்ரவரி 15 ஆம் திகதி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் கைகளால் கொண்டுவந்து சேர்ப்பது பதிவுத் தபால் அல்லது விரைதூதர் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "1350 KVA டீசல் மின் பிறப்பாக்கியின் - (PR – 4519) வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்கான கேள்விமனு" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து விலைமனுக்களும் இ. ரூபா 600,000.00 (அறுநூறாயிரம்) "விலைமனு பிணையை" கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு மதிப்பிடப்படும் செலவு 45 மில்லியன் இ. ரூபா.
5. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு செவனகல கேட்போர்கூடத்தில் 2022 பெப்ரவரி 7 ஆம் திகதி 9.30 மணிக்கு இடம்பெறும்.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - கொள்முதல் முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. +94 11 2505558, கைபேசி + 94 71 9803859, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: chandana@lscl.lk).

தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்
இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04.

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)
7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல. WGSWD&EIP/ACQ/MH/13
காணி அமைச்சின் இல. 4-3/10/2016/LRB/197

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டு அரசுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இக் காணித் துண்டு தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படவுள்ள நட்டஈட்டு உரித்து விசாரணைகள் 2022.01.28ஆம் திகதி நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2021.01.11 ஆம் திகதிய 2262/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்க.

அட்டவணை

1. ***மாகாணம்*** : மேல் மாகாணம்
2. ***மாவட்டம்*** : கொழும்பு
3. ***பிரதேச செயலாளர் பிரிவு*** : மகறகமை
4. ***அமைவிடம்*** : மகறகமை நகர சபை எல்லைக்குட்பட்ட கங்கொடவில கிராமம்
5. ***கிராம உத்தியோகத்தர் பிரிவு :*** ஐம்புகஸ்முல்ல
6. ***கிராமம்*** : கங்கொடவில
7. ***வரைபட இல*** : ஆரம்ப வரைபட இல. மோ: 9850
8. ***காணியின் பெயர்கள்*** : கஜ"கஹவத்த, வளவ்வத்த வீதியில் வரி மதிப்பீட்டு இல தெரியாத காணி
9. ***துண்டு இல*** : துண்டு இல. 1
10. ***விஸ்தீரணம்*** : 0.1991 ஹெக்டயார்

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்.
மகறகமை பிரதேச செயலாளர் பிரிவு

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம், இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கடை, இராஜகிரிய.
2022.01.13

சுகாதாரம், போசணை மற்றும் தேசிய மருத்துவ அமைச்சு

விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை தாதியர் விடுதியொன்றிற்காக வீடொன்றை குத்தகைக்கு எடுத்தல்

2022.04.01 முதல் 2023.03.31 வரையான ஒருவருட காலத்திற்கு விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் பெண் தாதியார்களுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்காக வீடொன்றைக் குத்தகைக்கு எடுப்பதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது. அது பின்வரும் தேவைப்பாடுகளைப் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

1. 12 பெண் தாதியர்களுக்குப் போதியளவு அறைகள் மற்றும் இடவசதிகள் மற்றும் சமையலறையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். வீடொன்றின் மூலம் மேற்படி தேவையைப் பூரணப்படுத்த இயலாத பட்சத்தில் அடுத்துள்ள இரண்டு வீடுகள் கவனத்தில் கொள்ளப்படும்.
2. வைத்தியசாலையிலிருந்து 3 கி.மீற்றருக்கு மேற்படாத தொலைவில் பிரதான வீதிக்கு அண்மையில் அமைந்திருத்தல் வேண்டும். அல்லது இலகுவில் சென்றடையக் கூடிய அமைவிடமொன்றில் அமைந்திருத்தல் வேண்டும். 3 கி. மீற்றர் எல்லையினுள் தகுதியான வீடொன்று இல்லாத பொழுது, பிரதான வீதிக்கு முகப்பாக 5 கி. மீற்றரிலுள்ள வீடும் கவனத்திற் கொள்ளப்படும்.
3. நீர்க்குழாய் வசதிகள் மற்றும் மின்சாரம் இருத்தல் வேண்டும். (அவற்றிற்காக புறம்பான கட்டணப்பட்டியல்கள் இருத்தல் வேண்டும்.)
4. குறைந்தபட்சம் குளியலறைகள் மற்றும் கழிவறைகள் இரண்டு இருத்தல் வேண்டும். அவை வீட்டின் உட்புறத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
5. வீட்டைச் சுற்றிவர பாதுகாப்பு வேலி மற்றும் நுளைவுக்கதவு இருத்தல் வேண்டும். யன்னல்கள் கிரில்களுடன் கூடியதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் வீட்டிற்குப் போதியளவு பாதுகாப்பு இருத்தல் வேண்டும்.
6. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் வைத்தியசாலையின் நிருவாகச் சபையுடன் வருடமொன்றிற்காக குத்தகை ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

மேற்படி தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள நபர்கள் 2022.01.21 முதல் 2022.02.10 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலப்பிரிவில் எழுத்துருவில் விண்ணப்பித்து ரூபா 500/-ஐ செலுத்தி இதற்கான விலைமனுப்படிவங்களை வைத்தியசாலையின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் 2022.02.11 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் அல்லது பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் முடியும். குறித்த தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'தாதி அலுவலர்களின் விடுதிக்காக வீடொன்றைக் குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளல் - 2022ஆம் ஆண்டு எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுத்திறக்கப்படும் நேரம்: 2022.02.11 அன்று மு.ப. 10.00

அவ் வேளையில் குறித்த விண்ணப்பதாரர் அல்லது பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். தாமதமாகக் கிடைக்கப் பெறும் அனைத்து விலைமனுக்களும் நிராகரிக்கப்படுவதுடன் ஏதேனும் விலைமனுவொன்றை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும். மேலதிக தகவல்களிற்காக தொலைபேசி இல. 011-2258862 - 4 மூலம் விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் நிருவாக அலுவலர், கணக்காளரிடம் அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,
சீதுவ.

விலங்குற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

கிழக்கு மாகாணம் – பெறுகை அறிவித்தல்

2022 பெப்ருவரி 25 ஆம் திகதியிலிருந்து 2023 பெப்ருவரி 25 ஆம் திகதி வரையுமான 12 மாத காலப்பகுதிக்காக திருகோணமலை, கிழக்கு மாகாணம், விலங்குற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு கோழித்தீன் மற்றும் கறவை மாடுகளுக்கான உணவு ஆகியவற்றை வழங்குவதற்காக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அம்ச விளக்கம் கீழே வழங்கப்பட்டுள்ளன.

Procurement No.: EP/APH/POULTRY FEED/2022/01

S.No.	Type of Feed	Source of Fund	Quantity
01.	Commercial Starter Feed	Farm Revenue Acc	282 Mt
02.	Commercial Layer Feed		240 Mt
03.	Commercial Crower Feed		50 Mt

Procurement No.: EP/APH/DAIRY CATTLE FEED/2022/02

S.No.	Type of Feed	Source of Fund	Quantity
01.	Dairy Cattle Feed	Farm Revenue Acc	40 Mt

1. 2022.01.22 ஆம் திகதியிலிருந்து 2022.02.14 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2.55 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களுக்கான மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 1000 ரூபாவை மக்கள் வங்கியின் 066-1-001-6-7200601 என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பின்னர், திருகோணமலை, உட்துறைமுக வீதி, கிழக்கு மாகாணம், விலங்குற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள மாகாண பணிப்பாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம்.
2. 2022.02.14 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Supply of Poultry Feed or Dairy Cattle Feed"** என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, விலங்குற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம், கிழக்கு மாகாணம், உட்துறைமுக வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும்.
3. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே கிழக்கு மாகாண, மாகாண பணிப்பாளரின் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் ஆகியோர் விலைமனுக்களை திறக்கும் நிகழ்விற்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களை சாதாரண அலுவலக நேரங்களில் திருகோணமலை, உட்துறைமுக வீதி, கிழக்கு மாகாணம், விலங்குற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள மாகாணப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி : (026) 2222 183/**077 6911 603/077 344 5073/071772 8444/071 845 2558**
மின்னஞ்சல் : **ep.aph.fin@gmail.com**

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
விலங்குற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்,
கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை.
2022.01.19

The Housewives' companion
Classifieds on
Daily News

இலங்கைக்கு தங்கப் பதக்கம் பெற்ற

தினேஷ் பிரியந்த ஹேரத்திற்கு பிரதமரினால் வீடு அன்பளிப்பு

டோக்கியோவில் நடைபெற்ற பராலிம்பில் 2020 ஈட்டி எறிதல் போட்டியில் புதிய உலக சாதனையை நிலைநாட்டி இலங்கைக்கு தங்கப் பதக்கம் வென்று கொடுத்த தினேஷ் பிரியந்த ஹேரத்திற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் (19) புதிய வீடொன்றை அன்பளிப்பாக வழங்கினார்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்களின் தலையீட்டின் கீழ்; பெற்றுக்கொடுக்கப்பட்ட இவ்வீட்டிற்கான 'அன்பளிப்பு பத்திரம்' கௌரவ பிரதமரினால் தங்கப் பதக்கம் வென்ற வீரர் தினேஷ் பிரியந்த ஹேரத்திற்கு அலரி மாளிகையில் வைத்து வழங்கிவைக்கப்பட்டது.

உலக சாதனையை நிலைநாட்டி இலங்கைக்கு தங்கப் பதக்கம் வென்று கொடுத்த தினேஷ் பிரியந்த ஹேரத்திற்கு புதிய வீடொன்றை பெற்றுக்கொடுக்குமாறு கடந்த ஆண்டு செப்டம்பர் 08ஆம் திகதி கௌரவ பிரதமர் குறிப்பிட்டிருந்ததற்கு அமைய நேற்று அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதற்கமைய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய கொழும்பு 02 கொம்பனித்தெருவில் அமைந்துள்ள மெட்ரோ

ஹோம்ஸ் வீடமைப்பு திட்டத்தின் 40 ஏ 4/10 இலக்க வீடு தினேஷ் பிரியந்த ஹேரத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

தற்போது இலங்கையில் பரா வீர வீராங்கனைகளின் திறமை உயர் மட்டத்தில் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, எதிர்காலத்தில் தேசிய விளையாட்டு போட்டியில் பரா விளையாட்டுகளையும்; சேர்க்கும் யோசனை குறித்து பிரதமருக்கு விளக்கமளித்தார்.

பரா வீர வீராங்கனைகளின் திறமையை வெளிக்கொணர்வதற்கான சந்தர்ப்பத்தை அதிகரிப்பது பாராட்டுக்குரிய விடயமாகும் என கௌரவ பிரதமர் இதன்போது குறிப்பிட்டார்.

சந்தர்ப்பத்தில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் அனுராத விஜேகோன், விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமல் எதிரிசூரிய, பராலிம்பிக் குழுவின் தலைவர் லெப்டினன் கேர்னல் தீபால் ஹேரத், பராலிம்பிக் குழுவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் அம்பேமொ ஹொட்டி, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் (காணி) அனுர பிரசன்ன, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் (வீடு) ரத்ன குமார மற்றும் தேசிய விளையாட்டு சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

என்.என்.சீ அணி சம்பியன்

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று லெஜென் அணியின் ஏற்பாட்டில் கழகத்தின் தவிசாளர் நிஹால் முஸ்தபா தலைமையில் நடைபெற்ற கடினபந்து முக்கோண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று என்.என்.சீ.கழகம் வெற்றி பெற்று இவ்வாண்டுக்கான சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் அக்கரைப்பற்று றோயல் அணியினருக்கும்,அக்கரைப்பற்று என்.என்.சீ.அணியினரும் கலந்து கொண்டனர்.

இதன்போது நாணயச்சுழச்சியில் வெற்றி பெற்ற என்.என்.சீ. அணியினர் 20 ஓவர் நிறைவில் 6 விக்கட் இழற்பிற்கு 143 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். இதில் அக்ரம் 51 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றோயல் அணியினர் 18.2 ஓவர் நிறைவில் சகல விக்கட்களையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். இம் முக்கோண சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று என்.என்.சீ.அணியினர் 34 ஓட்டங்களினால் வெற்றி பெற்று இவ்வாண்டுக்கான லெஜென் வெற்றிக் கிண்ணத்தினை

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சாய்ந்தமருது கடினபந்து கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் எம்.எச்.ஏ. காலித்தீனிடமிருந்து பெற்றுக் கொண்டனர். இச்சுற்றுப்போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக அக்ரமும், தொடர் ஆட்ட நாயகனாக முஸ்பிகும் தெரிவு செய்யப்பட்டு அதிதிகளினால் கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் கழகங்களின் தலைவர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

நெஷனல் சுப்பர் லீக் தொடர் இம்மாத இறுதியில் ஆரம்பம்

இலங்கையின் முன்னணி கிரிக்கெட் தொடராக கடந்த ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டிருந்த, நெஷனல் சுப்பர் லீக் எதிர்வரும் 24ஆம் திகதி முதன்முறையாக ஆரம்பமாகின்றது.

இலங்கை கிரிக்கெட் தொழில்நுட்பக் குழு வழங்கியிருந்த ஆலோசனைக்கு அமைய கடந்த ஆண்டு இலங்கையின் கிரிக்கெட் கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட்டு நெஷனல் சுப்பர் லீக் தொடர் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

அணிக்கு 50 ஓவர்கள் கொண்ட ஒருநாள் போட்டிகளாகவும், நான்கு நாட்கள் கொண்ட முதல்தரப் போட்டிகளாகவும் நடைபெறவுள்ள நெஷனல் சுப்பர் லீக் தொடரில் இலங்கையின் முன்னணி கிரிக்கெட் கழகங்களினைச் சேர்ந்த வீரர்கள் 100 பேர் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, தம்புள்ளை மற்றும் காலி என ஐந்து பிரதேசங்களுக்குரிய அணிகளைப் பிரதிநிதித்துவம் செய்யவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அதன்படி இலங்கையின் முன்னணி கிரிக்கெட் கழகங்கள் 26 உம், அதன் வீரர்களும் கீழே காணப்படும் அட்டவணைக்கு அமைவாக பிரதேச அணிகளுக்காக பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றது.

இதேநேரம் NCC, SSC, CCC, தமிழ் யூனியன் மற்றும் கோல்ட்ஸ் ஆகிய கிரிக்கெட் கழகங்கள் அவை கொண்டிருக்கும் வசதிகளின் அடிப்படையில் தாம் இடம் பெற்றிருக்கின்ற பிரதேச அணிக்குரிய குழுவின் மத்திய நிலையமாக செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இம்மாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நெஷனல் சுபர் லீக் தொடர் ஒருநாள் போட்டிகளாக இருக்கும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதோடு, அந்த தொடரின் இறுதிப் போட்டி பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி இடம்பெறவிருக்கின்றது.

நெஷனல் சுப்பர் லீக் ஒருநாள் போட்டிகளாக நடைபெற்ற பின்னர் நான்கு நாட்கள் கொண்ட முதல்தரப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அணிகள்

கண்டி:– கமிந்து மெண்டிஸ் (அணித்தலைவர்), நிரோஷன் டிக்வெல்ல, பெதும் நிஸ்ஸங்க, லசித் குரூஸ்புள்ளே, கமில் மிஷார, ஒசத பெர்னாண்டோ, சஹான் ஆராச்சிகே, லஹிரு உதார, விஷ்வ சத்துரங்க, அஞ்சலோ பெரேரா, திக்ஷில டி சில்வா, சத்துரங்க டி சில்வா, சாமிக்க கருணாரட்ன, லஹிரு குமார, துஷ்மன் சமீர, சாமிக்க குணசேகர, அசித்த பெர்னாண்டோ, அஷைன் டேனியல், லசன்த ருக்மல், புலின தரங்க, சசிந்து கொலம்பகே.

கொழும்பு :– தசுன் ஷானக்க (அணித்தலைவர்), சரித் அசலன்க (பிரதி தலைவர்), தனுஷ்க குணத்திலக்க, கிரிஷான் சஞ்சுல, அவிஷ்க பெர்னாண்டோ, குசல் மெண்டிஸ், நிபுன் தனன்ஞய, சம்மு அஷான், நுவனிது பெர்னாண்டோ, அஷேன் பண்டார, ரொஷேன் சில்வா, சசிந்த ஜயத்திலக்க, லஹிரு மதுசங்க, கலன பெரேரா, ஹிமேஷ் ராமநாயக்க, மொஹமட் டில்ஷான், பிரபாத் ஜயசூரிய, தரிந்து ரத்நாயக்க, கவிந்து நதீஷன்.

யாழ்ப்பாணம்:– தனன்ஞய டி சில்வா (அணித்தலைவர்), சதீர சமரவிக்ரம (பிரதி தலைவர்), நிஷான் மதுஷ்க, லஹிரு திரிமான்ன, நவோத் பரணவிதான, ஜனித் லியனகே, சந்துஷ் குணத்திலக்க, இஷான் ஜயரட்ன, ரவிந்து பெர்னாண்டோ, சுரங்க லக்மால், நுவன் பிரதீப், பினுர பெர்னாண்டோ, ஜெப்ரி வன்டர்சே, திலும் சுதீர, சமிந்த பெர்னாண்டோ, விஜயகாந்த் வியாஸ்காந்த், பிரமோத் மதுஷன், நிபுன் மாலிங்க, கசுன் மதுசங்க

காலி:– அஞ்சலோ மெதிவ்ஸ் (அணித்தலைவர்), தினேஷ் சந்திமால் (பிரதி தலைவர்), அஷான் ரன்திக்க, முதித லக்ஷான், ஹிமாஷ லியனகே, அசேல குணரட்ன, விஷாத் ரன்திக்க, தனன்ஞய லக்ஷான், ரமேஷ் மெண்டிஸ், பிரவீன் ஜயவிக்ரம, மகீஷ் தீக்ஷன, அகில தனன்ஞய, நிமேஷ் விமுக்தி, சுமின்த லக்ஷான், பிரியமால் பெரேரா, கவிஷ்க அஞ்சுல, ஜெஹான் டேனியல், மொஹமட் சிராஸ், மொஹமட் சமாஸ்.

தம்புள்ளை:– அஷான் பிரியஞ்சன், மினோத் பானுக்க, கயான் மனீஷன், ரொன் சந்திரகுப்தா, பவன் ரத்நாயக்க, சோனால் தினுஷ, பானுக்க ராஜபக்ஷ, லசித் அபேய் ரத்ன, வனிந்து ஹஸரங்க, சமீர சந்தமால், துஷான் ஹேமன்த, விஷ்வ பெர்னாண்டோ, நுவான் துஷார, அனுக் பெர்னாண்டோ, லஹிரு சமரக்கோன், துவிந்து திலகரட்ன, அம்ஷி டி சில்வா.

பயிற்றுவிப்பாளர்கள்

கண்டி :– மலிந்த வர்ணபுர, பியல் விஜேதுங்க, தினுக் ஹெட்டியாராச்சி, சனுக்க திசாநாயக்க

கொழும்பு :– ருவின் பீரிஸ், தம்மிக்க சுதர்ஷன, தர்ஷன கமகே

யாழ்ப்பாணம் :– திலின கண்டம்பி, சஜித் பத்திரன, கயான் விஜேகோன்

காலி :– ஜெஹான் முபாரக், சம்பத் பெரேரா, சம்மில பெரேரா

தம்புள்ளை :– அவிஷ்க பெர்னாண்டோ, உபுல் சந்தன, சமன் ஜயந்த, சஜீவ வீரக்கோன்

கண்டி NCC	கொழும்பு SSC	யாழ்ப்பாணம் தமிழ் யூனியன் கி.க.	காலி கோல்ட்ஸ் கி.க.	தம்புள்ளை CCC
சிலாபம் மேரியன்ஸ் கி.க.	செரசன்ஸ் வி.க.	ராகம கி.க.	இராணுவப்படை வி.க.	BRC
ஏஸ் கெபிடல் கி.க.	நீர்கொழும்பு கி.க.	லங்கன் கி.க.	பாணதுறை வி.க.	கடற்படை வி.க.
விமானப்படை வி.க.	செபஸ்டியனைட்ஸ் கி.க.	களுத்துறை நகர கழகம்	காலி கி.க.	பதுரெலிய கி.க.
கண்டி சுங்க வி.க.	பொலிஸ் வி.க.	புளூம்பீல்ட் கி.க.	சோனகர் கி.க.	குருநாகல்இ ளையோர் கி.க.

மருதமுனை பிரைட் பியூச வி.க தொடரை கைப்பற்றியது

பெரியநீலாவணை விசேட நிருபர்

மருதமுனை பிரைட் பியூச விளையாட்டுக் கழகத்தினருக்கும் புத்தளம் கம்மந்தொழுவ சுபர் இலெவண் விளையாட்டு கழகத்தினருக்கும் இடையே புத்தளம் கல்லடிய ஹொல்சிம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இரண்டு இருபதுக்கு இருபது கடின பந்து இரு போட்டிகளிலும் மருதமுனை பிரைட் பியூச விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று 20 எனும் ரீதியில் தொடரை கைப்பற்றியது.

முதலாவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பிரைட் பியூச விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பை தேர்ந்தெடுத்து கம்மந்தொழுவ சுப்பர் இலெவண் அணியினரை 95 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்தியது. இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பிரைட் பியூச விளையாட்டுக் கழக

அணியினர் 18வது ஓவரில் 5 விக்கட் இழந்து 96 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

இரண்டாவது போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கம்மந்தொழுவ சுபர் இலெவண் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்து 18.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 100 ஓட்டங்களை பெற்றது பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பிரைட் பியூச விளையாட்டுக் கழகம் 15வது ஓவர்களில் 8 விக்கட் இழப்பிற்கு 101 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

செஹான் சேமசிங்க சம்பியன்ஷிப் சைக்கிள் ஓட்டப் போட்டி

அனுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

செஹான் சேமசிங்க தடகள சம்பியன்ஷிப் ஆண்கள் சைக்கிள் ஓட்டுதல் போட்டி எதிர்வரும் (23) அனுராதபுரம் விமான நிலைய வீதியில் ஆரம்பமாகவுள்ளன.விண்ணப்ப வரிசையில் 200 போட்டியாளர்கள் மட்டும் பங்கேற்கும் வெற்றி பெறுபவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும்.

போட்டியானது 140 கிலோ மீற்றர் தூரத்தை கொண்டதாகும். இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவின் அனுசரணையில் அனுராதபுரம் மாவட்ட சைக்கிள் ஓட்ட சங்கம் அனுராதபுரம் டுவில் சைக்கிள் ஓட்ட விளையாட்டு கழகம் மற்றும் இலங்கை சைக்கிள் ஓட்ட நடுவர் சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள திறந்த ஸ்டெண்டட் சைக்கிள் ஓட்ட போட்டியில் இரண்டாம் இடம் பெறுவோருக்கு 75 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் இடம் பெறுவோருக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். அதுமட்டுமின்றி 15 வது இடம் வரை மேலும் பல ரொக்கப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

மேலும் அனுராதபுரம் மாவட்டத்தில் போட்டியில் பங்குபெறும் போட்டியாளர்களினுள் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாவதாக போட்டியை முடித்த மூவருக்கு 25 ஆயிரம், 15 ஆயிரம், 10 ஆயிரம் ரூபா பரிசும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஞாயிறு (23) காலை 08.00 மணிக்கு இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தலைமையில் போட்டி ஆரம்பமாகும். அனுராதபுரம் விமான நிலைய வீதி, ஐம்பது கடை பகுதி, 12 கடை பகுதி, தஹியாகம சந்தி, தலாவ, தம்புத்தேகம, 5 வது மைல் வீதி , இராஜாங்கனை சந்தி, நொச்சியாகம, பன்டுளகம, 2 வது மைல் வீதி, யாழ்ப்பாணம் சந்தி, மிஹிந்தலை, கல்குளம், கவரக்குளம் ஊடாக மீண்டும் அனுராதபுரம் விமான நிலைய வீதியில் போட்டி நிறைவடையும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

நொத்தாரிஸ் இறுதிப்பரீட்சைக்கு தோன்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் அறிவித்தலாகும்.

குருணாகல், குளத்து வீதி, இலக்கம் 158/42E, என்ற இடத்தில் வசிக்கும் எதிரிசிங்க ஆரச்சிலாகே தமோதா தம்ஷானி எதிரிசிங்க ஆகிய நான் குருணாகல் மாவட்டத்தில் சிங்கள மொழியில் செயற்படும் பிரசித்த நொத்தாரிஸ் ஆக நுழைவதற்கு நொத்தாரிஸ் இறுதிப் பரீட்சைக்கு தோன்றுவதற்கு நொத்தாரிஸ் நோட்டரி ஆணைச் சட்டத்தின் (அதிகாரம் 107) பிரிவு 7-இன்படி இன்றிலிருந்து ஒரு மாதம் முடிந்ததன் பின்னர் பதிவாளர் ஜெனரலுக்கு கோரிக்கை விடுக்கப்படுகிறது என்பதை பதிவாளர் சோஷலிச குடியரசு மற்றும் அனைத்து பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈ.ஏ.டீ.டி. எதிரிசிங்க
158/42E, குளத்து வீதி,
குருணாகல்,
18.01.2022

நோட்டரி எழுத்தர்

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2021ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

பீ.கே.பிரபாத் சந்திரகீர்த்தி
தொழில் ஆணையாளர் அதிபதி

தொழில் திணைக்களம்
கொழும்பு - 05
2022ஆம் ஆண்டு சனவரி மாதம் 19ஆம் திகதி

கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தி தொழில்	**வேலையாள் ஒரு நாளைக்கு ரூ. 1019.95**

இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு, செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு, செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின்படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில் தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

பிழை திருத்தம்

2022.01.10ம் திகதி தினமின, தினகரன், டெயிலிநியூஸ் பத்திரிகைகள் மூன்றிலும் பிரசுரமான பெறுகை அறிவித்தலில் தொடர் இல. 01இல் குறிப்பிடப்படும் விடயங்கள் பின்வருமாறு திருத்தப்படுவதாக அறிவிக்கின்றேன்.

டபிள்யூ.எப்.ஏ.எப். குணசேக்கர,
தலைவர்,
வத்தளை மாபோல நகர சபை.

வத்தளை மாபோல நகர சபையில்

	கடை அறை அமைந்துள்ள இடம்	மாதாந்த குறைந்த பட்ச கேள்வி ரூ.	மீளளிக்கப் படாத தொகை ரூ.	கேள்விப் பிணை வைப்பு (மீளளிக்கப் படும்) ரூ.	கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப் படாத) ரூ.	காலம்
01	எவரிவத்த தபாலகம் மேல் மாடியை குத்தகைக்கு விடல்	8,500.00	750,000.00	25,500.00	3,000.00	2022.02.01 - 2025.01.31

விலைமனுக்களுக்கான அழைப்பு

கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல

தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

நிதியிடல்: இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான OPEC நிதியம்

1. தொழில்நுட்ப ஆய்வுகூடத்தில் இருக்கும் வசதிகளை புதுப்பிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை அமைச்சின் செயலாளரின் சார்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளர், மேல் மாகாண பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
ஒப்பந்த இல.	செயற்றிட்டத்தின் பெயர்	மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா)	கேள்விப் பிணையின் பெறுமதி (ரூபா) (கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 105 (நூற்றி ஐந்து) நாட்கள் வரை செல்லுபடியாகும்)	நிர்மாணக் காலம் (நாட்கள்)	நிர்மாணத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் (நேரடி ஒப்பந்தக் கிரயம்) வெட் இன்றி	தேவையான ஆகக் குறைந்த CIDA பதிவு மற்றும் விசேடத்துவம்
01	தொழில்நுட்ப ஆய்வுகூடத்தில் இருக்கும் வசதிகளை புதுப்பித்தல் WP/CO/ஆனந்தா கல்லூரி WP/ED/PRO1/TEDP/05	3,000.00	50,000.00 அல்லது 25,000 ரூபா பண வைப்பு	120	2,818,498.95	C 7 மற்றும் C 8
02	தொழில்நுட்ப ஆய்வுகூடத்தில் இருக்கும் வசதிகளை புதுப்பித்தல் WP/CO/ஆனந்தா மகளிர் வித்தியாலயம் WP/ED/PRO1/TEDP/06	3,000.00	32,000.00 அல்லது 16,000 ரூபா பண வைப்பு	120	1,615,029.15	C 7 மற்றும் C 8
03	தொழில்நுட்ப ஆய்வுகூடத்தில் இருக்கும் வசதிகளை புதுப்பித்தல் WP/CO/பாதுகாப்புக் கல்லூரி WP/ED/PRO1/TEDP/07	3,000.00	32,000.00 அல்லது 16,000 ரூபா பண வைப்பு	120	1,634,365.00	C 7 மற்றும் C 8
04	தொழில்நுட்ப ஆய்வுகூடத்தில் இருக்கும் வசதிகளை புதுப்பித்தல் WP/CO/டீ.எஸ். சேனாநாயக்க கல்லூரி WP/ED/PRO1/TEDP/08	4,000.00	200,000.00	210	11,344,770.20	C 5 மற்றும் C 6

2. கேள்வி கோரலானது நடைமுறையானது தேசிய போட்டி கேள்வி கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் என்றாலும் இந்தப் பெறுகைகளின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைவாக இருப்பதானால் 04/2016(iii) அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA முன்னுரிமை பிரயோகிக்கப்படும் மற்றும் 03/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையும் ஏற்புடையதாகும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் அடங்காதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - 01, 02 மற்றும் 03ஆம் இலக்க ஒப்பந்தங்களுக்கு CIDA நிறுவனத்தின் கட்டிட வேலைகள் துறையில் C7 மற்றும் C8 தரத்தில் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - 04ஆம் இலக்க ஒப்பந்தத்திற்கு CIDA நிறுவனத்தின் கட்டிட வேலைகள் துறையில் C5 மற்றும் C6 தரத்தில் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையாக தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்கும் தகவுத் திறன்கள்,
   - கேள்விதாரர்கள் இனையொத்த தன்மையைக் கொண்ட கட்டிட நிர்மாண செயற்றிட்டம் ஒன்றை (01) பிரதான ஒப்பந்தக்காரராக பூர்த்தி செய்திருத்தல் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் ஆகக்குறைந்தது 03 வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த ஐந்து வருடங்களில் சராசரி வருடாந்த புரள்வாக பின்வரும் தொகைகளுக்குக் குறையாத வகையில் விலைக்கோரல் முடிவுறுத்தப்படும் நாளில் நிர்மாண வேலைகளைச் செய்திருத்தல் வேண்டும்.
     - ஒப்பந்த இலக்கம் 01 - 5.0 மில்லியன் ரூபா
     - ஒப்பந்த இலக்கம் 02 மற்றும் 03 - 3.3 மில்லியன் ரூபா
     - ஒப்பந்த இலக்கம் 04 - 20 மில்லியன் ரூபா
   - ஆகக் குறைந்த திரவச் சொத்து அல்லது மற்றும் கடன் வசதியானது பிரத்தியேகமாக இந்தத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட எந்தவொரு முற்பணம் தவிர்த்து பின்வரும் தொகைகளுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
     - ஒப்பந்த இலக்கம் 01 - 2.0 மில்லியன் ரூபா
     - ஒப்பந்த இலக்கம் 02 மற்றும் 03 - 1.2 மில்லியன் ரூபா
     - ஒப்பந்த இலக்கம் 04 - 4 மில்லியன் ரூபா
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிகத் தகவல்களை பத்தரமுல்ல, கடுவளை வீதி, இல. 89, ரன்மகபாய, (மே.மா) மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து 0112875727 எனும் தொலைபேசி இலக்கம் அல்லது 0112875726 எனும் தொலைநகல் இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் பின்வரும் முகவரியில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. கேள்விதாரர்கள் பத்தரமுல்ல, கடுவளை வீதி, இல. 89, ரன்மகபாய, (3ஆம் மாடி பெறுகைப் பிரிவு) மேல் மாகாண கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூல வேண்டுகோளொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரிலும் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியும் 2022-01-24ஆம் திகதி முதல் 2022-02-11ஆம் திகதி வரையில் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். பணக் கொடுப்பனவை இந்த அலுவலகத்தின் கணக்காளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
7. நகல் பிரதிகளுடனான கேள்விகளை 2022-02-14ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரியிலுள்ள பத்தரமுல்ல, கடுவளை வீதி, இல. 89, ரன்மகபாய, மாகாண கல்விப் பணிப்பாளர் (மே.மா) அவர்களுக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது கேள்வியில் பங்குபற்றுவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதியொருவர் கேள்விகள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
8. கேள்விகள் 77 (எழுபத்தேழு) நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்
